


# தமிழரசு

பிப்ரவரி 1-15, 1998 ரூ.3





தூய
பட்டு

தூய
சரிகை




ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| சென்னையில் குடியரசுநாள் விழா | ... | 2 |
| தமிழறிஞர் அ.ச.ஞா. நேர்காணல் | ... | 3 |
| திரைப்பட விருது வழங்கும் விழாவில் - முதலமைச்சர் கலைஞர் உரை | – | 9 |
| 'கத்தாளங் கருங்கப்' | – | 12 |
| சாத்தான் - சாஸ்தா - ஐயனார் | – | 17 |
| எங்கள் ஊர்ப் பிரச்சினை | – | 21 |
| சேவலும் சேயிழையும் | – | 25 |
| சங்க காலத்தில் கல்வி | – | 28 |
| தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் | – | 30 |
| எதிர்முனை (சிறுகதை) | – | 33 |
| மிச்சமிருக்கும் ஓரிரு தளிர்கள் (கவிதை) | – | 38 |
| ஊரக வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கத்தில் தமிழகம் முதலிடம் | – | 40 |
| புதுப்பொலிவு பெற்றுள்ள அறிஞர் அண்ணா நினைவிடம் | – | 42 |
| தமிழர் நேசன் | – | 45 |



தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2029


தை - மாசி

பிப்ரவரி 1 - 15, 1998

மலர் : 28 இதழ் : 15

விலை ரூ.3/-





# சென்னையில் - குடியரசுநாள் விழா


இந்தியாவின் 49வது குடியரசு நாள் விழா, சென்னை மாநகரில் 26.1.98 அன்று வண்ணமுறக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி, மெரீனா கடற்கரையில் உள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலை சிறப்புற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

அதையொட்டிச் செல்லும் கடற்கரைச் சாலையாம் காமராசர் சாலையின் இருமருங்கும், இந்த இனிய விழாவின் எழில்காண இதுவரை இல்லாத அளவிற்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள்.

அண்ணல் காந்தியார் சிலை அருகே, விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களை, அரசு தலைமைச் செயலாளர் (பொறுப்பு) திரு.ஏ.பி.முத்துசாமி அவர்கள் வரவேற்றார்.

மேதகு தமிழக ஆளுநர் செல்வி **எம்.பாத்திமா பீவி** அவர்களை இன்முகத்தோடு வரவேற்றார் முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள்; முப்படைத் தளபதிகளையும், தமிழகக் காவல் துறைத் தலைவர் (டி.ஜி.பி) எஃப்.சி.சர்மா, கூடுதல் தலைவர் வி.குமாரசாமி, சென்னை மாநகரக் காவல் துறை ஆணையர் (பொறுப்பு) பி.காளிமுத்து ஆகியோரையும், மேதகு ஆளுநருக்கு முதலமைச்சர் அறிமுகம் செய்து வைத்தார்.





சரியாக அன்று காலை 8 மணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில், மேதகு ஆளுநர் அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்தார்; தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

அப்போது விண்ணில் பறந்த தேசியக் கொடி கட்டப்பட்ட இரண்டு ஹெலிகாப்டர்கள் மலர் மாரி பொழிந்தன.

அதன் பின்னர், அலங்கார மேடைமீது நின்ற மேதகு ஆளுநர் அவர்கள் - முப்படையினரின் அணிவகுப்பையும், மற்றுமுள்ள பாதுகாப்புப்படை, காவல்துறையினர் அணிவகுப்பு மரியாதையையும் ஏற்றுக் கொண்டார்.

பின்பு, அம்மேடைக்கு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் - வீரதீரச் செயல்கள் புரிந்த 6 பேருக்கு 'அண்ணா வீரப் பதக்கம்' வழங்கிச் சிறப்பித்தார். பிறகு சுதந்திரப் போராட்டத் தியாகிளான - திரு எஸ். அருணாசல நாடார், திரு மீனா கிருஷ்ணசாமி, திரு டி.செங்கல்வராயன், திரு. எம்.கே.எம்.அமீர் கம்சர், திரு எல்.கிருஷ்ணசாமி பாரதி ஆகியோருக்குக் கதராடை அணிவித்துச் சிறப்புச் செய்தார்.

## சென்னையில் பிரதமர்

**2.2.98** அன்று சென்னைக்கு வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.**ஐ.கே. குஜ்ரால்** அவர்கள் - காந்தி மண்டபம், காமராசர் நினைவகம், ராஜாஜி நினைவாலயம், அண்ணா சதுக்கம், எம். ஜி.ஆர் சமாதி ஆகிய இடங்களுக்குச் சென்று மலர் வளையம் வைத்தும், மலர் தூவியும் நாடு போற்றும் அந்த நல்லோர்களுக்கு மரியாதை செலுத்தினார்; அண்ணாசாலையில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு மாலையணிவித்து அஞ்சலி செய்தார்.

அப்போது - மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர், திரு. ஜி.கே. மூப்பனார், மத்தியத் தொழில் துறை அமைச்சர் திரு.முரசொலிமாறன் - மற்றும் தமிழக அமைச்சர்களும் உடன் வந்தார்கள்.

### விண்ணில் நடந்த விமானங்களின் சாகசம்

இதனையடுத்து - பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகளின் வகைவகையான ஆடல் பாடல் நிகழ்ச்சிகளும், பல்வேறு அரசுத்துறைகளின் அலங்கார வண்டிகளும் அணிவகுத்துச் சென்றன.

இது - சுதந்திரப் பொன்விழா ஆண்டில் வரும் 'குடியரசுநாள் விழா' என்பதால், முன் எப்போதும் இல்லாதபடி - 6 விமானப்படை விமானங்கள் விண்ணில் பறந்து, காண்போரைக் கவரும் சாகச நிகழ்ச்சிகளை நிகழ்த்திக்காட்டின.

இவ்விழாவில் - அமைச்சர் பெருமக்களும், அரசு உயர் அதிகாரிகளும், பொதுமக்களும் முன்னெப்போதும் இல்லாதவாறு மிகுந்த உற்சாகத்தோடு கலந்துகொண்டார்கள்.

*-பி.எல்.ஆர்.*



# தமிழறிஞர் அ.ச.ஞா. - நேர்காணல்

கல்லூரி மொழிபெயர்ப்புத் துறை, அகில இந்திய வானொலி நிலையம் என்று பல்வேறு துறைகளிலும் பணியாற்றியவரும், கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கும் மேலாகத் தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்குப் பணியாற்றி வருபவருமாகிய தமிழ்ச் சான்றோர் திரு.அ.ச.ஞா. அவர்களைத் 'தமிழரசு' நேர்காணலுக்காக அவரது இல்லத்தில் 'வித்தியாசம்' சிற்றிதழ் ஆசிரியர்களில் ஒருவரும், நவீன இலக்கியவாதியுமான திரு எஸ்.சண்முகம் அவர்கள் சந்தித்தார். அப்போது அவர்களுக்குள் நடந்த உரையாடல் இது.

**கேள்வி:** தமிழ் இலக்கியத்தைப் படித்துவிட்டு ஆங்கிலத் திறனாய்வு முறையைப் படித்தபோது இரண்டையும் பொருத்திப் பார்க்கத் தோன்றியதால் இலக்கியத் திறனாய்வு எழுதினீர் களா?

**பதில்:** இந்த இரண்டுமே இல்லை. படிச்சது விஞ்ஞானம், அப்புறம் கடைசி 1½ வருடம் தமிழ். பச்சையப்பன் கல்லூரியிலே பேராசிரியர் பணிக்கு வந்தபோது ஒரு சிக்கல் ஏற்பட்டது. 1944-லிலே பி.ஒ.எல் (ஹானர்ஸ்) வகுப்பிலே 'லிட்டரெரி கிரிட்டிசிஸம்' என்ற ஒரு சப்ஜக்ட் வைச்சிருந்தாங்க. அதை யார் எடுக்கிறது என்று பார்த்து, உடனே அதைக் கந்தசாமி முதலியார் "நீங்க எடுத்து நடத்துங்க" என்றார்.

தமிழ் இலக்கியம் படிக்கிறவங் களுக்குத் திறனாய்வு என்கிற வார்த்தை இல்லை. அது கொடுக்கப் பட்ட காரணத்தினால அது சம்பந்தமா ஆங்கில நூல்களைப் படிக்க ஆரம்பிச்சேன். ரொம்ப தீவிரமா இரண்டு வருடம் ஆழ்ந்து படிச்சேன். முதல் வருடம் ஏறத்தாழ ஆங்கிலத் திலே இருக்கிறத அப்படியே தமிழ்ல சொல்லிக் கொண்டிருந்தேன்... அது எனக்கே புடிக்கல. அவங்க சொல்ற திறனாய்வு முறைகளுக்கும் அந்தத் தலைப்புகளுக்கும். அதிலே சொல்லப்பட்ட பொருட்களை அப்படியே தமிழ் இலக்கியத்தில ஏற்றுக்கொள்ள முடியாதுன்னு தோனிச்சு.

அவங்க "யுனிவர்சல்"-னு சொன்னாங்க. அது சரியில்ல என்ற ஒரு எண்ணம் தோன்றிற்று. அதைப் பற்றி யார் கிட்டேயும் டிஸ்கஸ் பண்ணுவதற்கு வாய்ப்பில்லாமல் இருந்தது. அப்ப கி.வா.ஜெகநாதன் என்னுடைய நண்பர். அவர், இது மாதிரி புதுசா ஒண்ணு பண்றீங்களே, அதை கலைமகள்ல எழுதுங்க என்றார். 1943-44ல் எழுத ஆரம்பிச்சேன். 1947-48ல் அது முழு வடிவம் பெற்று, நூலாகக் கொண்டு வர முடிந்தது. அப்படி கலைமகளில் புதுசா எழுதினபோது, பலத்த எதிர்ப்புகள். ஆனந்த விகடன் ஒரு குட்டித் தலையங்கமே எழுதினாங்க. 'திறனாம்! ஆய்வாம்!! அருமையான விமர்சனம் என்கிற வார்த்தை இருக்கிறபோது, ஏன் இந்த அ.ச.ஞா இப்படி புதுசா ஒரு வார்த்தையை உண்டாக்கி நம்ம பிராணனை வாங்குறாரு' அப்படின்னு எழுதினாங்க.

**கேள்வி:** இலக்கணத் திறனாய்வு, இலக்கிய விமர்சனம், தமிழ் மரபாக, இருக்கக்கூடிய உரை எழுதுவது - இவை மூன்றுக்குமுள்ள வித்தியாசம், ஒருமைப்பாடுன்னு நீங்க எதைப் பாத்திங்க?

**பதில்:** இப்ப உரை என்று சொல்வது, கமண்டிரீ-னு சொல்றமே? வேற எந்த உலக இலக்கியத்திலேயும் இந்த மாதிரி கிடையாது. இப்ப எந்த நூலை எடுத்துக் கொண்டாலும் அதற்கு விளக்க உரை, கமண்ட்ரி எழுதுவது இந்த நாட்டிலேதான். ஹோமர் எழுத்துக்குக் கூட கமண்ட்ரி கிடையாது. தாண்டேக்குக்கூட கமண்ட்ரி கிடையாது. திறனாய் வாளர்கள் சில பகுதிகளை எடுத்து வைத்துக் கொண்டு இது எந்த வகையிலே சிறந்திருக்கிறது, காப்பியக் கட்டுக் கோப்புகளுக்கு எப்படிப் பொருத்தமாக இருக்கிறது. அப்படின்னு சொன்னாங்களே தவிர. வரிசையா பாடல்களை எடுத்து வைத்துக்கொண்டு அதற்கு விளக்க உரை எழுதிவருவது என்பது தமிழ் மரபுலதான் இருந்துவந்திருக்கு. வடமொழியிலே உண்டு, இல்லைனு சொல்றதற்கு இல்லை. இப்ப இந்த விளக்க உரை என்று வருவதை எதுல கொண்டு போய் அடக்குறது என்ற ஒரு பிரச்சினை எழுந்தது எனக்கு. அப்ப திறனாய்வு முறையிலே 'அப்பிரிசியேடிவ் கிரிடிசிஸம்'-னு ஒன்னு உண்டு. இதெல்லாம் தொடக்க காலம். 45-கள் வாக்குல 'அப்பிரிசியேடிவ் கிரிடிசிஸம்-னு இருக்கிற பகுதிகளிலே சிறந்த பகுதிகளை எடுத்து வைத்துக் கொண்டு, அதைப் புகழ்ந்து அல்ல, அது எப்படி சிறப்புப் பெற்றிருக்கிறது என்று எழுதுவது. அதுதான் அவங்க சொன்னது. மேலை நாட்டுல. அந்த "அப்பிரிசியேடிவ் கிரிடிசிஸம்ங்கறது" ஒரு வகையில நமக்கு ரொம்பப் பொருத்தமாக இருந்தது.

**கேள்வி:** உரைகளிலே இலக்கணம் சார்ந்த சில குறிப்புகள் வருது. இப்ப மேலை நாடுகளிலே, அந்த மாதிரி இலக்கணக் குறிப்புகள்...... ?

**பதில்:** கிடையாது, கிடையாது. காரணம் ஒன்றைப் புரிஞ்சுக்கிடனும், இந்தத் தமிழ் மொழியை பொருத்த மட்டிலே ஒரு தனிச் சிறப்பு. தொல்காப்பியன் சொன்னான், 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று சொன்னான். பொருள் குறித்தன என்றால் It Implies that என்று சொல்கிறோமே? அதுபோல அந்தச் சொல்லுக்குப் பொருள் கிடையாது. பொருளாகப் பெரியவங்க வைச்சாங்க. அதனால பொருள் குறித்தன என்ற சொல் இதைத்தான் குறிக்கும் என்று

பெரியோர்களெல்லாம் முடிவுன்னு ஒத்துக்கிட்டாங்க.

**கேள்வி:** தொல்காப்பியத்திலே 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்று சொல்லப்படுகிற அந்தப் பொருள் என்பது அர்த்தத்தைக் குறித்தது என்று பலர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துள்ளார்கள். அதைப்பற்றி...

**பதில்:** பொருள் என்று சொல்ல முடியாது. குறித்தல் என்றும் சொல்ல முடியாது. ஆனால், *Signifies* என்று கொள்ளலாம்.

**கேள்வி:** மேற்கத்திய இலக்கியத் திறனாய்வு அளவுகோல்கள் தமிழைப் பிரத்யேமாகப் புரிந்து கொள்ள எவ்வாறு உதவின ?

**பதில்:** அது... பேருதவி பண்ணியது. அதற்கு முன்னால தனிப்பாடலோ, காப்பியமோ அல்லது தொடர்நிலைச் செய்யுளோ, நாம பார்க்கிற பார்வை வேறா இருக்கும். சொல்லமைதி, கற்பனை வளம், இயற்கை என்பதைத்தான் பார்த்தோமே தவிர, அந்த ''ஸ்டரக்சர்'' இருக்கிறது அல்லவா. வடிவமைப்பு - அந்தக் கம்பனுடைய காப்பிய அமைப்பை முதன் முதல்ல *architectonics* என்ற தலைப்பில் பண்ணியவர் வ.வே.சு. அய்யர். அவர் ''சீரிஸியன்'' இலக்கியத்தைப் படித்துவிட்டு ஹோமரை யெல்லாம் படிச்ச காரணத்தினாலே, கம்பனுடைய காப்பியக் கட்டுக் கோப்பு எப்படியெல்லாம் நெளிவு சுளிவுகளோடு இருக்கிறது என்று எழுதியவரு அவர்தான். எனக்கு அந்த மேலை நாட்டுத் திறனாய்வு முறையிலே காப்பியத்தை முழுமையாக வைச்சுப் பார்க்கிறது, அப்புறம் துண்டு துண்டாகப் பார்க்கிறது ஆகியவை எனக்குப் பிடிச்சது.

**கேள்வி:** சங்க இலக்கியத்தைப் பற்றி...

**பதில்:** `சங்க இலக்கியத்தைப்பற்றி, இப்ப ஒரு குறிப்பிட்ட துறை, கிளை இருக்கிறது. தனித்தனி கவிதையா எடுத்துப் பாத்தீங்கன்னா, ஒன்று குறிஞ்சி, முல்லை, மருதம்னு. அதற்குள்ளே முதல் கரு - உரி, இருக்குதான்னு பார்த்துப் பார்த்து அவ்வளவுதான்னு விட்டுட்டோம். அந்தக் கருவே என்ன சொல்லுது என்கிறதை மன்னிக்கனும் - *including your* நச்சினார்க்கினியர் செய்யல. இந்தக் காரணத்தினாலே இதைச் சொல்றதுனாலே. அது இந்தத் திணையாச்சு. இந்த விளக்கத்தைச் சொல்லியிருக்கிறது. இந்த இயற்கை வர்ணனை இருக்கிறது என்று சொன்னானே தவிர, அந்தக் கவியை முழுவதுமா வச்சு என்னசொல்லுச்சு என்று சொல்லலே. இந்தக் குறை நச்சினார்க்கினியர்கிட்ட ஆரம்பிக்கல. வியாக்யான கர்த்தாக்ககிட்ட ஆரம்பிச் சாச்சு.

**எழுச்சி கொண்டவன் வீரன்; தியாக உணர்வுடன் போரிடுபவன் மாவீரன்; வெறி உணர்ச்சியால் ஆட்டி வைக்கப் படும் நிலையிலே போரிடுபவன் மாவீரன் ஆகான் - மனித மிருகம் ஆவான் !**

**- அறிஞர் அண்ணா**

**கேள்வி:** நீங்க சிலப்பதிகாரம் பத்தியும் எழுதியிருக்கீங்க, சிலப்பதிகாரத்திலே கோவலனுடைய வீழ்ச்சியும் *Tragedy* எழுதியிருக்கீங்க ?

**பதில்:** ஆமாம். *Tragedy* என்ற சொல்லுக்கு அவலம்ங்கிற சொல்லை நான்தான் உருவாக்கினேன். அது அவலம்-னா ஒரு மனிதன் (கோவலன்) வீழும்போது அவனோடு அத்தனைப் பண்புகளும் வீழ்ந்து விடுகின்றன. அப்படி ஒரு மனிதனுடன் அவனது நற்பண்புகள் வீழ்வதைக் காப்பிய அவலம் *Epic-Tragedy* என்று சொன்னேன்

**கேள்வி:** சிலப்பதிகாரத்திலே கடைசியிலே கண்ணகி தனியாக நிற்கிறாளே அந்தத் தனி-நிலையை *Soliliquy* (சாலிலிக்வி) என்று சொல்லலாமா ?

**பதில்:** இல்லை, இல்லை; அது பைத்தியக் காரத்தனம். அந்த மாதிரி ஒரு வேளை வந்ததுனா (சாலிலிக்வி) அது *implied communication*. இங்கே அதுவே கிடையாது. தன்னுடைய உணர்ச்சியை மனம் போன போக்கில் பேசிக்கிட்டுப் போய் மலையிலே ஏறி நிற்கும்போது, 'ஒரு முலை இழந்த திருமாபத்தினி நீ - யார்னு' கேட்குறாங்க. அந்தப் புலவர்கள். அதற்கு 'மதுரையோடு அரசு கேடுற வந்த தீவினை ஆட்சியே நான்'னு சொல்கிறாள். சாலிலிக்வின்னா எதிரே ஆள் இல்லாமல் இருக்கணும்.

**கேள்வி:** நீங்க பல இலக்கியக் கோட்பாடுகளை வைத்து தமிழ் இலக்கிய விமர்சனம் பண்ணிகிட்டு வந்தீங்க. இப்போ நவீன இலக்கிய விமர்சனக் கொள்கைகள் நிறைய வந்திருக்கு. அதுல *Reader response theory* மற்றும் முக்கியமாகப் பின் நவீனத்துவம் (*Post Modernism*) என்பதில் *"incommensurable"* என்று சொல்கிறார்கள். அதுபோலத் தமிழ் இலக்கியத்திலே நீங்க பார்த்ததைச் சொல்லுங்களேன் ?

**பதில்:** இலக்கியத்திலே சில உணர்ச்சிகளுக்குச் சொல்லினால் வடிவம் கொடுக்க முடியாது. சிலப்பதி காரத்திலே ஒரு அற்புதமான இடம் இருக்கிறது. கோவலன் இறந்து விட்டான் என்பதைச் சொல்ல வருகிறாள் ஒரு தோழி. அவளோ "சொல்லாடாள் சொல்லாடா நின்றாள் அந்நங்கைக்குச் சொல்லாடும் சொல்லாடும் தான்'' அவளோ கடைவீதிக்குப் போனவ. இதை *incommensurable* பண்ணியிருக்கிறார் இளங்கோ.

**கேள்வி:** நவீன இலக்கிய விமர்சனப் போக்கிலே இப்ப மேலை நாட்டில் புதிய கோட்பாடுகள் வரும்பொழுது அவர்களுடைய பழைய மரபு சார்ந்த மொழிக் கோட்பாடுகளோடு வளர்க்கிறார்கள். அதுபோலத் தமிழிலே இருக்கக்கூடிய நம் மரபான அகம் - புறம் என்ற வகைப்பாடுகளை பிரத்யேகமாக முன்னிறுத்தி ஒரு இலக்கியத் திறனாய்வு முறையை வளர்க்க இயலுமா ?

**பதில்:** முடியும். பண்ணலாம். ஆனால் அது 12ஆம் நூற்றாண்டோட செத்துப்போச்சு. அதுக்கு அப்புறம் யாரும் பண்ணல. இதைத் தொடர்ந்து வந்திருக்குமேயானால் அது நீங்க சொல்கிற ஆராய்ச்சிக்குப் பொருத்தமா இருக்கும். இப்ப சங்ககால இலக்கியத்திற்கு மட்டுமே வைத்து 'ஒரு தியரி ஆப் லிட்ரேச்சர்' (*Theory of Literature*) பண்ணனும்.

**கேள்வி:** விமர்சனம் அல்லது 'திறனாய்வு'ங்கறதும் தியரி ஆப் லிட்ரேச்சர் என்பதும் ஒன்றுதான்னு சொல்லலாமா ?

**பதில்:** திறனாய்வு வேற, தியரி ஆப் லிட்ரேச்சர் வேற...

**கேள்வி:** அகம் - புறம் கோட்பாடு என்பது

**பதில்:** இந்த மாதிரி வருகிறதும், கிரிடிசிசஸ்துல ஒரு பகுதிதான். திறனாய்வுலேயும் ஒரு பகுதிதான் அது. ஆனால் அதை ஏன் செய்யலேனா, அது என்னைக்கோ போயிடுச்சு. இப்ப அதை யாரு இழுத்துப் போட்டு செய்துகொண்டிருப்பார்கள்? அத இப்பச் பசங்களுக்கு எளிதாக சொல்லித்தர வேண்டும். அதுக்குமேல வாத்தியாருக்குத் தெரியாது. இந்த மாதிரி பெரிய *Broad structure*-ஆக அகம் - புறம் குறித்தும் இலக்கிய வாழ்வு முறையோடு தொடர்ந்து இருக்கிறது என்பது ஒரு பெரிய ஆராய்ச்சி. அதை யாரும் பண்ணல.

**கேள்வி:** அகம் என்பதை எவ்வாறு புரிந்துகொள்வது?

**பதில்:** இப்ப 'அகம்'னா புருஷன் பொண்டாட்டினு அர்த்தத்துக்கு வந்துட்டோம். அது இல்லை. வள்ளுவன் எச்சரிக்கை (*Warn*) பண்ணிட்டான். கடைசியா வந்தவன் அவன். 'மலரினும் மெல்லிது காமம்'. *It is a Mental Status*. காமமென்பது சங்க காலத்திலேயே இருக்கு. காமம் ''காமமென்ப'' என்று சங்க இலக்கியத்திலே சொல்லியிருக்கான். அதையே திருநாவுக்கரசரும் விஸ்தாரமா பாடினார் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டு, தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள்' இதுதான் - காதலின் கடைசி நிலைதான் என்பது அறவே அழிந்து போகிறது.' ஆகவேதான் இவுங்க பாடினது வெள்ளைக்காரங்களுக்குப் புரியல. அவன் என்ன பண்ணிட்டான். இத 'லவ் பொயட்ரி'னு சொல்லி, அது ரொம்பக் கேவலம். திருவாசகத்திலும் கூட அம்பாளைப் பற்றி வந்த வரிகளைப் போப் மொழிபெயர்ப்பு பண்ணிணதுல அந்த வரிகளை அப்படியே 'பிளாங்கா' விடுவாரு.

**கேள்வி:** ஆண்டாள் பாட்டிலே வரும், தலைவி தலைவனுக்காக ஏங்குகிற தன்மை அது; ஒரளவுக்கு அகத்துறை சம்பந்தப்பட்டதா இருக்குமல்லவா?

**பதில்:** ஒரளவுக்கு அல்ல. முழுவதும், அகத்துறைதான். இங்கே அவன் என்ன பண்ணிட்டான். புருஷோத்தமன் ஒரு ஆம்பிள்ளைதான் உண்டு. அவன்தான் இறைவன். மற்ற எல்லா உயிர்களும் பெண்கள். ஆகையினாலே அது அகத்துறைப் பாடல்தான்.

**கேள்வி:** இப்ப, மேற்கத்திய திறனாய்வுக் கோட்பாடுகளை நீங்க தமிழ்ல பொருத்திப் பார்த்தீங்க. இப்ப சமீபகாலமாகத் தமிழ்ல வந்திருக்கக் கூடிய அமைப்பியல்-பின் நவீனத்துவம் போன்ற 'தியரிகளை'த் தமிழ்ல பொருத்தி செய்யும் திறனாய்வாளர்களுக்கு எதை மனதில் வைத்துப் பார்க்கணும்னு விரும்புறீங்க?

**பதில்:** முக்கியமா, இலக்கிய பேஸ் இருந்தாத்தான் இதைப் பண்ண முடியும். ஏன்னா, இந்த அமைப்பு முறையே வேற. *It has nothing to do with even sanskrit.* இந்த வளர்ச்சியே தனி. இங்கே உரை எழுதினவங்க என்ன பண்ணிட்டாங்க, அதிலேயே ஈடுபட்டாங்க. அதனால் *Objective*வா பார்க்கிற பழக்கம் போயிடுச்சு. வெள்ளைக்காரனுடைய *Criticism* படிச்ச பிறகுதான் *Objective*வா பார்க்கிற பழக்கம் எனக்கு ஏற்பட்டது.

**கேள்வி:** தமிழில் மரபு வழியா வருகிற இலக்கியம் (*Canon*) பற்றிப் பேசும்போது, தமிழுக்கு என்று ஒரு தனி அறிதல்முறை *Cognition* இருக்கு என்று நினைக்கறீங்களா?

**பதில்:** கண்டிப்பாக இருக்கு...

**கேள்வி:** அதனுடைய பிரத்யேகத் தன்மை என்னன்னு நினைக்கிறீங்க?

**பதில்:** அதாவது வாழ்க்கை முறையை இயற்கையோடும், பரம்பொருளோடும் இணைத்துக் கொண்டே இருந்தது. அதனால்தான் *Pastral Poetry*னு தமிழ்ல தனியே கிடையாது. இயற்கையைத் தனியா அனுபவிக்கிறது என்பது கிடையாது. இயற்கையே இறைவன் உடைய வடிவம்.

**கேள்வி:** அறிதல்முறை பற்றி சொன்னீங்க. *Pastoral Poetry* தமிழ்ல ஒண்ணுமில்லே. வாழ்வையும் இயற்கையையும் மனிதனையும் பரம் பொருளையும் ஒண்ணா நினைச்சாங்க என்று சொன்னீர்கள். உதாரணத்திற்குச் சங்க இலக்கியத்திலே தலைவன்-தலைவி-தோழி-இயற்கைக் குறிப்பு வைச்சு மனோநிலையைச் சொல்றாப்ல வருகிறதே?

**பதில்:** கவிஞனுடைய சாமர்த்தியம் சொல்லுகின்ற முறையிலேயே அதிலே இறைச்சிப்பொருள், உள்ளுறை என்ற இரண்டும் உண்டு. உள்ளுறை இறைச்சி-ஆக வந்து அதப் படிச்சி கிட்டுப் போறப்ப ஒரு அர்த்தம் இருக்கும். அந்த அர்த்தத்தை விட்டுட்டுப் பார்த்தீங்கன்னா இன்னொரு அர்த்தம் இருக்கும். இதுலே இரண்டு வகை உண்டு. முழுமையா வைச்சுப் பார்க்கிறது இறைச்சினு பேரு. வரிக்கு வரி பார்ப்பது உள்ளுறைனு பேரு. ஆக உள்ளுறை என்பது வரிக்கு வரி இறைச்சி என்பது முழுமையாகக் கொள்வது.

**கேள்வி:** சைவ சமயத்தைப்பற்றி விரிவாகத் திறனாய்வு செய்து நெடிய பங்களிப்பைச் செய்திருக்கிறீங்க. அதுல சைவமதம் அல்லது சைவ இலக்கியம் என்பது தமிழர்களின் அறிவுத் தொகுப்பு *Epistemology* என்று நினைக்க இடமுண்டா?

**பதில்:** *Epistemology*ன்னு வார்த்தை சொல்லுறீங்க. அறிவுத் தொகுப்பா? அனுபவத் தொகுப்பா? வாழ்க்கைத் தொகுப்பா? இது அறிவினாலே சிலவற்றை அறிகிறார்கள். அது தனியே இருக்கும்போது *Epistemology* - அதுதான் திருக்குறள் இருக்கிறதே!

**கேள்வி:** சமஸ்கிருத எதிர்ப்பு அல்லது சமஸ்கிருதத் தொடர்புடன் கூடிய மணிப்பிரவாளம். இந்த இரண்டு போக்கும் தமிழ்ல இருக்கு. தமிழ் - சமஸ்கிருதம் என்பதை மறுத்துவிட்டு 'ஒரு மொழி அல்லது கலாச்சாரம்',

> **இலக்கியம் என்பது நாகரிகத்தைப் புகட்ட வேண்டும்; மக்களிடம் உயரிய குணங்களைப் புகுத்துவதாக இருக்க வேண்டும்.**
>
> **- தந்தை பெரியார்**

இன்னொரு மொழி, கலாச்சாரத்துடன் பரிவர்த்தனை அற்று இருக்க முடியுமா ? தனித்துவம் தனித்தமிழ் ஆகியவை ?

**பதில்:** தனித்துவம் என்பது possibilityயே இல்லை. இன்னும் ஒன்று. நீங்க நினைக்கிற மாதிரி தொல்காப்பியன் காலத்திலே ஏதோ தனித்தமிழ் வந்தது என்கிறது ஏதோ படிக்காதவன் பேசுற பேச்சு. தொல்காப்பியத்துல கலந்திருக்கிறது மாதிரி வேறு எதிலேயும் கலப்படம் இல்லை.

ஒரு வடமொழிச் சொல்லை எடுத்துத் தமிழ்ல பயன்படுத்துன - தற்பவம், தற்சமம்னு எப்ப இலக்கணம் பண்ணிட்டானோ What does it indicate? அவ்வளவு கலந்து போச்சுனு அர்த்தம். வேற கதையெல்லாம் அடிக்க முடியாது.

இன்னொன்று, வடமொழி யாருது ? நீங்களாகவே கற்பனை பண்ணிட்டீங்க ஆரியன் - திராவிடன்னு சொல்லிட்டு ஒரு மண்ணாங்கட்டியும் இல்ல. இன்றைக்கு வடமொழியில மிகச் சிறந்ததுனு போற்றக்கூடியது சங்கருடைய ஃபிலாசபி, உண்டா ? இல்லையா ? அப்புறம் இராமனுஜர் ஃபிலாசபி, விசிஸ்டாத்வைதம், இந்த இரண்டையும் பண்ணுனவன் யாரு ? தமிழன்தான், தெரியுதா... இம்... ஒருத்தர் ஸ்ரீபெரும்புதூர் இன்னொருவர் காலடிங்கிறது. மலையாளமும் இல்ல, சங்கரன் காலத்துல 8ஆம் நூற்றாண்டுல மலையாளம்னு ஒன்று தனியா இல்ல. கொடுந்தமிழ் நாடுன்னு பேரு. அப்புறம் என்ன கேடு.

**கேள்வி:** கால்டுவெல் சொல்ற திராவிடர் மொழி திராவிடர் இலக்கண இலக்கியம்.

**பதில்:** அது உண்மை, அத மறுக்க முடியாது. ஏன்னா இது வேற மொழி. அது வேற மொழி. அத மறுக்கவே முடியாது. ஆனால் இந்த இரண்டும் கலந்தது என்பது தொல்காப்பியன் காலத்துக்கு முன்னாலேயே வந்தாச்சு.

**கேள்வி:** தமிழுக்கும் வடமொழிக்கும் ஏற்பட்ட பரிவர்த்தனையிலே தமிழுக்கு நன்மை விளைந்திருக்கிறது என்று நினைக்கிறீர்களா ?

**பதில்:** அதுல சந்தேகம் இல்ல. அதுமாதிரி நம்மளால வடமொழியும் வளர்ந்திருக்கு. அது (Double Reflection Theory) இரட்டைப் பிரதிபலிப்பு தியரி என்று விமர்சனத்தில் உண்டு.

**கேள்வி:** இந்த இரட்டைப் பிரதிபலிப்புத் தன்மையை வைத்து பார்க்கும்போது உதாரணத்திற்கு உமறுப் புலவருடைய சீறாப்புராணம், வீரமாமுனிவரின் தேம்பாவணியும் எப்படி ?

**பதில்:** உமறுப்புலவர் திருநெல்வேலி சீமையை வைச்சுகிட்டுத்தான் அவரு அரேபியாவைப் பாடுறாரு. தேம்பாவணியிலேயும் அந்தத் தன்மை வரத்தான் செய்யும்.

**கேள்வி:** அது தமிழ்க்காப்பியம்தான்.

**பதில்:** ஆமாம், அதை யாரும் மறுக்க முடியாது. அரேபியாங்கிறது ஒரு கற்பனை நாடுன்னு (Imaginary land) நினைச்சுகிட்டுப் போங்களேன்.

**கேள்வி:** ஒரு குறிப்பிட்ட மொழி பேசுகிற குழு மக்களுடைய வாழ்க்கையைத் தெரிஞ்சுக்க, அவர்களுடைய இலக்கியம் வழியாகத்தான் அறிஞ்சுக்கிடனும். அந்த இலக்கியம், மொழிவழி யாகத்தான் வருகிறது. அப்படியானால் மொழி என்பது மிக முக்கியமானது. ஒரு இனத்துக்கு, அது Linguistive archive சொல்றது அதுதானே ?

**பதில்:** ஆமாம் இலக்கியம் மொழிவழியாகத்தான் வரமுடியும். Each has its own Linguistive archive.

**கேள்வி:** ஒரு இனத்திற்கு மொழி நினைவுன்னு ஒன்று உண்டுங்களா ?

பதில்: கண்டிப்பா உண்டு. அத மறுக்க முடியாது. அதாவது Linguistive memoryனு சொல்றது எதோட அடிப்படைனா கொஞ்ச நாள் வரையில், ஒரு 8-வயது வரையிலே ஒரு இடத்துல வளர்ந்துவிட்டு அதுக்கு அப்புறம் எங்க போனாலும் சரி, இந்த Basic concept போகவே போகாது. அதுதான் மொழி நினைவு.

**கேள்வி:** நவீன இலக்கியத்திலே புதுமைப்பித்தன் சிறுகதையில் முக்கிய மானது. அவருடைய படைப்புகள் பற்றி சொல்லுங்களேன் ?

**பதில்:** கேளுங்க... அது என்ன ஆயிப்போச்சு, என்ன தேடியும் இரண்டு கலைமகள் அம்புடாம போச்சு. சிறு கதையைப்பற்றி எழுதிக்கிட்டு இருக்கும்போது ஒரு தடவை 1½ பக்கம் அது. 'கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்' டிஸ்கஸ் பண்ணி யிருக்கேன். புதுமைப்பித்தன் எப்படிப் பட்டவர் என்கிறதையும் எழுதி யிருக்கேன். கு.ப.ராஜகோபாலன் கூட எப்படியிருந்தாலும் புதுமைப்பித்தன் பக்கத்துல போக முடியாது. புதுமைப் பித்தன் கதையில இன்னொன்று பண்ணினேன். சாப-விமோசனம் "அகலிகை மீண்டும் கல்லானாள்." புதுமைப்பித்தன் நம்ம மரபோடு வாழ்ந்தவர். ●


பசிப்பட்டறையில் கற்கப்படும்,
ஆக்கப்படும் இலக்கியங்கள் மிகப்
பிரபலம் அடைகின்றன.

- சாமுவேல் பட்லர்

கவிதை எழுதும் கலைஞன்
பெருமைக்குரியவன் என்றால்,
ஓர் நிலத்தை உழுவதும் கவிதைதான்.

- ஜார்ஜ் வாஷிங்டன்

# வாசகர் இதயம்



அக்காலத் தமிழர்களின் கடல்வணிகம் எவ்வாறு இருந்தது என்பதை விளக்கிய 'அழகன் குளம்' பற்றி ஓர் அரிய கட்டுரையை வெளியிட்டமைக்கு நன்றி!.

- ப.சுதாகர், நடுப்பட்டி.

பழங்காலத்திய புனையா ஓவியங்கள் குறித்த இலக்கிய வரிகள் கொண்ட 'கார்ட்டூன் கலை வடிவங்கள்' எழுத்தோவியம் மிகச் சிறப்பாக இருந்தது.

- மு.சிவக்குமார், நெடுவயல்.

தமிழிசைச் சங்கத்தில் முதலமைச்சர் கலைஞர் ஆற்றிய உரை மூலம் பல அற்புதச் செய்திகளை அறிந்து கொண்டோம்; தொடர்ந்து இவ்வாறான உரைகளை வெளியிடவும்.

- கா.இராஜசேகர், மங்களபுரம்.

பெயர்ச்சொல்லாகவும், வினைச்சொல்லாகவும் பயன்படுகின்ற 'மொழி' என்ற சொல் தமிழில்தான் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்திய கலைஞர் மூதறிஞரே என்பதை யாரால் மறுக்கமுடியும்?

- பி.ஏ. வதூத், மேட்டுப்பாளையம்.

பல அரிய செய்திகளை வெளியிடும் 'தமிழரசை' நாங்கள் மனமார வரவேற்கின்றோம்.

- எச்.எல்.முகமது ரவி, இராமேஸ்வரம்.

முத்தமிழறிஞர் கலைஞர் ஆட்சியில், புதுப்பொலிவுடன் வெளிவரும் தமிழரசே! நீ வாழ்க; உனது நற்பணி நாளும் தொடரட்டும்!.

- கே. இராசாராமன், பாபநாசம்.

நல்ல பல மருத்துவக் கட்டுரைகளை வெளியிடுகிறீர்கள் - நன்றி, நன்றி, நன்றி.

- ஜி.கே.குருசாமிராஜா, முடீஸ்.

சமீபகாலத்திய 'தமிழரசு', அரசின் சாதனைகளை இலக்கியப் பூர்வமாக அளித்துவருகிறது. வளர்க, வாழ்க.

- க.இராமச்சந்திரன், சாத்தூர்.

'சுதந்திரப் போராட்டத் தியாகிகள்' பற்றிய கட்டுரையை மாவட்ட வாரியாகப் படங்களோடு தாங்கள் வெளியிட்டுவரும் ~~மகத்தான~~ தங்கள் பணிக்கு, எமது சுதந்திரத் திருநாள் பொன்விழா ஆண்டு வணக்கம்.

- மட்டப்பாறை மணிமாறன், இராமராசபுரம்.

# "கலையுலகத்திற்குத் தமிழக அரசு தொடர்ந்து பாடுபடும் !"

## திரைப்பட விருது வழங்கும் விழாவில்

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

**1996** ஆம் ஆண்டுக்கான சிறந்த திரைப்படங்கள், சிறந்த நடிகர்-நடிகையர் மற்றும் கலைத்துறை வித்தகர்களுக்கு விருதுகளை வழங்கி **முதலமைச்சர் கலைஞர்** உரையாற்றியதாவது:

தேர்தல் வந்தால் அதற்கு முன்பு இதுபோன்ற திரைப்பட விருது வழங்குகின்ற விழா வருகிறதென்று பஞ்சு அருணாசலம் சொன்னார். அது உண்மையல்ல. நாங்கள் விருது வழங்குகின்ற விழா வைத்தாலே தேர்தல் வந்துவிடுகிறது. அதுதான் உண்மை.




இந்த விருதுகள் வழங்குவதற்காகப் படங்கள் கடந்த ஐந்தாறு மாத காலமாக நீதியரசர் கோகுலகிருஷ்ணன் அவர்கள் தலைமையிலே பார்வையிடப்பட்டு, பரிசுகள் எல்லாம் யார் யாருக்கு என்று வகுக்கப்பட்டு - அந்தப் பட்டியல் எல்லாம் தயாரிக்கப்பட்டு - வெளியிடப்படுகின்ற நேரத்திலேதான் தேர்தல் அறிவிப்பு வந்தது. இதுவும் ஒரு தேர்தல் தானே ? விருதுகள் யார் யாருக்கு வழங்கப்படுவது என்று தேர்ந்தெடுப்பதும் ஒரு தேர்தல்தானே? அந்தத் தேர்தலும் இந்தத் தேர்தலும் ஒட்டி வந்திருக்கின்றன.

அந்தத் தேர்தலை முன்னிட்டு இந்தத் திரைப்பட விருது வழங்கும் விழா நடைபெறவில்லை. அது தேர்தலுக்குப் பயன்படக்கூடாது என்பதற்காகத்தான் தேர்தல் ஆணையத்தினுடைய விருப்பப்படி—அல்லது உத்தரவுப்படி இன்றைக்கு வழங்கப்பட வேண்டிய எம்.ஜி.ஆர். விருது வழங்கப்படவில்லை. ஏனென்றால் தேர்தலிலே வேட்பாளராக நிற்கின்ற ஒரு அரசியல்வாதிக்கு அரசு விழாவிலே விருது வழங்கக் கூடாது என்று தேர்தல் ஆணையம் விதி வகுத்திருக்கின்ற காரணத்தால் - எம்.ஜி.ஆர். விருது யாருக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதோ அவர் இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொள்ளவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெயரைச் சொல்வது கூட ஒருவேளை தேர்தல் விதிமுறைக்கு விரோதமாக இருக்குமோ என்பதால்தான் அரசியல் நாகரிகத்தோடு பெயரையும் சொல்லாமல் விடுகிறேன்.

### இந்தியன் படத்திற்கு முதல் பரிசு

சிறந்த படங்கள் என்ற வரிசையிலே "இந்தியன்" படம் முதல் பரிசைப் பெற்றிருக்கிறது. நான் அந்தப் படத்தைப் பார்த்தேன். தம்பி கமல் அவர்கள் அதனைப் பார்க்குமாறு எனக்கு அன்புக் கட்டளை பிறப்பித்தார். படத்தைப் பார்த்தேன். அந்தப் படத்தோடு ஒன்றிப் போகின்ற - மெய்மறந்த நிலைக்கு ஆளானேன். அந்தப் படம் முதல் பரிசைப் பெற்றிருப்பதில் வியப்பு ஏதும் இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

"காதல் கோட்டை" நான் பார்க்கவில்லை. வயது 74 - அதனால் பார்க்கவில்லை. அந்தப் படம் இரண்டாவது பரிசு பெற்றிருக்கின்றது. பாராட்டுகிறேன். "புருஷன் பொண்டாட்டி" மூன்றாவது பரிசைப் பெற்றிருக்கின்றது.

### கலைஞானி கமல் - விஜய்காந்துக்கு விருது

"கருவேலம்பூக்கள்" சிறப்புப் பரிசு பெற்றிருக்கின்றது. பெண்களைப் பற்றிய சிறந்த கதை என்பதற்காக மற்றொரு சிறப்புப் பரிசை "கோகுலத்தில் சீதை" என்ற திரைப்படம் பெற்றிருக்கின்றது.

சிறந்த நடிகர் என்பதற்கான விருது கலைஞானி கமல் அவர்களுக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.

அதைப்போலச் சிறந்த நடிகருக்கான சிறப்புப் பரிசு தம்பி விஜய்காந்துக்குக் கிடைத்திருப்பதும் ஆச்சரியமான ஒன்றல்ல.






திரைப்பட இயக்குநர்களின் புரட்சிகரமான படங்களை எதற்கும் துணிந்து தணிக்கைக்குப் பயப்படாமல், தணிக்கையின் காரணமாகவே தடைப்படுத்தப்பட்டாலும் பரவாயில்லை என்ற இலட்சிய நோக்கோடு படம் தயாரிக்கின்ற - இயக்குகின்ற தம்பி ஆர்.கே.செல்வமணி திரைப்பட இயக்குநர்களுக்கு வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த ராஜா சாண்டோ விருதினைப் பெற்றிருக்கிறார்.

நான் முதலிலே குறிப்பிட்டதைப் போல - பஞ்சு அருணாசலம், கவிஞர் கண்ணதாசன் விருதினைப் பெற்றிருக்கிறார்.

அண்ணா விருது தம்பி லியாகத் அலிகானுக்குக் கிடைத்திருக்கிறது. அவர் எழுத்தாளர் என்ற முறையிலே அந்த விருதினைப் பெற்றிருக்கிறார். நானும் ஒரு எழுத்தாளன் என்ற முறையிலே அவர் இந்த விருதினைப் பெற்றதற்காக - பெருமையடைகிறேன்.

**நகைச்சுவை நடிகர் சார்லி -**
**இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான்**

தம்பி சார்லி, நகைச்சுவை எப்படி இருக்கவேண்டும், நகைச்சுவையோடு எப்படி கருத்துக்களை குழைத்துத் தர வேண்டும் என்பதற்கான இலக்கணமாகத் திகழ்ந்த மறைந்த கலைவாணர்-யாருடைய பெயரால் இந்த அரங்கம் அமைந்திருக்கின்றதோ அந்தப் பெயருக்குச் சொந்தக் காரரான கலைவாணர் விருதினைப் பெற்றிருக்கிறார்.

தமிழகத்திலே மாத்திரமல்லாமல், இந்தியத் திருநாட்டிலே மாத்திரமல்லாமல், அனைத்துலக நாடுகளிலும் இசை வெள்ளம் பாய்ச்சிக் கொண்டிருக்கின்ற தம்பி ஏ.ஆர்.ரகுமான் அவர்களுக்கு சிறந்த இசை அமைப்பாளர் என்கின்ற விருது கிடைத்திருப்பது பற்றி உங்களோடு சேர்ந்து நானும் மகிழ்ச்சியடைகிறேன். என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த இயக்குநராக அகத்தியன் விருது பெற்றிருக்கிறார். நான் கேள்விப்பட்டேன் - அவருடைய இயற்பெயர் கருணாநிதி என்பதாக. அவர் ஒருவேளை இரண்டாவது கருணாநிதி வேண்டாம் என்பதற்காகப் பெயரை மாற்றிக் கொண்டாரோ என்னவோ தெரியாது. அவர் சிறந்த இயக்குநர் என்பதற்கான விருதினைப் பெற்றிருக்கிறார்.

சிறந்த உரையாடல் ஆசிரியர் விருதினை விக்ரமன் பெற்றிருக்கிறார். அவருடைய உரையாடல்கள் பலவற்றை நான் சுவைத்து மகிழ்ந்தவன் என்ற முறையில், அவருக்கு என்னுடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**சிறந்த நடிகை சுருதி - சிறப்புப் பரிசு தேவயானி**

சிறந்த நடிகையாக செல்வி சுருதி தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அவருக்கு என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறந்த நடிகை என்பதற்கான சிறப்புப் பரிசை செல்வி தேவயானி பெற்றிருக்கின்றார். அவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறந்த கதாசிரியர் என்பதற்கான விருதை, களஞ்சியம் பெற்றிருக்கிறார். அவருக்கு என் வாழ்த்தும் பாராட்டும் உரியதாகுக.

திரைப்படங்களிலே நல்ல பாடல்கள் எழுதியவர் என்பதற்காகத் தம்பி பிறைசூடன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். என்னுடைய வாழ்த்துக்கள்.

சிறந்த வில்லன் நடிகர் பிரகாஷ்ராஜ் - அவர் இங்கே விருது வாங்கும்போது இந்த அரங்கத்திலே ஒரு ஆனந்தம் - ஒரு மகிழ்ச்சி - ஒரு குதூகலம். காரணம் எனக்குத் தெரியும். எங்கள் இருவருக்கும் தெரியும். ஆம், "இருவரு"க்குத் தெரியும்.

**சிறந்த நகைச்சுவை நடிகர் வடிவேலு**

சிறந்த நகைச்சுவை நடிகராக வடிவேலு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். வடிவேலு நகைச்சுவையாக நடிக்கத் தேவையில்லை. வந்து நின்றாலே போதும் - நகைச்சுவை தானாகவே கிடைக்கும். ஒவ்வொரு அசைவிலும் நகைச்சுவையை வெளிப்படுத்தக் கூடிய நல்ல நடிகர். அவருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரைப்பட உலகத்தில் வெற்றி என்பது அதிலே பங்கு பெறுகிற ஒருவரால் மாத்திரம் கிடைத்து விடுவதல்ல. ஒரு இயக்குநராலோ அல்லது ஒரு நடிகராலோ, ஒரு நடிகையாலோ, அல்லது ஒரு வசனகர்த்தாவாலோ அல்லது ஒரு இசை அமைப்பாளராலோ அல்லது ஒரு பின்னணிப் பாடகராலோ யாராலும் தனிப்பட்ட ஒருவரால் ஒரு வெற்றியைப் பெற்றுவிட முடியாது.

சுதந்திரம் - விடுதலை என்றால், சட்ட சம்பந்தமான சொற்களின் மாற்றம் என்றல்ல வாலிபன் எண்ணுவது. புதிய நிலை - புது அழகு - புது உருவம் - புதிய மகிழ்ச்சி - நாடு புதுக்கோலம் கொள்வது என்றே கருதுகிறான்! உண்மையும் அதுதான்!

- அறிஞர் அண்ணா

உதாரணமாக, ஒரு சிலையை ஒரு சிற்பி வடிப்பதற்கு ஒருவரே போதும். அந்தச் சிற்பிக்கு ஒரு உளி; ஒரு கல் இருந்தால் போதும் - ஒரு சிலையை அந்தச் சிற்பி வடிவமைத்துக் கொடுக்க முடியும். அதுபோல ஒரு ஓவியன் கொஞ்சம் சாந்து, வண்ணம், தூரிகை மாத்திரம் இருந்தால் போதும் - ஒரு ஓவியத்தைத் தீட்டித் தர முடியும். ஆனால், திரைப்படம் என்பது பலருடைய முயற்சியினால், பலருடைய உழைப்பினால் வெளிவர வேண்டியது; வெற்றியினை வழங்கவேண்டியது. அப்படிப்பட்ட அந்தப் பெரும் முயற்சியிலே எல்லோரும் கூடி ஒன்றாக இணைந்து ஒத்துழைப்பு தந்தால்தான் ஒப்பற்ற வெற்றியைப் பெற முடியும் என்பதை அனுபவ ரீதியாக நாம் பெற்றுவருகிறோம்.

**எனது வீடு**

அந்த வகையிலே திரைப்படத் துறையிலே இருக்கின்ற உங்களையெல்லாம் இந்த மண்டபத்திலே காணுகின்ற நேரத்தில் எனக்கு ஏற்படுகின்ற மகிழ்ச்சி, தம்பி கமல் குறிப்பிட்டதைப் போல் - நான் இருந்த வீடு என்று கமல் சொன்னார் - நான் இருக்கின்ற வீடும்தான் - ஏனென்றால் அதற்குள் எனக்குக் கலையுலகத்திலிருந்து ஒய்வு கொடுத்துவிடக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், நாள்தோறும் எழுதிக் கொண்டிருப்பவன் நான். நான் எழுதாத நாளே இல்லை. நான் எழுதுவதே எனக்கு ஏற்படுகின்ற களைப்பைப் போக்கிக் கொள்ளத்தான். அரசியல் துறையிலே எனக்கு ஏற்படுகின்ற கஷ்டங்கள், துன்ப துயரங்கள், களைப்பு, சோர்வு இவற்றையெல்லாம் போக்கிக் கொள்ள காலையிலே உலாவி முடித்த பிறகு நான் கைக்கொள்கின்ற முதல் முயற்சி எழுதுவதுதான். ஒவ்வொரு நாளும் எழுதிக் கொண்டுதான் இருக்கிறேன். எனவே இருந்த வீடு என்று சொல்லாதீர்கள் - இருக்கின்ற வீடு - இதுவும் ஒன்றுதான் என்பதை நீங்கள் தயவுசெய்து மறந்துவிடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறையிலே இருக்கின்ற பிரச்சினைகளைப் பற்றி என்னிடம் தனியாகவும் கூறியிருக்கிறார்கள். தனியாகச் சொன்னால் ஊருக்குத் தெரியாமல் போய்விடும் என்பதற்காக உங்களையெல்லாம் கூட்டி வைத்தும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தத் திரையுலகப் பிரச்சினையை இங்கே பக்கத்திலே அமர்ந்திருப்பவர்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு தீர்த்துவிடலாம். தம்பி கலைஞானி கமலும், நம்முடைய




புரட்சிக் கலைஞர் தம்பி விஜயகாந்தும் இங்கே நான் பேசிக் கொண்டிருக்கின்ற இதே நேரத்திலேயே இருவரும் - ஒருவர் காதிலே ஒருவர் பேசி - இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கண்டிட முடியும். இருந்தாலும் அவர்கள் கருணாநிதி தீர்த்துவைத்தார் என்ற பெருமை, தங்களுடைய அண்ணனுக்குக் கிடைக்கவேண்டுமே என்பதற்காக இதைத் தூக்கி என் தலையிலே போட்டிருக்கிறார்களே அல்லாமல் வேறல்ல.

**கலையுலகம் வேறு அரசு வேறல்ல!**

இருந்தாலும்கூட நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன். இங்கே பஞ்சு அருணாசலம் குறிப்பிட்டார். இந்தத் தேர்தல் முடிந்தபிறகு இந்தப் பணியை நான் கவனிக்க வேண்டுமென்று சுட்டிக்காட்டினார். நிச்சயமாகத் தேர்தல் முடிந்த பிறகு பிப்ரவரி மாத இறுதிக் கட்டத்தில் இந்தப் பிரச்சினைக்கு ஒரு இறுதித் தீர்ப்பை - நல்ல தீர்ப்பை நாம் காண்போம் என்ற நம்பிக்கையை இந்த விழாவிலே நான் தெரிவித்து - தொடர்ந்து வழக்கம் போல் கலையுலகத்திற்கு இந்த அரசு பாடுபடும் - சாதனைகளை நிகழ்த்தும் - ஏனென்றால் கலையுலகம் வேறு, அரசு வேறு என்றில்லாமல் நடைபெறுகின்ற அரசு இது. கலையுலகத்திலிருந்து வருகின்ற வருமானம் - அரசின் சாா்பில் நிறைவேற்றப்படுகின்ற பல திட்டங்களுக்கு இன்று பயன்படுகின்றது. கலையுலகத்தின் மூலமாகக் கோடிக்கணக்கான ரூபாய் அரசுக்கு வருவாயாக வருகிறது என்பதை நான் மறந்துவிடவில்லை.

எனவே, அந்த நன்றி உணர்வோடு நானும் அங்கும் இருப்பவன், இங்கும் இருப்பவன் என்ற முறையிலே, நிச்சயமாக உங்களோடு ஒத்துழைப்பேன், உங்களுடைய பிரச்சினைகளுக்கு நல்ல பரிகாரம் காண்பேன் என்ற உறுதிமொழியை இங்கே தெரிவித்து, இங்கே வழங்கப்பட்ட விருதுகளை விட - பரிசுகளை விட, இந்த உறுதிமொழி சிறந்தது என்று நீங்கள் கருதுவீர்கள் என்ற நம்பிக்கையோடு விடைபெறுகிறேன்.

இவ்வாறு **முதலமைச்சர் கலைஞர்** அவர்கள் உரையாற்றினார்.

★ ★ ★ ★

> சுதந்திரம், சமத்துவம்,
> சகோதரத்துவம் ஆகியவற்றை
> அடிப்படையாகக் கொண்ட
> ஒரு சமூக அமைப்பே
> என்னுடைய இலட்சியம்.
>
> **- டாக்டர் அம்பேத்கர்**

# 'கத்தாளங் கருங்கப்'

- எஸ்.எஸ். போத்தையா

**போ**ன தலைமுறையில் சிறுவர்கள் ஆடிய விளையாட்டுகளையும், பாடிய பாட்டுகளையும், பழக்க வழக்கங்களையும் இந்தத் தலைமுறை ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. வறண்ட குடிதண்ணீர்க் கம்மாய்க்கு நடுவில், இன்று 'கிரிகெட்' ஆட்டம் நடக்கிறது. உலகளாவிய கலாச்சாரம் என்ற ஒன்று, நம் விளையாட்டு முதல் ஒவ்வொன்றாய் எல்லாவற்றையும் கழுவித் துடைத்துக் காலி செய்து வருகிறது.

பொழுதோடு பொழுதாய் தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் இக்காலச் சிறுவர், சிறுமியர்களுக்கு இந்த விளையாட்டுக்கள் தெரிந்திருக்க நியாயமில்லை. நம்முடைய குழந்தைகள், பிள்ளைப் பருவத்தை, ஏழைகளானால் தொழிற்சாலைகளிலும், வசதி படைத்தவர்களானால் தொலைக் காட்சிப் பெட்டியிலும் தொலைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்குப் பிள்ளை வயது உண்டு. பிள்ளைப் பருவம் இல்லை.

நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது. இசையிலிருந்து தொடங்குகிறது. ஏடறியா, எழுத்தறியா மக்களுக்கு அறிவு வளர்ச்சி, புதியன தேடும் வேட்கை, நினைவாற்றல் என்பவை இசை சேர்ந்த சொற்கள் மூலம் நிகழ்கிறது. (எ-கா.)சொலவடை, நாட்டுப்பாடல்.

நாட்டுப்பாடல் என்பது அவர்களின் ஏடு; ஞாபகசக்தி அவர்களின் கல்வி. அனுபவங்களின் வெடிப்பில் அந்த ஏட்டைத் திறந்து அவர்கள் படித்துக் கொள்கிறார்கள்.

ஒரு கிராமத்தில் நாட்டுப் பாடல்கள் தேடி அலைந்தபோது, தன் வீட்டு வழியே போன இன்னொரு பெண்ணைப் பார்த்து, ஒரு பெண் சொன்னாள் ''இந்தா போறாளே, இவ ஒரு 'வண்டி' பாட்டு வச்சிருக்கா, இவளை உலுக்கினா பொல, பொலன்னு உதிரும்'' என்று.

அவர்களுடைய கல்வி சிறுபிராயம் முதலே, பாடல் இசையில் தொடங்குகிறது. பழமொழி என்பதும் ஒரு இசைதான். அவர்கள் சொலவடை போடும்போது, அது மழையின் இசை; கடலின் ஆழம்.

ஓடி விளையாடும்போதுகூட ஒரு பிள்ளை சாணி, சகதி, கழிவு போன்றவற்றில் மிதித்துவிட்டால் அந்தப் பிள்ளை தங்களைத் தொட்டுத் தீட்டாக்கிவிடக்கூடாது என்ற உணர்வில் மற்ற பிள்ளைகள் —

*"என்பேர் மானம்*
*என்னையத் தொட்டா பாவம்"*

என்று கூவிக்கொண்டே எச்சிலைத் தொட்டுத் தொப்புளில் வைத்துக் கொள்வார்கள்.

("குமரி மாவட்டத்தில் ஒரு இலையைப் பறித்து வைத்துக்கொண்டால் தீட்டு ஏற்படாது என்பார்கள்'' - பொன்னீலன்) விளையாட்டின் போது ஆடை அவிழ்ந்து விட்டாலோ, வேறு இடைஞ்சல்கள் ஏற்பட்டலோ - தற்காலிகமாக விளையாட்டி லிருந்து விலகி நிற்க ''தூச்சிய்யான்'' என்பார்கள்.


மொட்டைத் தலையைப் பார்த்துவிட்டால் பிள்ளைகளுக்கு விளையாட்டாகவும், கேலியாகவும் இருக்கும்.

*"மொட்ட மண்டை மொளகு சாறு*
*கேப்ப ரொட்டி டமாஸ்"*

என்று பாடிக்கொண்டு மொட்டைத் தலைப் பையன்களைத் தொட்டும், தடவியும் கிண்டல் செய்வார்கள்.

சிறுவயதில் பல்விழுந்து முளைப்பது இயற்கை. ஒட்டைப் பல்லைப் பார்த்துவிட்டால் ஒரே கும்மாளம். அதற்கென்று ஒரு பாட்டு

*"ஒட்டப்பல்லுச் சங்கரா*
*ஒருத்தரு வீட்டுக்கும் போகாதே*
*ஆப்பம் வாங்கித் திங்காதே*
*அடிவாங்கிச் சாகாதே!"*



விதம்விதமான தட்டான்களைப் பிடிப்பதில் குழந்தைகளுக்கு உற்சாகம். வேலி முள்ளில் உட்கார்ந்திருக்கும் தட்டானை சப்தம் செய்யாமல் மெதுவாகச் சென்று பிடிக்க முயற்சிப்பார்கள். இதைப் பொறாமையோடு பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு பிள்ளை தட்டானைக் கலைப்பதற்காக இப்படிக் கத்தும்:

*"காத்தட்டான், கள்ளத்தட்டான்*
*கள்ளனுக்கு அம்புடாதே*
*உன்னை ஒருத்தன் பிடிக்க வாரான்*
*ஓடிப்போ, ஓடிப்போ!"*

இதையே ஒளிந்து விளையாடும் விளையாட்டு விளையாடுகையில் ஒருவன் கண்ணைப் பொத்திவிட்டு, மற்ற பிள்ளைகள் ஒளிந்துகொள்ளச் சொல்லி விளையாடும் போதும் பாடுவார்கள். இன்றைக்கு இந்த விளையாட்டு ''Hide and Seek'' என்று ஆங்கிலத்தில் சொன்னால்தான் புரியும் என்றால், கேவலம்தான்.

குதிரை வாலித்தானியத்தை அவித்துக் காயப் போட்டிருப்பார்கள். இது திணை மாதிரி அளவிலும், குதிரைவால் மாதிரி இந்தக் கதிர் விளைந்து இருக்கும் என்பதால் இந்தப் பெயர் வந்தது. "குதிரை வாலிச் சோறும் கோழிக்கறியும்" என்பது சொலவடை. அவ்வளவு ருசி.

காயப் போட்டிருக்கையில் காக்காய்கள் வந்து வாய் நிறைய அள்ளிச் செல்லும். காக்காயை விரட்டக் குழந்தைகளைக் காவல் வைத்து விடுவார்கள். கையில் சிறு தகரத்துடன் தட்டிக் கொண்டே சுற்றிச் சுற்றி வர வேண்டும். காக்காய்கள் பிள்ளைகளைப் பாடாய்ப் படுத்திவிடும். ஏமாற்றுக்காரக் காக்காயையே ஏமாற்ற நினைக்கிறது பிள்ளையின் பிஞ்சு மனம்.

*"காக்கா வீட்டுல தீ யெரியுது.*
*கள்ளப் பிராந்தே சொல்லாதே!"*

- என்று பாடுவார்கள்.

கீழே சிதறிக் கிடக்கும் கடலை, பயறு போன்றவற்றைப் பொறுக்கித் தின்னும் ஒரு குழந்தையை மற்ற குழந்தைகள் -

*"ஓட்டுப் பொறுக்கி*
*ஊரெல்லாம்*
*பீய்ப்பெருக்கி"*

என்று கேலிசெய்யும். இவர்களுக்கும் பொறுக்கித் திங்க ஆசைதான். அந்தக் குழந்தை முந்திக்கொண்டது. அவ்வளவுதான்!

வேண்டுமென்றே ஒரு குழந்தை மற்றோர் குழந்தையின் தலையில் அதற்குத் தெரியாமல் ஒரு துரும்பையோ, காகிதத் துண்டையோ போட்டுவிட்டு —

*"ஒரு ஆளு தலையில*
*வெள்ளாடு மேயுதாம்..."*

என்று மாறி மாறிச் சொல்லிச் சிரிக்கும். நம் தலையில்தான் ஏதோ கிடக்கிறதாக்கும் என்று எல்லாப் பிள்ளைகளும் தம் தம் தலையைத் தடவிப் பார்த்துப் பரக்க பரக்க முழிப்பது வேடிக்கையாய் இருக்கும்.

கைகள் இரண்டையும் பக்கவாட்டில் நீட்டிக்கொண்டு -

*"கிறு கிறு மாம்பழம்*
*கிய்யா கிய்யா மாம்பழம்"*

என்று பலமுறை வேகமாய்ச் சுற்றிக் கீழே விழுந்து - வானமும், பூமியும் சுற்றுவது போலான உணர்வை, கிரக்கத்தை ரசிப்பது ஒரு விளையாட்டு.

இரண்டு பேர் எதிர் எதிர் நின்று கைகளைக் கோர்த்து - அப்படியே ஒரு கையை நீட்டியும், மறு கையை மடக்கியும், பிடறியில் போட்டுக்கொண்டு, கிறு கிறு மாம்பழம் சுற்றுவது போல, முடிந்த அளவு வேகத்துடன் சுற்றிக் கொண்டு -

**நாட்டுப்புற மக்களுக்கு வாழ்க்கை இசையாக இருக்கிறது; இசையிலிருந்து தொடங்குகிறது!**

*"ராட்டு பூட்டு*
*ராவணன் சீட்டு"*

என்று பாடுவார்கள்.

இரண்டு சிறுவர்கள் ஒரே திசையைப் பார்த்து நின்று கொண்டு கையைக் கோர்த்துக் கொள்வார்கள். மூன்றாவது ஒருவன் இவர்களுக்குப் பின்னால் நின்று கோர்த்த கைகளில் தனது ஒரு காலை மடித்து வைத்து, இரு கைகளையும் நிற்பவர்களின் தோள்களில் ஆதரவாகப் போட்டுக் கொள்வான். இவனுக்குப் பின்னால் ஒருவன் தரையில் ஊன்றி நிற்கும் ஒரு காலை கரண்டைக்கால் பாதத்தோடு பிடித்துத் தூக்கிக் கொள்வான். குதிரைச் சாரட்டுப் போலச் சவாரி புறப்படும்.

*"கால் தூக்கிக் கணக்கப்*
*பிள்ளைக்கு*
*மாதம் பத்து ரூபா"*

என்று சொல்லிக் கொண்டு ஓடுவார்கள். சவாரி செய்பவனுக்குப் படுகுஷியாக இருக்கும்.

மூன்று பேர் அதுபோல் வெளிப் புறமாகப் பார்த்து நெருங்கி நின்று கைகளைக் கோத்துக் கொள்வார்கள். ஒருவன் தனது ஒரு காலைப் பின்புறமாக வளைத்து மற்ற இரண்டு பேர் கோத்துக் கொண்டுள்ள கைகளில் வைப்பான். இரண்டாவது பையன் தனது ஒரு காலை அதே போல் தூக்கி மடக்கி முதல் பையன் கால் மேல் போட்டுக் கொள்வான். மூன்றாமவனும் தனது ஒரு காலைத் தூக்கி வளைத்து மற்ற இருவரது கால்களின் மேலாகவும், ஊடாகவும் நுழைத்துக் கொள்வான். இப்போது மூன்று பேர்களும் கோர்த்திருந்த கைகளை விலக்கிவிட்டு ஒரு காலில் நின்று நொண்டியடித்துக் கொண்டு கைகளைத் தட்டிக் கொண்டு வட்டமாய்ச் சுற்றி வந்து இப்படிப் பாடுவார்கள்.

*"தைத் தக்கா தை*
*ஒரு பக்கா நெய்*
*வாத்தியாரு சொன்னதெல்லாம்*
*பொய், பொய், பொய்!"*

யதார்த்தம் என்ற ஒன்று இருக்கும் போது தான் கருத்தும் கற்பனையும் அதை ஒட்டிப் பிறக்கின்றன. கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக்கற்பனை எதுவாக இருந்தாலும் யாதார்த்தத்திலிருந்து தான் முளைக்கிறது. அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை கற்றுக் கொடுப்ப வர்கள், போதகர்கள், வாத்திமார்கள் வாக்கு ஒன்றும் சொல் ஒன்றுமாக இருப்பதைத் தான் இந்தப் பாட்டு தெரியப்படுத்துகிறது.

சில சிறு பிள்ளைகள் உடுப்பு இல்லாமல் அம்மணமாய்த் திரிவார்கள். அதைப் பார்க்கும் மற்றப் பிள்ளைகள்—

*"அம்மணக் குண்டி*
*ஆட்டாம் புளுக்கை*
*தென்ன மரத்துல*
*தேரோட்டம்"*

என்று பாடிக் கேலி செய்வார்கள். "தெற்குத் தெருவுல தேரோட்டம்" என்றும் சொல்வார்கள்.

வெயில் அடிக்கும்போது மழையும் பெய்தால் "நாய்க்கும் பூனைக்கும் கல்யாணம்" என்று சொல்லிச் சிரிப்பார்கள்.

விளையாட்டில் - உதாரணமாக நொண்டியடித்து விளையாடுவதில் நொண்டிக் கொண்டே மற்ற பிள்ளை களைத் தொட வேண்டும். நொண்டியடிப்பது கடினம். அகப்படாமல் ஓடுவது லேசு; இப்படியே ஒவ்வொரு விளையாட்டிலும் உண்டு. வெகு நேரம் அகப்படாமல் ஓடி விளையாடிய பிள்ளை அகப்பட்டுக் கொள்கிறது என்று வைத்துக்கொள்வோம். நொண்டியடிக்கும் சிரமத்திற்குப் பயந்து "நேரமாகிவிட்டது.. எங்க அம்மா சத்தம்

போடும் நான் வரவில்லை" என்று ஓடும். இதைப் பார்க்கும் மற்ற பிள்ளைகள்,

*"என் ஆட்டைக்கு வராதவ*
*எண்ணைக்காரன் பெண்டாட்டி"*

- என்று சொல்லி திட்டுவார்கள்.

வீடுகட்டி, சோறு பொங்கி பொண்ணு மாப்பிள்ளை வைத்து விளையாடுவதும் உண்டு. போன தலைமுறையில் பால்யவிவாகம் சர்வ சாதாரணம். கல்யாணமான சிறுமிகளை அவர்களது கணவர் பெயரைச் சொல்லிக் கேலி செய்வார்கள்.

கணவர் பெயரின் முதல் எழுத்தை எடுத்துக்கொண்டு அத்துடன் "மூனாதண்டட்டி" என்று சேர்த்து - பின் பெயரைச் சொல்லி பொண்டாட்டி - என்று சேர்த்துக் கொள்வார்கள்.



*சானாமூனா தண்டட்டி,*
*சண்முகராசு பொண்டாட்டி,*
*கானாமூனா தண்டட்டி,*
*கணபதி ராசு பொண்டாட்டி,*
*ரானா மூனா தண்டட்டி,*
*ராமுக் கொத்தன் பொண்டாட்டி.*

- இப்படி எல்லாப் பெயர்களுக்கும் சொல்லலாம்.

நான்கு பேர் மூலைக்கு ஒருவராய் நின்று கொள்வார்கள். ஐந்தாவது குழந்தை இடது கையைத் தலையில் வைத்துக்கொண்டு வலது கையை நீட்டிய வண்ணம், உள்பக்கமாக -

*"என் தலைக்கு எண்ண ஊத்து*
*எருமை மாட்டுக்குப் புல் போடு"*

என்று பாடிக்கொண்டே சுற்றிவருவாள். அப்போது நான்கு மூலையிலும் நிற்பவர்கள் வலதுபுறமாக இடம் மாறி ஓடி நிற்பார்கள். அப்படி இடம் மாறும்போது பாடி வருபவள் அவர்களைத் தொடவேண்டும். அப்படித் தொட்டுவிட்டால் தொடப்பட்டவள் பாடிவர வேண்டும்.

ஒரு சின்னக் குழந்தையைச் செல்லமாகப் பக்கத்தில் வைத்துக் கொண்டு கொஞ்சுவது போல் பாவனை காட்டி மற்றவர்களிடத்தில் -

*"நான் வளர்த்த பூனைக்*
*குட்டியைத்*
*தொட்டுரு பார்ப்போம்"*

- என்பார் ஒருவர்.

ஒருவன் "இந்தா நான் தொட்டுட்டேன்" என்று அந்தக் குழந்தையைத் தொடுவான்.

முதல் ஆள் "அப்ப, எனக்கு சர்க்கரையா" என்று சொல்லி குழந்தையைச் சற்றுப் பலமாக அடிப்பார். இப்படி மாறி மாறி நடக்கும். அகப்பட்டுக் கொண்ட குழந்தையின் பாடு திண்டாட்ட மாய்ப் போய்விடும். முதலில் குழந்தை நம்மைக் கொஞ்சுகிறார்கள் என்று நம்பி, பின்பு அடி விழ, அடி விழ தப்பித்துக் கொண்டால் போதும் என்ற நிலைக்கு வந்துவிடும். மற்றவர்களுக்கு வேடிக்கை யாகவும் விளையாட்டாகவும் இருக்கும்.

ஒரு பிள்ளை இரண்டு உள்ளங் கைகளையும் விரல்களையும் பிரித்த நிலையிலுள்ள கையில் ஒவ்வொரு குத்தாகக் குத்துவான். "பிடி கொளக்கட்ட" என்று சொல்லிக் குத்தும்போது, குத்துகிற கையைப் பிடிக்கவேண்டும். பாட்டைப் பார்ப்போம்.

*"மாக் கொளக்கட்ட*
*மஞ்சக் கொளக்கட்ட*
*பிள்ளையார் கோயில்ல*
*பிடி கொளக்கட்ட"*

## குன்னாங் குன்னாங் குர்

மே காற்றுக் காலத்தில் குழந்தை கள் ஓலையில் முள்ளைக் குத்தி காற்றாடி செய்து விளையாடும். காற்றாடி சரியாகச் சுற்றாவிட்டால் ஓலையின் இரு ஓரங்களையும் பிடித்துத் திருகி - காதின் பக்கத்தில் வைத்துக் கொண்டு -

*குன்னாங் குன்னாங் குர்ர்*
*கோழி முட்டை சுர்ர்*
*ஓங்கப்பன் ஆட்டுக்கிடையில்*
*செத்துக் கிடக்கான்*
*பேட்ரிலைட்டுக்*
*கொண்டா டோய்!"*

என்று ராகமாய்ச் சொல்லுவார்கள். இதைக் கேட்டு செத்துக் கிடக்கும் காற்று எழுந்துவந்து காற்றாடியைச் சுற்ற வைக்குமாம். அல்லது திடுக்கிட்டு காற்றாடி சுற்றலாம். உண்மையில் ஓலையின் இரு ஓரங்களையும் வளைத்து விடுவதால் அதன் மீது காற்று பட்டு காற்றாடி சுற்றும். காற்றாடி போல் சுற்றிக் கொண்டிருக்கும் மண்ணின் குழந்தை களுக்கு அதுக்கும் ஒரு பாட்டு.

வெள்ளாமைக் காலத்தில் கம்பங் காட்டிற்குக் காவலுக்குப் போக வேண்டும். குருவிகள் படை படையாக வந்துவிடும். தகரத்தைத் தட்டி விரட்ட வேண்டும். பாதை மேல் பிஞ்சை என்றால் போகிறவர்கள் வருகிறவர்கள் கதிரை ஒடிக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இல்லை என்றால் போகிறதும் வர்றதும் ரெண்டு 'கருதை' நசுக்கி உமி ஊதி வாயில் போட்டுக் கொண்டு போய்விடும். விளைந்த பச்சை மாறாத கருது அவ்வளவு மணமாகவும் ருசியாகவும் இருக்கும்.

"கம்மங் கருதைக் கண்டால் கை சும்மா இருக்காது. மாமியா மகளைக் கண்டால் வாய் சும்மா இருக்காது" என்பது சொலவடை. ஆள் காவலுக்கு இருக்கிறது என்பதைக் காட்டிக் கொள்ள ஓயாமல் சத்தம் போட்டுக் கத்தவேண்டும்.

*"கருத ஒடியாத*
*கக்கத்துல வைக்காத*
*மானத்தப் பாராதே*
*வயிறுதிச் சாகாதே*
*கழுதேஏஏ... கழுதே"*

என்று தகரத்தைத் தட்டிக் கொண்டே பாடுவார்கள்.

மெதுவான குரலில் சாடையாக ஒரு பிள்ளையின் பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது, அந்தப் பிள்ளை "என்னைக் கூப்பிட்டாயா?" என்று கேட்கும். "நான் உன்னையா கூப்புட்டேன். காரவீட்டுக் கருத்த நாயைக் கூப்பிட்டேன்" என்று சொல்லிச் சிரிப்பது.

ஏதாவது ஒரு பொருளைக் கையில் மறைத்து வைத்துக்கொண்டு கையை உயர்த்தி "யாருக்கு வேட்டை" என்று ஒரு பிள்ளை கேட்கும். ஆசைப்பட்ட ஒரு பிள்ளை "எனக்கு வேட்டை" என்று கையை உயர்த்திக் கேட்கும். அதற்கு "ஒங்க மாமியா பல்லோட்டை" என்று பதில் வரும். மற்ற பிள்ளைகள் ஏமாற்றமடைந்த பிள்ளையைப் பார்த்து "ஆசைப்பட்ட, ஊசிப்போச்சி" என்று சொல்லி சிரித்துக் கேலி செய்வார்கள்.

விளையாட்டில் அழிச்சாட்டங் காட்டுவதும் கண்ணிலடித்துப் பொய்ச் சத்தியம் செய்வதும் சர்வ சாதாரணம். கோட்டை மிதித்துவிட்டு - மிதிக்க வில்லை என்று வாயடியடித்துச் சில பிள்ளைகள் சாதித்து விடும். மறு தடவை மறுக்கமுடியாத அளவுக்கும் மறைக்க முடியாத அளவுக்கும் அதே பிள்ளை ஒரு தவறு செய்து ஆட்டையை இழந்துவிடும். முதலில் பாதிக்கப்பட்ட குழந்தை -

*"அழிச்சாங் காட்டுனா சாமி*
*தொழிச்சாங் காட்டுது"*

என்று கூறிச் சந்தோசப்படும். தெய்வ தண்டனையில் குழந்தைகளுக்கு அவ்வளவு நம்பிக்கை! தப்பு செய்தா சாமி தண்டிக்கும், பகவான் இருக்கிறான் பார்த்துக் கொள்வான். 'அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்' போன்ற சமுதாயத்தில் நடமாடும் கருத்தாக்கங்கள் சிறுவர் நம்பிக்கையிலும் நடப் பட்டிருக்கின்றன.

ஆடு, மாடு மேய்க்கும் சிறுவர்கள் கோடைக் காலத்தில் மூன்று நான்கு மைல் தூரம் அலைந்து எங்கோ குளம், குட்டையில் கிடக்கும் - தண்ணீரை ஆடுமாடுகள் குடிக்கும்படி செய்வார்கள். அப்போது

*"நாளைக்கு இந்நேரம்*
*தண்ணி காட்டினாலும் காட்டுவேன்*
*காட்டாட்டாலும் இல்லை*
*கொம்புக்கு குருணித் தண்ணி*
*குடிச்சுக்கோ ஒஓ..."*

என்று கூவுவார்கள். பாவம் வாயில்லாச் சீவன்கள்.

## குச்சுக் குச்சு ராக்கம்மா

பெண் தேடிச் செல்லும் ஒரு விளையாட்டுத்தான் "குச்சுக்குச்சு ராக்கம்மா."

கிராமிய விளையாட்டில் பாடும் ஒரு வரியை சினிமாவில் எப்படியெல்லாமோ மாற்றிப் பயன்படுத்திக் கொண்டிருக்கி றார்கள்.

பெண்கள் இரண்டு சோடிகளாக 30 அடி தூரத்தில் எதிர் எதிராக நின்று கொண்டு, முதலில் ஒரு சோடி இப்படி பாடிக்கொண்டு மற்றோர் சோடியைச் சுற்றி வரும் -

*"குச்சுக் குச்சு ராக்கம்மா*
*பொண்ணுண்டோ*
*கூசாலி ராக்கம்மா*
*பொண்ணுண்டோ*
*சாதி சனமெல்லாம்*
*பொண்ணுண்டோ*
*உங்க சம்பந்த வழியெல்லாம்*
*பொண்ணுண்டோ"*

> மனிதருக்குள் பேதத்தையும், அச்சத்தையும் மூட்டக்கூடிய, வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே!
> - அண்ணா

இதற்கு மறுதரப்பிலிருந்து சுற்றி வந்து இப்படி பதிலளிப்பார்கள் - "குச்சுக் குச்சு ராக்கம்மா பொண்ணில்ல கூசாலி ராக்கம்மா பொண்ணில்ல சாதி சனமெல்லாம் பொண்ணில்ல - எங்க சம்பந்த வழியெல்லாம் பொண்ணில்ல!"

முதலில் சுற்றி வந்த சோடி மீண்டும் அந்தப் பாட்டில் "பொண்ணுண்டோ" என்ற சீருக்குப் பதில் 'பத்து ரூபா' என்ற சொல்லைச் சேர்த்து 'குச்சு குச்சு ராக்கம்மா பத்து ரூபா' என்று பாடி வரும்.

இதற்கு 2-வது சோடி 'பொண்ணில்ல' என்ற சீருக்கு பதில் 'அது வேண்டாம்' என்ற சீரைச் சேர்த்து, 'குச்சுக் குச்சு ராக்கம்மா, அது வேண்டாம்' என்று பாடிச் சுற்றிவரும்.

பத்து ரூபா, நூறு ரூபா, லட்ச ரூபா, பட்டுச்சேலை, ஒட்டியாணம், பதக்கம், சங்கிலியென்று கற்பனைக்கு எட்டு மட்டும் பரிசம் போடுவதாய்ச்சொல்லும். எதிர்த்தரப்பு கடைசி வரை "அது வேண்டாம்" என்றே சாதிக்கும். பெண்ணிற்கு அவ்வளவு கிராக்கி. அது ஒரு காலம்!

## சமுதாயச் சக்தி

வரலாற்றின் தலைச் சக்தியாக பெண் இருந்தாள். இயக்கிச் செல்லும் 'சமுதாயச் சக்தியாக' அவள் இருந்தாள். ஆணாதிக்கம் மேல் கை எடுத்து பெண்ணை ஒருபொருளாக மாற்றிவிட்ட போது, பெண்ணுக்கு விலை பேசும் வில்லங்கம் மேலெழுந்தது. தாய் வழிச் சமுதாயமாக இருந்தது வரை பெண்ணுக்குப் பொன் கொடுத்து மதிக்கப்பட்டாள். பெண்ணுக்குப் பொன் கேட்பதெல்லாம் இப்போது 'வந்த கேவலம்!'

விளையாட்டுப் பாடல்கள் வரலாற்றுச் சுழற்சியை விவரிக்கும் சாட்சியங்களாகவும் கலாச்சார மாறுதல்களைப் பதிவு செய்யும் ஏடுகளாகவும் திகழ்கின்றன.

மன்னர் ஆட்சிக்காலத்தில் குடியானவர்கள் பட்ட கஷ்டங்களைக் கோடிட்டுக் காட்டுவது இந்த விளையாடடு. ராசா வீட்டில் விசேஷம் என்றால், அதற்கு வேண்டிய பொருட்களைக் குடியானவன் இனாமாகக் கொடுக்கவேண்டும். ஒரு சில வேலை செய்யவேண்டும்.

ராசா மாதிரி ஒருவன் உட்கார்ந்து கொள்வான். அவனுக்குப் பக்கத்தில் ஒருவன் சேவகன் போல் நின்று கொள்வான்.

சற்றுத் தள்ளி ஒருவர் பின் ஒருவராகக் காலை நீட்டி மடியில் உட்காருவது போல் உட்கார்ந்து கொள்வார்கள். முன்னால் உட்கார்ந்திருப் பவர்களைப் பிடித்துக் கொள்வார்கள். முதலில் உட்கார்ந்திருக்கும் குழந்தைதான் தோட்டக்காரன்.

சேவகன் தோட்டக்காரனிடம் வந்து "ராசா மகளுக்குக் கல்யாணமாம்-ஒரு பூசணிக்கா வேணுமாம்" என்பான். அதற்குத் தோட்டக்காரன் "இப்பதான் விதை ஊனி இருக்கு" என்பான். இதை அப்படியே சேவகன் ராசாவிடம் சொல்வான். ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்பான். சேவகன் தோட்டக் காரனிடம் வந்து 'அதையும் கொடுப்பியாம்' என்பான். 'இப்பத்தான் ஒரு இலை விட்டிருக்கு' என்பான். இதைச் சேவகன் ராசாவிடம் சொல்ல - 'ராசா' 'அதையும் வாங்கிட்டு வா' என்பான்.

இப்படியே பத்து இலை வரை சொல்லி, கொடி வீசியிருக்கு, பூப்பூத்திருக்கு, காய் காச்சிருக்கு என்று தோட்டக்காரன் சொல்ல ராசா 'அதையும் வாங்கிட்டு வா' என்று சொல்வான்.

முடிவாக 'தண்ணீர் பாய்ச்சி' வேலியடைத்துவிட்டு, ஒரு காய் பிடுங்கிக் கொண்டு போ என்பான். சேவகன் தண்ணீர் பாய்ச்சுவது போல உட்கார்ந்திருக்கும் பிள்ளைகளைத் தாண்டுவான். வேலியடைப்பது போல பிள்ளைகளைச் சுற்றி நொண்டியடிப்பான். பிள்ளைகள் அவனை விரட்டுவது போல் குரைப்பார்கள். ஒரு பிள்ளை சேவகனின் காலில் நறுக்கென்று கிள்ளிவிடும். தேள் கொட்டிவிட்டதாய் சேவகன் அழுவான். ''ஒம்பீயையும், ராசா பீயையும் குழப்பிப் போடு, தாவலாய்ப் போகும்'' என்று கூறி எல்லோரும் சிரிப்பார்கள்.

கடைசியில் உட்கார்ந்திருப்பவன் தான் பூசணிக்காய். அவனது இடுப்பைப் பிடித்து சேவகன் தூக்குவான். அவன் முன்னால் உட்கார்ந்திருப்பவனைப் பிடித்துக்கொண்டு விடமாட்டான். ஒரு வழியாக அவனை பூசணிக் காயாகத் தூக்கி ராசாவிடம் கொண்டு போய்ச் சேர்ப்பான். 'இந்தக் காய் அழுகிப் போச்சு, இன்னொரு காய் வாங்கிட்டு வா என்பான் ராசா. இப்படி மாறி மாறி நடக்கும்!.

## உத்தி கட்டிவருதல்

விளையாட்டில் இரண்டு குழுக்களாகப் பிரிப்பதற்கான வழிமுறையே மிகவும் சுவாரஸ்யமாய் இருக்கும். சோடி சோடியாய் உத்திகட்டி வருவார்கள். குழுத்தலைவர்களிடம் ''உத்தி யார்? உரி யார்?'' என்று கேட்பார்கள். தலைவர்களில் ஒருவன், ''நான்தான் உத்தி, நீதான் உரி'' என்பான். அதற்கு உத்தி கட்டி வந்தவர்களில் ஒருவன்,

***''மானத்த வில்லா வளைச்சவன் வேணுமா?***

***மணலைக் கயிராத் திரிச்சவன் வேணுமா?''***

என்று கேட்பான். தலைவன் ஏதாவதொன்றைக் கேட்க அந்தப் பெயருக்குரியவன் அந்தக் குழுவில் சேர்ந்து கொள்வான். மறு உத்திவரும் போது, கேட்கும் உரிமை இரண்டாவது குழுத் தலைவனிடம் போய்விடும். இப்படி மாறி மாறி வரும்.

உத்தி கட்டி வருபவர்கள்,

***''வேலியத் தாண்டற வெள்ளக் குதுர வேணுமா?***

***மானத்தத் தாண்டற மயிலக் குதுர வேணுமா?''***

என்றும்,

***''பனைமரத்து மேலிருந்து பாட்டுப் படிக்கிறவன் வேணுமா?
உடமரத்து மேலிருந்து உசுவடிக்கிறவன் வேணுமா?''***

என்றும் பலவிதமாகக் கேட்பார்கள்.

சாவுச் சடங்கையும் சிறுமிகள் ஒரு விளையாட்டாக்கிக் கொள்வார்கள். ஆடி மாதம் 10, 12 வயதுப் பெண்கள் துணியில் பொம்மை செய்து அது இறந்து விட்டதாய்ப் பாவித்து தண்ணீர்க் கரையில் கொண்டு போய், ஒப்பு வைத்துக் கட்டி அழுவார்கள்.

***''வாயைக்கட்டி வயித்தைக்கட்டி
வளர்த்தனடி பொம்மை .
உன்னை
வைப்பாத்துத் தண்ணியில
விட்டனடி பொம்மை''***

(''வாய்க்காலுத் தண்ணியில விட்டனடி பொம்மை'' என்றும் கூறுவதுண்டு)

ஒப்பாரி வைத்து பொம்மையை எரித்து - சாம்பலை நீரில் கரைப்பார்கள்.

விளையாட்டுகளில் இன்னும் விவரிக்கப்பட வேண்டியவை ஏராளம். திரி திரி பொம்மக்கா, தெல்லு, கோலி, கிட்டிக்குச்சி, பேப்பந்து, பிள்ளையார் பந்து, குழிப்பந்து, ஒச்சிய்யான், வண்ணான் பொதி, கித்தான் மந்தி, தவிட்டுக்குஞ்சி, சடுகுடு, கிளித்தட்டு, எட்டாளந்தட்டு, நிலாப்பூச்சி, கண்ணாம்பூச்சி, தாயம், தட்டாங்கல், பன்னாங்குழி, பூச்சொல்லி விளையாடுவது, மாட்டுக்கால் விளையாட்டு, ஒத்தையா ரெட்டையா, பம்பரம், மதியம், சுண்டி, நீர் விளையாட்டுக்கள் இப்படி ஏராளம் ஏராளம். இவ்விளையாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் அவற்றிற்கேயுரிய சில சொற்கள் ஆராயப்பட வேண்டியவை. சிலவற்றில் சமுதாய, வரலாற்றுச் செய்திகளுக்குச் சாட்சியங்களைக் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக, ஒரு குடம் தண்ணீ ஊத்தி, ஒரு பூப்பூத்தது என்று பத்து வரை சொல்லி - கடைசியில் ''வாரவனைக் கண்ணி போட்டுப் பிடிச்சுக்கோ'' என்பான். ஒருவனைப் பிடித்துக் கொண்டபின் - பிடிபட்டவனின் கட்சித் தலைவன், ''இம்புட்டுப் பணம் தாரேன், விடுடா துலுக்கா'', என்பான். பதிலுக்கு ''விடமாட்டேன் மலுக்கா'', என்பான் எதிர்க்கட்சித் தலைவன்.

சடுகுடு விளையாட்டில் வெற்றி பெற்றதை 'எல்லை வைத்தோம்' என்றும், கிந்தான், தாயம் விளையாட்டுகளில் வெற்றி பெற்றதை 'பழம்' என்றும், தட்டாங்கல் விளையாட்டில் வெற்றியைக் ''கட்டைவைத்தேன்'' என்றும் கூறுவர். சுண்டி, ஒத்தையா ரெட்டையா, தெல்லு விளையாட்டுகளில், ''மொத்தீட்டான்'', ''தோத்துட்டான்'' என்றும் சொல்லுவார்கள்.

**கால் கற்பனை, அரைக் கற்பனை, முழுக் கற்பனை எதுவாக இருந்தாலும் யதார்த்தத்திலிருந்துதான் முளைக்கிறது!**

## விளையாட்டு முடிவு

வெகுநேரம் விளையாடியாய் விட்டது. வீட்டிற்குப் போகும் நேரமாய் விட்டது. இருப்பதில் பெரிய பிள்ளை இப்படிக் கூறி விளையாட்டை முடித்து வைக்கும் -

***''அவுகவுக வீட்டுக்கு
அவரக்கஞ்சி குடிக்கப் போங்க
பிள்ளப் பெத்த வீட்டுக்குப்
புளியங் கஞ்சி குடிக்கப்
போங்க''***

கல்யாணம், திருவிழா, பொங்கல் காலங்களில் சிறுவர், சிறுமியர் ஓரிடத்தில் இரவு நேரத்தில் தங்க நேரிடும். அப்போது உற்சாக மிகுதியில் பேசிச் சிரித்துக் கேலி செய்வதும், கதை சொல்லியும் கும்மாளம் போடுவார்கள். நேரம் ஆக ஆகச் சில பிள்ளைகளுக்குத் தூக்க உணர்வு மேலிடும். சில பிள்ளைகள் பலமாகச் சிரித்தும், பேசியும் தூங்கவிடாமல் தொந்தரவு செய்யும். இது அளவு மீறிப் போகும் போது, ஒரு பெரிய பிள்ளை தலையிட்டு, ''சரி, போதும் தூங்குவோம். யாரும் பேசக்கூடாது ''கத்தாளங் கருங்கப்'' என்று சொல்லும். இதற்கு மேல் யாரும் பேசமாட்டார்கள். பேசக்கூடாது.

நாமும் இதற்கு மேல் கதையை வளர்த்தாமல் இத்துடன் நிறுத்திக் கொள்வோம்?

***''கத்தாளங் கருங்கப்!''***

●●●


# சாத்தன் - சாஸ்தா - ஐயனார் !

நடன. காசிநாதன்
இயக்குநர், தொல்பொருள் ஆய்வுத்துறை

சாத்தன் என்னும் பெயர் சாத்து என்ற வேர்ச்சொல்லில் இருந்து வந்திருக்கலாம். சாத்து என்னும் சொல்லுக்குச் சாத்துகை, சாத்துமுறை, வாணிகக் கூட்டம், குதிரைச் சேவகர் என்ற பொருள்கள் காணப்படுகின்றன.

வடமொழியில், 'சார்த் என்னும் சொல்லுக்கு ஒரு வணிகத் தொகுதி, தொகு என்று பொருள்கள் தரப்பட்டுள்ளது. தமிழ்ச் சொல்லான 'சாத்து', 'சார்த்' என்றாயிற்றா அல்லது வடமொழிச் சொல்லான 'சார்த்' என்பது தமிழ்ச் சொல்லாயிற்றா என்பது விளங்கவில்லை.

ஐயன் பெயர்களாகக் காரி, புறத்தவன், கடல்வண்ணன், சாத்தா, பூரணைகேள்வன், யோகி, புட்கலைமணாளன், மாசாத்தன், செண்டாயுதன், வெள்ளையானையூர்தி, ஆரியன், அறத்தைக் காப்போன், அரிகரகுமரன் என்று சூடாமணி நிகண்டில் குறிக்கப் பட்டுள்ளது.



தமிழகத்தில் சாத்தனுக்கு ஐயன் அல்லது ஐயனார் என்ற பெயர் ஏற்பட்டது பிற்காலத்தில்தான் என்று தெரிகிறது. ஐயன் என்பது ஆரியன் என்ற சொல்லின் திரிபாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. ஹரி ஹரபுத்திரன் என்ற வழக்கும் பிற்காலத்தியதே.

சாத்தன் என்னும் வழக்கு சங்ககாலம் தொட்டு காணப் படுகிறது. சங்காலப் புலவர்களில் குறிப்பிட்டுக் கூறும் படியான எண்ணிக்கையில் சாத்தன் என்ற பெயர் சூட்டப்பட்டிருப்பது கருத்தில் கொள்ளத்தக்கதாகும்.

பங்குனி முயக்கம் என்னும் விழா உறையூரையொட்டிய காவிரியாற்றின் மணல் நிறைந்த பகுதியில் தேன் நாறும் கோவையில் கொண்டாடப் பெற்றதாக அகநானூறு புலப்படுத்துகிறது. இவ்விழா பங்குனித் திங்களில் உத்தரமும் நிறைமதியும் கூடிய நன்னாளைப் பங்குனி முயக்கம் என்பர். இக்குறிப்புக் கொண்டு சாத்தனை வழிப்பட்டதாக உரையாசிரியர்கள் கருதியுள்ளனர். அவர்களது கருத்து ஏற்புடைத்தாயின் ஒவ்வொரு ஆண்டும் பங்குனி உத்திரத்தின்போது சாத்தனுக்கு விழா எடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. பல்லவர் காலத்தில் வணிகர்கள் தங்களது குலப் பிரச்சினைகளைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கென "சாத்தகணம்" என்ற அமைப்பைக் கொண்டிருந்தனர் என்றும் அவ்வமைப்பில் உறுப்பினராய் இருந்தவர் "சாத்தகணத்தார்" என்னும் சாத்தப் பெருமக்கள் என்றும் அழைக்கப் பெற்றுள்ளனர். மேலும் பிற்காலச் சோழர் காலத்து இலக்கியமான தக்கயாகப் பரணியில்

*மிக்கு அள்ளும் கறி அருந்த மிடாப் பலவும்*
*தடாப்பலவும்*
*எக்கள்ளும் ஒரு பிள்ளை மடுத்தாட*
*எடுக்குதியே*

என்று ஆளப்பெறும் வரிகள் சாத்தனாகிய பிள்ளை கள் குடித்துவிட்டு ஆடுவார் என்பதைத் தெரிவிக்கிறது.

மேற்காணும் ஆதாரங்களை வைத்துப் பார்க்கையில் சாத்தன் என்ற சொல்தான் ஐயனாருக்கு ஏற்பட்ட பழமையான சொல் என்றும், அச்சொல் 'சாத்து' என்னும் வேர்ச்சொல்லிலிருந்து தோன்றியிருக்கக் கூடும் என்று நாம் உணரலாம்.

'சாத்து' என்பது வணிகத் தொகுதியையும் குதிரை வீரனையும் குறிப்பதால் சாத்தனார் என்னும் தெய்வம் வணிகர்களில் முழு முதல் தெய்வமாக இருந்திருக்கலாம். சங்க காலத்தில் தமிழகத்தில் வணிகர்கள் அரசர்க்கு அடுத்த நிலையில் இருந்தவர் ஆவர்.

தரை வழிப்பயணம் மேற்கொண்டு வணிகம் செய்தவர் சாத்துவர் என்றும் கடல் வழிப்பயணம் மேற்கொண்டு வணிகம் செய்தவர் 'நாயக்கர்' என்றும் அழைக்கப்பட்டனர். தரைவழி வாணிகம் நடத்திய வணிகர்களுக்குக் காவல் தெய்வமாக விளங்கியவர்தான் 'சாத்தன்'. ஆதலால் தான் இத்தெய்வம் பெரும்பாலும் பெருவழிகளின் அருகில் காணப்படுகிறது.

வணிகர்கள் தங்கள் வணிகம் காரணமாக வெளியூர் செல்ல நேர்கையில் தங்களைப் பாதுகாத்து வருவதற்கென 'அத்திகோசத்தார்' மற்றும் 'வீரகோசத்தார்' என்ற படைகளைக் கொண்டிருந்தனர். வணிகர்களது படைவீரர்கள், முனை வீரர், பெருநீரவியார், கொடிவீரர், செட்டி வீரர், எறிவீரர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். மேலும் தாங்கள் பயணம்

மேற்கொள்ளும் பெருவழிகளில் சாத்தன் (ஐயனார்) சிலையும் அமைத்து வழிப்பட்டிருக்கின்றனர். சிறப்பு வாய்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டுக்கருகிலேயே, முதல் பராந்தகன் காலத்தில் திசையாயிரத்தைஞ் ஞூற்றுவர் ஐயனாருக்குச் சிலை அமைத்து வழிப்பட்ட செய்தி தெரிவிக்கும் கல்வெட்டும், அவ்வையனார் சிலையும் உள்ளன. பூலாங்குறிச்சியில் திசையாயிரத்தை ஞூற்றுவர் வாழ்ந்திருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

மேற்காணும் கருத்திலிருந்து திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர் போன்ற வணிகர்கள் எங்கெங்கு வாழ்ந்தார்களோ அவ்விடங்களுக்கருகிலெல்லாம் சாத்தன் கோயில் இருந்திருக்கும். இக்கருத்துக்கு வலிவூட்டுவதாகப் பெரும் வணிகர்கள் வாழ்ந்த பூம்புகாரில் புறம்பணையான் (சாத்தன்) கோயில் இருந்திருப்பதும் கருத்திற் கொள்ளத்தக்கது. மேலும் அண்மைக் காலங்களில் கண்டறியப்பட்டுள்ள பழமையான ஐயனார் சிற்பங்கள் அனைத்தும் வணிகர்கள் வாழ்ந்திருந்த நகரங்களுக்கு அருகிலேயே கிடைத்திருக்கின்றன.

ஆலகிராமம் (திண்டிவனம் அருகில்) 2 ஐயனார் சிற்பங்களும், எசாலம் (விழுப்புரம் அருகில்) என்னுமிடத்தில் ஒரு ஐயனார் சிற்பமும், நாகத்தி (தஞ்சாவூர் அருகில்)யில் ஒரு ஐயனார் சிற்பமும், சூணாம்பேடு(மரக்காணம் அருகில்) என்னுமிடத்தில் ஒரு ஐயனார் சிற்பமும் கிடைத்துள்ளன.

வணிகர்கள் பல்வேறு மதங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் சாத்தனாரைத் தங்கள் முக்கியத் தெய்வமாக வழிப்பட்டிருக்கிறார்கள். ஆதலால் தான் சாத்தனுக்கு அருகன், புத்தன், ஆரியன், அரியரன், புத்திரன் என்ற பெயர்கள் வழங்கி வந்திருக்கின்றன. அவலோகதீசுவரர் என்ற மானிடபுத்தர் 'மகாசத்வர்' என்று வணங்கப்பட்டார். வடமொழி நிகண்டான 'அமரகோஸம்' புத்தர் பெருமானை சாத்தன் என்றும் கூறுகிறது.

சாத்தன் வழிபாடு கேரள மாநிலத்திம் மற்றும் குமரி மாவட்டத்திலும், சாஸ்தா வழிபாடு என்றும், தமிழ் மாநிலத்தின் பிற பகுதிகளில் 'ஐயனார்' வழிபாடு என்றும் தற்காலத்தில் வழிபடப்பட்டு வருகிறது. கேரள மாநிலத்தில் முக்கியக் கோயில்களிலேயே திருச்சுற்றில் தென்மேற்கு மூலையில் சாஸ்தாவுக்கெனச் சிற்றாலயங்கள் உள்ளன. தமிழகத்தில் முக்கியக்கோயில்களில் திருச்சுற்றின் தென்மேற்கு மூலையில் விநாயகர்களுக்குத்தான் சிற்றாலயம் உள்ளது. ஐயனாருக்கென முக்கியக் கோயில்களில் இடம் கிடையாது. ஐயனாரைக் காவல் தெய்வங்களுள் ஒன்றாக ஊரின் புறத்தேதான் வழிபடுகின்றனர். ஆதலால்தான் சிலம்பு கூட புறம்பணையான் கோயில் என்று தெரிவித்துள்ளது.

மேலும் கேரளத்தில் 'சாஸ்தா' கோயிலின் வழிபாட்டையும் முக்கிய ஆலயப் பூசாரி தான் நடத்துகிறார். ஆனால் தமிழ்நாட்டில் ஐயனார் கோயில் வழிபாட்டைப் பிராமணரல்லாத 'கிராமப் பூசாரிகள்தான்' செய்து வருகின்றனர். தொன்றுதொட்டே ஐயனார் இந்து மதத்தின் முக்கியக் கடவுளர்களுள் ஒருவராக மதிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. நாட்டை ஆண்ட மன்னர்கள் வழிபடாமல் அவர்களுக்கு அடுத்த நிலையிலிருந்த வணிகர்கள் வழிபட்டதால் அவ்வாறு இருந்திருக்கலாம்.

ஐயனார் வழிபாடு வட இந்தியாவில் சிறப்பான இடத்தைப் பெற்றதாகத் தெரியவில்லை. அங்கு வணிகர்கள் கண்ணன் வழிபாட்டை முக்கிய வழிபாடாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது.

சாத்தனுக்குச் சங்க காலத்திலேயே கோயில் இருந்திருக்கும். ஆனாலும் சாத்தான் கோயில் பற்றிய செய்தி முதன் முதலில் சிலப்பதிகாரத்தில்தான் காண முடிகிறது. சிலப்பதிகாரக் காலத்தில் சாத்தான் வழிபாடு இந்துமதக் கடவுளர் கூட்டத்தில் இணைந்துவிட்ட நிலையைப் பெற்றிருக்கிறது.

ஹரிஹரபுத்திரன் தோற்றம் பற்றி முதன் முதலில் ஸ்ரீபாகவதம் தெரிவிக்கிறது. சுப்ரபேதாகமும் இவ்வரலாற்றைக் கூறுகிறது. 'பத்மஸம்ஹித' என்னும் நூல், ஹரிஹரபுத்திரனுக்கு பூசையை 'பாரஸவா' என்பார் நடத்த வேண்டும் என்கிறது. பாரஸவா என்பார் கலப்புமணத் தம்பதியருக்குப் பிறந்த குலத்தவர் என்று பிற சான்றுகளிலிருந்து தெரிகிறது.

சாத்தனின் உருவம் முதலில் சாதாரண ஒரு மனிதன் போன்று தான் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இரு கரங்கள் தான் பழமையான சிற்பங்களில் காணப்படுகின்றன. சாத்தனின் உருவ அமைதியை விவரிக்கும் சுப்ரபேதாகமம், சாஸ்தா இரண்டு கரங்களுடனும், இரு கண்களுடனும், கருத்த நிறத்துடனும் வடிவமைக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. மேலும் நாய்கள், ஆடுகள் மற்றும் பறவைகளுடனும் விளையாடிக் கொண்டிருப்பவர் போன்று தோற்றமளிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கிறது. வலக்கரத்தில் செண்டும், இடக்கரத்தில் பழங்களும், இலைக்கொழுந்துகளும் காணப்பெறுதல் வேண்டும் என்றும் மதனா மற்றும் வர்ணனி என்னும் தம் மனைவியர் இரு பக்கங்களிலும் காணப் பெறுதல் வேண்டும் எனவும், சாஸ்தாவின் இடப்புறத்தில் தமனகா என்னும் அழகற்ற உருவம் இருத்தல் வேண்டும் எனவும் அதேநூல் விவரிக்கிறது.



## தஞ்சை மாவட்டக் கலம்காரி ஓவியம் !

இயற்கையாகக் கிடைக்கும் வண்ணங்களைக் கொண்டு ஓவியம் துணியில் வரைவதற்குக் கலம்காரி முறை என்று பெயர். கலம்காரி ஓவியம் தீட்ட ஏற்றது காடாத் துணிதான். அதனைச் செம்மறியாட்டின் சாணப் பாலில் நனைத்து ஊறவைத்து, அவ்வாறு ஊறிய துணியை மூன்று தடவை சுத்தம் செய்து காய வைப்பர்.

கடுக்காயை நசுக்கி, ஊறவைத்து அதைப் பொடி பண்ணி எருமைப்பாலில் கலந்து ஊற வைப்பர். பிறகு நன்றாக உதறி மறுபடியும் எருமைப்பாலில் நனைத்து, ஐம்பது விழுக்காடு எருமைப்பாலோடு மூன்றுநாள் காயவைத்து, பிறகு நிழலிலே ஒரு நாள் ஆறப் போட்டு கொட்டாப் புளியால் இருபக்கமும் அடிப்பர். ஓவியம் வரைய பச்சைப் புளிய விளாறைக் கொளுத்திய துண்டு வைத்து 'ஸ்கெட்ச்' பண்ணி, வண்ணம் தீட்ட ஆரம்பிக்கும்போது, மூங்கில் குச்சியைக் கூராகச் சீவி அதன் நுனியிலே பச்சை நூலால் கட்டி வண்ணத்தில் பஞ்சை நனைத்து எங்கே கறுப்பு வண்ணம் வரவேண்டுமோ அங்கே பஞ்சைப் பிழிவர். கறுப்பு நிறம் தீட்டிய பிறகு மறுபடியும் துணியைக் காய வைத்துப் பின் மேல்பாரம் வைத்து அழுத்துவார்கள்.

கொட்டாப் புளியால் கால் பாகம் அளவு அடித்து உதறிக் கொடியில் போட்டுக் காய வைப்பர். வீட்டிற்குள் ஒரு நாள் நிழலில் உலர்த்துவர். ஒவ்வொரு வண்ணம் தீட்டிய பின் இவ்வாறு செய்வர். பிறகு சுத்தித் தலைப்பிற்கு வண்ணம் தீட்டுதலுக்கு 'ஜமுல் அடித்தல்' என்று பெயர். இம்முறையினால் வெயிலாயிருந்தாலும், மழையில் நனைந்தாலும் கலம்காரி ஓவியம் கலையாது. இந்த ஓவியம் ஒரு துணியில் வரைய முப்பதிலிருந்து நாற்பது நாட்கள் ஆகும். இவ்வோவியத்திற்குப் புகழ் பெற்ற ஊர் சிறுகநாயக்கன் பேட்டை. இது குடந்தைக்கும், கீழ் அணைக்கட்டிற்கும் இடையில் திருப்பணந்தாளிலிருந்து சில கல் தூரத்தில் உள்ளது.

காரணாகமும் சாஸ்தாவுக்கு இரு கரங்களையும், இரு கண்களையும் கருத்த நிறத்தையும்தான் குறிப்பிடுகிறது. மேலும் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் இடக்காலைத் தொங்கவிட்டு, வலக்காலைக் குத்திட்டு வைத்து, வலக்கால் மீது வலக்கை முட்டிபடும்படி நீட்டி வைத்துக்கொண்டு இடக்கையில் சாட்டையைப் பிடித்தபடி இருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கிறது. சாஸ்தாவின் வாகனம் யானையென்றும், கொடியில் யானையின் உருவமோ அல்லது சேவலின் உருவமோ இருக்கும் என்றும் கூறுகிறது. ஆனால் அம்சுபத்பேதாகமம் சாஸ்தாவுக்கு நான்கு கரங்களைக் குறிப்பிடுகிறது. இவ்வுருவம், சாத்தன் தெய்வம் இந்து மதத் தெய்வங்களின் கூட்டுக்குக் கொண்டு வந்த பிறகு ஏற்படுத்தப்பட்டதாக இருக்கலாம். இதன் மூலம் மற்றொரு செய்திக்கும் வழி ஏற்படுகிறது. அதாவது அம்சுபத்பேதாகமம், சுப்ரதோகமத்துக்கும் காரணாகமத்துக்கும் பிற்பட்ட நூலாக இருக்கலாம் என்பதேயாகும்.

தமிழகத்தில் அண்மைக்காலங்களில் கிடைத்துவரும் சாத்தன் சிற்பங்களைக் கொண்டு பார்க்கையில், தொடக்க காலத்தில், அதாவது கி.பி. 6, 7 ஆம் நூற்றாண்டளவில், சுப்ரபேதாகமத்தில் கூறப்பட்டுள்ளவாறு தான் சாத்தன் உருவம் வடிவமைக்கப்பட்டது என்பது தெரிய வருகிறது. விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்துக்கு அருகில் உள்ள ஆலக்கிராமத்தில் கிடைத்துள்ள சாத்தன் சிற்பம் சுப்ரபேதாகமத்தில் விவரிக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கேற்ப காணப்படுகிறது. சாத்தன் பீடத்தின் மீது வலக்காலைக் குத்திட்டு வைத்து, இடக்காலைப் பீடத்தின் கீழ் தொங்கவிட்டு, வலக்கரத்தின் முட்டி வலக்கால் முட்டி மீது படும்வண்ணம் கரத்தை நீட்டி வைத்து, இடக்கரத்தைத் தொடை மீது ஊருகரமாக வைத்து அமர்ந்திருக்கும் திருக்கோலமாக உள்ளது வியப்பளிக்கிறது. சாத்தனின் வலப்பக்கத்தில் குதிரை மீது ஊர்ந்து செல்லும் வீரன், வலப்பக்கத்தில் இடப்பக்கத்தில் அழகான பெண்ணொருத்தி வலக்கரத்தில் கலசத்தைக் தூக்கி நிற்கும் கோமலம் வலக்கரத்தின் கீழ குரங்கோ அல்லது புலியோ தன் குட்டிகளுடன் வியைாடும் அழகு, இடக்காலுக்குக் கீழ் முன்னங்காலைக் குத்திட்டு வைத்து அமர்ந்திருக்கும் நாய், குரங்கு அல்லது புலிக்குட்டிகளுக்கும், நாய்க்கும் நடுவில் சேவல் ஆகிய விலங்கினக் கூட்டம், நிற்கும் நிலையில் ஒரு அழகற்ற ஆண் உருவம் ஆகியவை சுப்ரபோதக வரிகளுக்கு அணி சேர்க்கின்றன.

இதே ஊரில் கிடைத்துள்ள மற்றொரு சாத்தன் சிற்பத்தில் இரு பக்கங்களிலும் இரு பெண்கள் நின்ற நிலையிலும் வலக்கரத்துக்குக் கீழ் நாய், இடக்காலுக்குக் கீழ் குதிரை மற்றும் வீரன் உருவங்கள் காணப்பெறுகின்றன.

விழுப்புரம் வட்டம் எசாலம் காஞ்சீபுரம் வட்டம், சூணாம்பேடு ஆகிய இடங்களில் கிடைத்துள்ள சாத்தன் சிற்பங்களில் நாய் உருவம் மட்டுமே துணை உருவங்களாகக் காட்டப்பட்டுள்ளன. விழுப்புரம் வட்டம் நெடி என்னும் ஊரில் கண்டறியப்பட்டுள்ள சாத்தன் சிற்பத்தோடு குதிரை உருவமும் நாய் உருவமும் காணப்படுகின்றன. மேற்காணும் இச்சிற்பங்கள் கி.பி.6ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 8, 9 நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சேர்ந்தவைகளாக இருக்கலாம்.

ஆலக்கிராமத்தில் கிடைத்துள்ள சாத்தன் சிற்பங்கள் போன்று தஞ்சை மாவட்டம் நாகத்தி என்னும் சிற்றூரிலிருந்தும் ஒரு சிற்பம் கிடைத்துள்ளது.

இந்தச் சிற்பத்தைப் பைரவர் சிற்பம் என்று மறைந்த பேராசிரியர் டிவி. மகாலிங்கம் எழுதியுள்ளார். இச்சிற்பம் முற்காலச் சோழர் காலத்தைச் சார்ந்ததாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். இச்சிற்பத்தின் உருவ அமைதியையும், பிற இடங்களில் கிடைத்துள்ள முற்காலச் சாத்தன் சிற்ப்பங்களையும் பார்க்கும் போது இதுவும் சாத்தன் சிற்பமாகவே இருத்தல் வேண்டும் என்று கருத இடமேற்படுகிறது. நாகத்தி சிற்பத்திலும், சாத்தன் பீடத்தின் மீது வலக்காலைக் குத்திட்டு வைத்து, இடக்காலைப் பீடத்தின் கீழ் தொங்கவிட்டு அமர்ந்துள்ளார். வலக்கரம் வலக்கால் முட்டியைத் தொட்டவாறு நீண்டு செல்கிறது. இடக்கரம் பீடத்தின் மீது ஊன்றியவாறுள்ளது. சாத்தனின் இடப்பக்கத்தில் பூரணி நின்ற நிலையில் இரு கரங்களுடன் காணப்படுகிறார். இருவரின் ஆடை அணிமணிகளும் நன்கு செதுக்கப்பட்டிருக்கின்றன. சாத்தனின் வலக்கரத்துக்குக் கீழ் நாய் முன்னங் கால்களைக் குத்திட்டு வைத்த நிலையில் காட்டப்பட்டுள்ளது. ஆலக்கிராம சாத்தனின் சிற்பத்தில்

காண்பது போன்று தடித்த புரிநூல் இச்சாத்தனையும் அணி செய்கிறது.

பிற்காலச்சோழர் காலத்திலிருந்து ஐயனாரின் உருவம் பீடத்தின் மீது வலக்காலுக்கு மாறாக இடக்காலைக் குத்திட்டு வைத்து, இடக்காலுக்குப் பதிலாக வலக்காலைப் பீடத்தின் கீழ் தொங்கவிட்டு அமர்ந்திருக்கும் வண்ணம் காண முடிகிறது. முற்காலச் சோழர் காலம் முடிய ஐயனார் அருகில் நிற்கும் வண்ணம் காணப்பெற்ற பூரனை, புஷ்கலை உருவங்கள் ஐயனாரோடேயே பீடத்தில் பக்கத்துக்கொருவராக அமர்ந்த கோலத்தில் காணப்படுகின்றனர்.

முற்காலச் சோழர் காலம் முதல் ஐயனாரின் வலக்கரத்தில் காணப்பெறாத செண்டு (சாட்டை) பிற்காலச் சோழர் கால ஐயனார் உருவத்தில் உள்ளது. மேலும் அதுவரை காணப்பெறாத யோகப்பட்டமும் சில ஐயனார் உருவங்களில் சேர்க்கப்பட்டு யோக சாஸ்தாவாகவும் தோற்றமளிக்கிறார். சபரிமலை சாஸ்தா திருமேனி இருகால்களையும் பத்மாசனத்தின் மீது குத்திட்டு வைத்துள்ள நிலையில் யோக பட்டத்துடன் காட்சி தருகிறது. இவ்வுருவத்திலும் இடக்கால் முட்டி மீது இடக்கரம்முட்டி படும்படியாக நீட்டித்தே காணப்படுகிறது. வலக்கரத்தில் சாட்டையில்லாமல் அபய முத்திரை காட்டி அருள் பாலிக்கும் வண்ணத்தில் விளங்குகிறது.


சுப்ரபேதாகமம் சாஸ்தாவின் வாகனமும், கொடியும் யானை என்று கூறினாலும், யானையின் உருவத்தை முற்காலச் சாத்தன் உருவங்களில் காண இயலவில்லை. கி.பி. 14ம் நூற்றாண்டு முதல் தான் சாத்தன் உருவம் யானை மீது அமர்ந்திருப்பதாகக் காணப்பெறுகிறது. தஞ்சை மாவட்டம் தோகூரிலும், வழுவூரிலும் ஐயன் யானை மீது அமர்ந்திருப்பதாகக் காணப்படுகிறது. கேரளாவில் திருவனந்தபுரத்தில் உள்ள சாஸ்தான் கோட்டை என்னும் கோயிலில் சாஸ்தா வலக்கையில் அம்பையும் இடக்கையில் வில்லையும் ஏந்தியவராய் நிற்கும் நிலையில் தோற்றமளிக்கிறார். தமிழகத்தில் இதுவரை நிற்கும் தோற்றத்தில் உள்ள சாத்தன் உருவம் கண்டறியப்பட்டதாகத் தெரியவில்லை.

சங்க காலத்தில் 'சாத்தன்' என்று வழிபட்ட இத்தெய்வம் முற்காலச் சோழர் காலத்திலிருந்து ஐயனார் என்று வழிபட்டதாகத் தெரிகிறது. புதுக்கோட்டை மாவட்ட பூலாங்குறிச்சியில் காணப்பெறும் முதலாம் பராந்தகன் காலத்தியக் கல்வெட்டின்படி திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர் ஐயனாருக்குச் சிலை அமைத்து வழிப்பட்டிருக்கின்றனர். திருச்சி மாவட்டம் குண்டூரில் கண்டறியப்பட்டுள்ள ஒரு ஐயனார் சிற்பத்தின் பீடத்தில் கல்வெட்டும் பொறிக்கப்பட்டுள்ளது. அக்கல்வெட்டு அவ்வையாரைக் குலாவன் சாத்தன் என்பான் கொடையாக வழங்கியதைத் தெரிவிக்கிறது. இக்கல்வெட்டு கி.பி.10 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. விழுப்புரம் மாவட்டம் அகரத்தில் ஐயனாருக்குத் தனிக்கோயில் எழுப்பப்பட்டிருந்தது முதலாம் இராசராசன் கல்வெட்டால் புலனாகிறது. திருச்சி மாவட்டம் முசிறி வட்டம் திருப்பத்தூரிலும் ஐயனாருக்குக் கோயில் அமைக்கப் பெற்றிருக்கிறது.

பாண்டிய மன்னர் காலத்தில் 'சாஸ்தா' என்ற பெயரில் ஐயனார் வழிபடப்பட்டிருக்கிறார் என்பது மற்றொரு கல்வெட்டால் உணர முடிகிறது.

தொடக்கக் காலத்தில் வணிகர்களால் காவல் தெய்வமாக மட்டுமே வழிபடப்பட்ட சாத்தன் பின்னர் அரியரபுத்திரனாக ஆக்கப் பெற்று இந்துக் கடவுளர் கூட்டத்தில் இணைந்த பின்னர் அனைத்துத் தரப்பு மக்களாலும் வழிபடப்படும் தெய்வமாக ஆகியிருக்கிறார். பாண்டிய நாட்டில் 'சாஸ்தா' என்ற பெயரில் பின்னாளில் வழிபடப்பட்டவர் தொடர்ந்து இந்நாள் வரை கேரள மாநிலத்தில் சாஸ்தா என்னும் ஐயப்பனாகவும் தமிழகத்தில் ஐயனார் என்னும் காவல் தெய்வமாகவும் பெரும் புகழோடு தொழப்படுகிறார்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★



# கைத்தறித்துறை

★ 5 இலட்சம் நெசவாளர் குடும்பங்களின் துயர்துடைத்திட, கைத்தறித்துணிக்கு ஆண்டு முழுவதும் விற்பனையில் 20 சதவிகிதம் தள்ளுபடி செய்து முதலமைச்சர் கலைஞர் அவர்களால் ஆணையிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

★ பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தமிழகத்திலுள்ள ஏழை, எளிய மக்களுக்கு, 72.75 இலட்சம் இலவசச் சேலைகளும், 68 இலட்சம் இலவச வேட்டிகளும், சுமார் ரூ.95 கோடி செலவில் வழங்கப்பட்டுள்ளன.

★ பள்ளி சிறார்களுக்கு இலவசச் சீருடை வழங்கும் திட்டத்தின்கீழ், தேவைப்படும் சீருடைகள் உற்பத்தி செய்யும் பணி மார்ச் '98க்குள் முடிவடைந்து, துணிகள் தயார் நிலையில் இருக்கும் என்பதுடன், சீருடைகள் பள்ளி சிறார்களுக்கு 1998-99 ஆம் கல்வி ஆண்டு துவக்கத்திலேயே விநியோகம் செய்யப்படும்.

★ சென்னை எழும்பூரில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் வளாகத்தில் புதிதாக "கைத்தறி விற்பனை வளாகம்" ஒன்று 27.10.97 அன்று முதலமைச்சர் கலைஞரால் திறந்துவைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

# எங்கள் ஊர் பிரச்சினை

☹ **பிரச்சினை :**

**த**ருமபுரி மாவட்டம் அரூர் தாலுக்காவைச் சேர்ந்த சட்டையம்பட்டி எங்கள் ஊர். ஊத்தங் கரையிலிருந்து தீர்த்தமலைக்கு யூ6 (U6) என்ற நகரப் பேருந்து இரண்டு நடை மட்டும் (காலை 9.15 க்கும், மாலை 3.40க்கும்) வருகிறது. எங்களுக்கு ஊத்தங்கரைக்குப் போகவோ அல்லது தீர்த்தமலைக்குப் போய் வரவோ சிரமமாக இருக்கிறது. எனவே, மதியம், இரவு என இன்னும் இரண்டு நடை கூடுதலாகப் பேருந்தை இயக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

- இரா. செல்வம்
சட்டையம்பட்டி, தருமபுரி மாவட்டம்

☺ **தீர்வு :**

யூ6 (U6) நகரப் பேருந்து 4 வழித்தடங்களில் கீழ்க்கண்டவாறு இயங்கிவருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஊத்தங்கரை | - ஈ. அக்ரஹாரம் | 4 நடைகள் |
| 2. | ஊத்தங்கரை | - தீர்த்தமலை | 6 நடைகள் |
| 3. | ஊத்தங்கரை | - அ. பள்ளத்தூர் | 2 நடைகள் |
| 4. | ஊத்தங்கரை | - செட்டிப்பட்டி | 2 நடைகள் |

ஊத்தங்கரை - தீர்த்தமலை தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்டு வந்த நகரப்பேருந்து தடம் எண். யூ6 பொது மக்களின் கோரிக்கைக்கிணங்க கடந்த 13.8.97 முதல் ஊத்தங்கரையில் இரவு (7.25) மணிக்குப் புறப்பட்டு தீர்த்தமலை சென்று வரும்படி இரவு கூடுதல் நடை இயக்கப்பட்டு வருகிறது.

தற்போது இயக்கப்படும் 6 நடைகளும் மக்கள் பயணிக்கும் அளவு 40 விழுக்காடு தான் உள்ளது. இந்நிலையில் மேலும் கூடுதல் நடை இயக்கிட இயலாது. பயணிகளின் உபயோகிக்கும்கொள்ளளவு அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் நடைகள் இயக்கிட பரிசீலனை செய்யப்படும் எனத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார் என்பதைக் தெரிவித்துக் கொள்கிறேன்.

- பை. கிருஷ்ண செட்டி, வட்டாட்சியர்
அரூர், தருமபுரி மாவட்டம்.

☹ **பிரச்சினை :**

**எ**ங்கள் ஊர் எடுத்துக்காட்டி சாத்தனூர், செம்பொனார் கோயில் ஒன்றியம், நாகை காயிதே மில்லத் மாவட்டம். இங்கிருந்து செம்பொனார் கோவில் செல்வதற்கு சோழன் போக்குவரத்துக் கழக நகரம், பேருந்து தடம் எண்.30, 30ஏ மட்டும் செல்கிறது. இந்த இரண்டு பேருந்துகளும் சரியான நேரத்திற்கு வருவதில்லை. இதனால் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்துக்குச் செல்லும் அலுவலர்கள் மற்றும் பொது மக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். அதுமட்டுமல்லாமல் எங்கள் ஊரின் பக்கத்துக் கிராமமான திருக்களாச்சேரியில் மேல்நிலைப்பள்ளி உள்ளது. அங்கு படிக்கும் மாணவ மாணவிகளுக்கு இந்த குறிப்பிட்ட நகரப் பேருந்துகளில் தான் இலவச பஸ் பாஸ் அனுமதிக்கப்படுகிறது. இந்தப் பேருந்துகள் சரிவர வராததால் மாணவ மாணவிகள் ஏமாற்றம் அடைகிறார்கள்.

ஆயப்பாடி, திருக்களாச்சேரி, எடுத்துக்காட்டி சாத்தனூர், சங்கரன் பந்தல் கிராம மக்கள் செம்பொனார் கோயில் செல்வதற்கு 30, 30ஏ பேருந்துகள் மட்டும் நம்ப வேண்டியிருப்பதால் அதனைச்சரியான நேரத்திற்கு இயக்குமாறும் மேற்கண்ட வழித் தடங்களில் மேலும் ஒரு பேருந்தினை இயக்கி உதவி புரியும்படியும் அன்புடன் வேண்டுகிறோம்.

- ஏ. ராஜ்குமார்,
எடுத்துக்காட்டி சாத்தனூர்
தரங்கம்பாடி வட்டம், நாகப்பட்டினம் மாவட்டம்.

☺ **தீர்வு :**

**எ**டுத்துக்காட்டி சாத்தனூர் வழியாகக் கீழ்க்கண்ட வாறு பேருந்துகள் இயங்கி வருகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1. | மயிலாடுதுறை - பொறையார் (வழி) செம்பொனார் கோவில், அரும்பாக்கம், சங்கரன்பந்தல் | நகரத்தடம் எண். 30, 30ஏ | 24 நடைகள் |
| 2. | மயிலாடுதுறை - ஆயப்பாடி (வழி) மங்கநல்லூர், பெரம்பூர், சங்கரன்பந்தல் | தனியார் நகரப் பேருந்து எண்.15 | 12 நடைகள் |
| 3. | மயிலாடுதுறை - பொறையார் (வழி) செம்பொனார் கோவில், அரும்பாக்கம், சங்கரன்பந்தல் | தனியார் புறநகர் பேருந்து | 4 நடைகள் |
| 4. | நாகப்பட்டினம் - மயிலாடுதுறை (வழி) காரைக்கால் - பொறையார், சங்கரன்பந்தல் பெரம்பூர், மங்கநல்லூர் | கழகப் புறநகர் 5 பேருந்துகள் | 30 நடைகள் |
| 5. | பொறையார் - கும்பகோணம் (வழி) சங்கரன்பந்தல், பெரம்பூர், மயிலாடுதுறை | தனியார் பேருந்து | 6 நடைகள் |

மேற்கண்ட பேருந்தில் நடைகளைப் பயன்படுத்தி அப்பகுதி வாழ் மக்கள் பயணம் செய்யலாம் என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொது மேலாளர் (இயக்கம்),
அரசு போக்குவரத்துக் கழகம், தஞ்சாவூர் மாவட்டம்.

☹ பிரச்சினை :

எங்கள் ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கோத்திராப்பட்டி ஆகும். இங்கு பேருந்து வசதி இல்லை. பேருந்திற்காக எல்லை சுற்றி சுமார் 8 கிலோமீட்டர் செல்ல வேண்டி உள்ளது. இதற்காகப் பல அதிகாரிகளிடம் மனு கொடுத்தும் ஒன்றும் பயனில்லை. எனவே தாங்கள் இப்பிரச்சினை தீர, தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- ப.சி. அழகப்பெருமாள்
கோத்திராப்பட்டி அஞ்சல், இலுப்பூர் வழி,
புதுக்கோட்டை மாவட்டம்

☺ தீர்வு :

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தாலுகா, கோத்திராப்பட்டி கிராமம், கொடும்பாளூர், இலுப்பூர் பிரதான சாலையில் அமைந்துள்ளது. மேற்படி கோத்திராப்பட்டி வழியாகத் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் குடந்தை கோட்டம், 4 பேருந்து இரண்டு நடைகளும், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம், குடந்தை கோட்டம் - 2 நகரப் பேருந்து ஒரு நடையும் இயக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- க. சண்முகம், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித் தலைவர்,
புதுக்கோட்டை மாவட்டம்.



☹ பிரச்சினை :

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன் சத்திரம் வட்டம் சத்திரப்பட்டி என்ற ஊரில் தனியார் பள்ளி சீனிவாசன் மேல்நிலைப்பள்ளி சுமார் 8 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இங்கு சுமார் 900 மாணவியர்கள் பயில்கின்றனர். குறிப்பாக ப்ளஸ்டு-வில் 150 மாணவியர் பயில்கின்றனர். இந்தப் பள்ளியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியை 7 பேர் பணியாற்றுகின்றனர். இவர்கள் 8 ஆண்டுகளாகப் பணியாற்றுகின்றனர். இதுவரை இவர்களுக்கு நிர்வாகம் சம்பளம் வழங்காததால் இந்த ஆசிரியர் 7 பேர்களும் வேலை நிறுத்தம் செய்து கொண்டு வகுப்புக்குச் சென்று +2விற்கு பாடம் எடுப்பதில்லை. மாணவியர்கள் சிறுசிறு போராட்டம் செய்து பார்த்தனர். நிர்வாகம் அவர்களைச் சமாதானப்படுத்தி வகுப்புக்கு செல்ல வைத்து விடுகிறது. குறிப்பாக +2 மாணவியர்களுக்குப் பொதுத்தேர்வு நடந்தால் இவர்கள் பயிலாமல் ஆசிரியர்கள் பாடம் சரிவர நடத்தாமல் எப்படி தேர்வு எழுத முடியும்? தாங்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

- பெற்றோர் சார்பாக, பி. தங்கராஜன்
வீரலப்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்

☺ தீர்வு :

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி சீனிவாசன் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்கப்பட்டு, ஆசிரியர்களால் பாடம் சரியாக நடத்தப்பட்டு, பள்ளி நன்றாக நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் மாவட்டம்.

☹ பிரச்சினை :

சிதம்பரத்தின் மிகவும் முக்கியமான வீதிகளில் ஒன்று வடக்கு வீதியாகும். காரணம் இங்கு தலைமை அஞ்சல் நிலையம், நகராட்சிப் பள்ளிகள் மற்றும் வெளியூர்களில் இருந்து வரும் எல்லாப் பேருந்துகளும், இந்த வடக்கு வீதி வழியாகத்தான் செல்லும். அவ்வளவு போக்குவரத்து நிறைந்த வீதியில் இரு புறங்களிலும் கடந்த 4 ஆண்டுகளாக லாரிகள் நிற்பதால் தினசரி விபத்து ஏற்பட்ட வண்ணம் உள்ளது. சாலையில் செல்லும் பொதுமக்கள், சாலை ஓரம் ஒதுங்கக்கூட இடம் இல்லாததால் பலமுறை உயிர்ப்பலி ஏற்பட்டபடி உள்ளது. எனவே, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

- சீதாராமன், சிதம்பரம்

☺ தீர்வு :

சிதம்பரம் வடக்கு வீதியில் தற்போது லாரிகள் நிறுத்தப்படாமல் போக்குவரத்துக் காவலர்களால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. போக்குவரத்து விதிமுறைகளை மீறுவோர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதன் மூலம் தற்போது வடக்கு வீதியில் லாரிகள் நிறுத்தப்படுவதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- செ. சைலேந்திரபாபு, இ.கா.ப.,
காவல்துறை கண்காணிப்பாளர்,
கடலூர் மாவட்டம்.



😐 பிரச்சினை :

எங்களது வட்டாரத்தில் சுமார் 10 சிற்றூர்கள் தன்னகத்தே சுமார் 12000 மக்கள்தொகையைக் கொண்டுள்ளது. எங்களுக்கு ஒரு கிளை நூலகம் பிக்கட்டியில் பொது மக்களால் 0.10 சென்ட் பூமி இனமாக கொடுக்கப்பட்டு சுமார் 4 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பில் சொந்தமாகக் கட்டடமும் அரசால் கட்டப்பட்டு தரப்பட்டுள்ளன. மேற்படி கிளை நூலகமாவது 1510 அங்கத்தினர்களுடன் சுமார், 12,000 புத்தகங்களுடன் 10 தினசரிகளுடனும் மற்றும் 30 வார மாத இதழ்களுடனும் இயங்கிக் கொண்டு வருகிறது. தினந்தோறும் 150 வாசகர்களுடன் 40க்கு மேல் புத்தகங்கள் வெளியில் கொடுத்தும் இயங்கிக் கொண்டு இருக்கிறது. பொதுமக்களிடத்தில் 12 புரவலர்களையும் ரூ.14,060-க்கான நன்கொடை பொருள்களையும் பெற்றுள்ளது. இவ்வளவு சௌகரியம் இருந்தும் ஒரே ஒரு நூலக அலுவலர் இருப்பதால் விடுப்பு நாட்களில் நூலகம் மூடிக் கிடக்கும், அவல நிலை ஏற்படுகிறது மற்றும் நூலகத்திற்குச் சுற்றிலும் நாலாபுறமும் தடுப்புச் சுவர் இல்லாததினால் பல விதமான அசுத்தங்கள் ஏற்பட ஏதுவாகிக் கொண்டுள்ளது. எனவே, தாங்கள் எங்களது நூலகத்திற்கு மேலும் நூலக உதவியாளர் ஒருவரையும், நூலகத்தைச் சுற்றிச் சுத்தமாக இருக்க ஒரு தடுப்புச் சுவரோ அல்லது தடுப்புக் கம்பி வேலியோ அமைத்துக் கொடுக்க சம்பந்தப்பட்ட துறையினருக்குத் 'தமிழரசு' இதழின் மூலம் அனுப்பி ஆவன செய்து கொடுக்கவேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறோம்.

- பி.எம். கணேசன்
புரவலர் மற்றும் தலைவர்,
பிக்கட்டி கிளை நூலக வளர்ச்சிக்குழு
பிக்கட்டி அஞ்சல், நீலகிரி.

😐 தீர்வு :

பிக்கட்டி கிளை நூலகத்திற்கு நூலகர் ஒருவர் மட்டுமே பணியாற்றுகிறார். அரசால் நூலகர் பணியிடம் மட்டுமே இக்கிளை நூலகத்திற்கு அனுமதியளிக்கப் பட்டுள்ளது. நூலகர் ஈட்டிய விடுப்பு / மருத்துவ விடுப்பில் செல்லும்போது இந்நூலகம் செயல்பட மாற்று ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. நூலகர் தற்செயல் விடுப்பில் முன்னறிவிப்பின்றிச் செல்லும் சமயத்தில் நூலகம் மூடும் நிலை உருவாகின்றது. பிக்கட்டி கிளை நூலகத்திற்குச் சுற்றுச் சுவர் கட்டும் பணி விரைவில் துவங்கப்படுமென பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- இரா. கண்ணன்,
பொது நூலக இயக்குநர்

😐 பிரச்சினை :

மழைக் காலம் வந்துவிட்டால், திருச்சி மாவட்டம் பீமநகரில் உள்ள பழைய அஞ்சல் நூலகம் சாலை, மேட்டுத் தெரு, தெற்கு யாதவதெரு, அமெரிக்கன் மருத்துவமனை பின்புறம் ஆகிய இடங்களில் 5 அடி ஆழம் நீர் தேங்கிவிடுகின்றது. இதனால் அங்குள்ள குடிசை வீடுகள் எல்லாம் மழைநீர் உள்ளே புகுந்துவிடுகிறது. மழைநீர் மட்டுமானாலும் பரவாயில்லை. மழைநீருடன் சேர்ந்து, சாக்கடைத் தண்ணீர், மனிதக்கழிவுகள் ஆகியவையும் சேர்ந்து வீட்டிற்குள் புகுந்து நாங்கள் படும் வேதனை சொல்லிமாளாது. எனவே போதிய சாக்கடை வசதி செய்து, எங்களின் இந்த நெடுநாள் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு தங்களை மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். இதைக் குறித்து பல மனுக்கள் அனுப்பியும் எவ்வித பலனுமில்லை.

- பொதுமக்கள்
பீமநகர், திருச்சி.

😊 தீர்வு :

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, பீமநகர் அஞ்சலகச் சாலை, மேட்டுத்தெரு, தெற்கு யாதவ தெரு, அமெரிக்கன் மருத்துவமனை பின்புறம் ஆகிய இடங்களில் மழை நீரினால் சாக்கடைக்குள் தேங்கி இருக்கும் மண்ணை அப்புறப்படுத்தி தடையின்றித் தண்ணீர் ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்ட பணிக்கு ரூ.23,000/-க்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் இப்பணி முடிக்கப்படும்.

- பி. முத்துவீரன், எம்,எஸ்ஸி,
ஆணையர், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி - 1.

😑 பிரச்சினை:

எங்கள் ஊர் வேலூர் மாவட்டம், ஆர்க்காடு வட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சிக்குட்பட்ட சின்ன உப்புப்பேட்டை கிராமம். இக்கிராமத்தில் கடந்த 6 மாத காலமாக 7-ல் 3 தெருவிளக்குகள் எரிவதில்லை. இது குறித்து, நேரில் சொல்லியும், மனுக்கொடுத்தும் எவ்விதப் பலனும் இல்லை. தற்பொழுது மழைக்காலம் ஆகையால், இரவில் பாம்பு மற்றும் விஷப்பூச்சிகளின் தொந்தரவு அதிகமாக உள்ளது. தெரு விளக்குகள் இருந்தும் எரியாததால் குழந்தைகள், நோயாளிகள், வயதானவர்கள், மற்றும் வேலைக்குச் செல்லும்

பெண்கள் எனப் பலரும் “கும்” இருட்டில் நடமாடப் பயப்படுகிறார்கள். எனவே, எரியாத விளக்குகளை எரியச் செய்து எங்கள் கிராமத்திற்கு ஒரு விளக்கு ஏற்றத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி தங்களை மிகத் தாழ்மையுடன் வேண்டி கேட்டுக் கொள்கிறோம்.

-கிராமப் பொது மக்கள்,
சின்ன உப்புபேட்டை, வேலூர் மாவட்டம்

☺ தீர்வு:

வேலூர் மாவட்டம், விளாப்பாக்கம் பேரூராட்சி மதுரா சின்ன உப்புப்பேட்டை கிராமத்தில் 40 வீடுகள் உள்ளன. இங்கு சோடியம் ஆவி விளக்கு-1, மற்றும் 4' குழல் விளக்குகள் 6 ஆக மொத்தம் 7 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளது. இவற்றில் எரியாமல் இருந்த 4' குழல் விளக்குகளில் மேற்படி வார்டு உறுப்பினர் முன்னிலையில் பொருத்தப்பட்டு எரிய வைக்கப்பட்டது. தற்போது சின்ன உப்புப்பேட்டை கிராமத்தில் உள்ள அனைத்துத் தெருவிளக்குகளும் நல்ல நிலையில் எரிகிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

-எஸ்.திருஞானசம்பந்தன்,
பேரூராட்சிகள் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
வேலூர்-9.

😐 பிரச்சினை:

பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம் குண்டடத்தில் கிளை நூலகம் ஒன்று உள்ளது. கடந்த 36 ஆண்டுகளாக வாடகைக் கட்டடத்திலேயே செயல்பட்டுவருகிறது. குண்டடம் கிராமத்தில் சுமார் 10,000 பேர் வசிக்கின்றனர். குண்டடம் மற்றும் சுற்றுப்புறக் கிராமங்களிலிருந்து வாசகர்கள் குண்டடம் கிளை நூலகத்திற்கு வந்து பயன் பெறுகின்றனர். நூலகத்தில் போதுமான இடவசதி இல்லை.

தற்போது தமிழக அரசு குண்டடம் பஸ்நிலையம் அருகே உள்ள கால்நடைத் துறையைச் சேர்ந்த இடத்தில் 5 செண்ட் நிலத்தை நூலகத்துறை வழங்கியுள்ளது. அவ்விடத்தில் உடனடியாகக் கட்டடம் கட்டி குண்டடம் கிராம நூலக வாசகர்களின் நீண்டநாள் கனவை நனவாக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

-அன்பு கார்த்திகேயன்,
குண்டடம்.

☺ தீர்வு:

பெரியார் மாவட்டம் தாராபுரம் வட்டம் குண்டடத்தில் உள்ள கிளை நூலகத்திற்குக் கட்டடம் நன்கொடையாகப் பெற, மாவட்ட நூலக அலுவலரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-இரா.கண்ணன்,
பொது நூலக இயக்குநர், சென்னை

😐 பிரச்சினை:

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் தாலுகா ஆடுதுறைக்கு நேர் கிழக்கே 3 கி.மீ. தொலைவில் சாத்தனூர் கிராமம் உள்ளது. எங்கள் கிராமம் மற்றும் உள் கிராமங்களான மல்லார் பேட்டை, கரைகண்டம், பேராவூர், கல்லூர், ஆரியங்கூத்தலூர், திருக்குலம்பியம் போன்ற பல ஊர்களுக்கு நேரடி பஸ் வசதி இல்லை. கோமல் ஆடுதுறை மெயின்ரோடில் சென்று கொண்டிருந்த டவுன் பஸ் எண் 53ல் சில நாட்களாக பேருந்துகள் மாற்றம் செய்யப்பட்டு ஒன்றுவிட்ட நடைகள் மங்கநல்லூர் சென்றுவருவதால் நடைகள் குறைக்கப்பட்டுள்ளது. இடைப்பட்ட நேரங்களில் தனியார் வண்டிகள் பயணிகளை அதிகக் கட்டணத்திற்கு ஏற்றி வருகிறார்கள். இதனைத் தவிர்க்க, ஆடுதுறை-கும்பகோணம் செல்லும் எண் 1 நகர பேருந்துகளைக் கோமல் அல்லது பேராவூர் வரை இயக்கினால் மேற்கண்ட குக்கிராம மக்கள் அனைவரும் நகரத்திற்குச் சென்றுவர ஏதுவாகும். எனவே, மேற்கண்ட நகரப் பேருந்துகளை இயக்கித்தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

- கிராமப்பொதுமக்கள்,
சாத்தனூர்

☺ தீர்வு:

கும்பகோணம் நகரத் தடம் எண் 53ல் கும்பகோணம்-கோமல் தடத்தில் 12 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. தற்போது, கோரிக்கைக்கிணங்க கும்பகோணம் - மங்கநல்லூர் (வழி) கோமல் 8 நடைகளும், கும்பகோணம் - கோமல் 4 நடைகளும் இயக்கப்பட்டு வருகிறது. எனவே, கோமலுக்கு இயக்கப்பட்ட நடைகள் குறைக்கப்படவில்லை. மேலும், கும்பகோணம்-பேராவூர்-கோமல் வழியாகப் பொறையார் வரை ஒரு புறநகர் பேருந்தும் இயக்கப்பட்டு வருகிறது.

- பொது மேலாளர் (இயக்கம்) ,
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்,
கும்பகோணம்.

எமது நோக்கம் - கலையைக் கெடுத்தலுமன்று, இலக்கியத்தை அழித்தலுமன்று; கலைப்புரட்சி மூலம் இன எழுச்சி, இன விடுதலை கோருவதேயாகும்!

**- பேரறிஞர் அண்ணா**

# சேவலும் சேயிழையும்

- கவிஞர் சாமி பழனியப்பன்

**"கடலே இரையாதே**
**காற்றே நீ வீசாதே**
**நிலவே எரியாதே - என்**
**நீலவண்டார் வருமட்டும் !"**

- என்று, பிரிவுத்துயருக்கு உள்ளான பெண் ஒருத்தி, கடலுக்கும் காற்றுக்கும், நிலவுக்கும் கட்டளையிட்டதாக நாட்டுப் பாடல் ஒன்று நிலவுகிறது. இலங்கை மட்டக் களப்புப் பகுதியில்! கடலும், காற்றும், நிலவும் அந்தக் காதலியின் கட்டுப்பாட்டுக்கு - ஆணைக்கு உட்பட்டனவா?

இந்தக் கடலுக்கு உறக்கமிருக்காதா? ஏன் இப்படி சொல்லுகிறது? இந்த இரைச்சல் அடங்காதா? என் காதலரின் பிரிவால், ஆலையிட்ட கரும்பாக அவதியுறும் இந்த இரவுப் பொழுது விடியாதா? பொழுதின் விடியலை உணர்த்துகிற - நான் வளர்த்த இந்தக் கோழி கூவ மறுக்கிறதே! அந்தக் கோழியின் வாயை மண்ணாங் கட்டி அடைத்துக் கொண்டதோ?

**"ஆழிவாய்ச் சத்தம்**
**அடங்காதோ நான் வளர்த்த**
**கோழிவாய் மண்கூறு**
**கொண்டதோ ?........"**

- எனப் பிரிவுத் துயருக்கு உள்ளான பெண் ஒருத்தி பேசுவதாகத் "தனிப்பாடல்" ஒன்று உண்டு.

இப்படிப் பிரிவுத் துயருக்கு உள்ளான பேதைப்பெண் கடலின் இரைச்சலை வெறுக்கிறாள் - காதலன் வராமையால் கோழி கூவவில்லையே என்று வேதனைப் படுகிறாள்.

ஆனால், தம் காதலனோடு இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டிருக்கும் போது, அந்தக் காதலியர், அந்த இன்ப இரவு நீடிக்க வேண்டும் - பொழுது விடிந்துவிடக்கூடாது; அந்தப் பொழுதின் விடிவை நமக்கு உணர்த்துகிற கோழி கூவாமலேயே தூங்கிக் கிடக்க வேண்டும் என்று விரும்புகின்றனர். அப்படி, கோழி கூவிவிட்டால், அந்தக் கோழியின் மீது எவ்வளவு கோபம் வரும் தெரியுமா? அப்போது, "இந்தக் கோழியைக் கொல்லுங்கள், - சுட்டுத் தள்ளுங்கள் - அடுத்த ஆண்டு விடியும் வரை இந்த இரவுப் பொழுது விடியாமலே நீடிக்கட்டும்" என்கிறார்கள். இதனை -

**"எப்பொழுதுமே**
**கூவிக்கொண்டிருக்கும்**
**கோழியைக் கொல்லுங்கள்;**
**பொழுது புலர்வதை**
**முன்னரே தெரிவிக்கும்**
**கோழியைச் சுட்டுத் தள்ளுங்கள் -**
**அடுத்த ஆண்டு விடியும் வரை**
**இரவு தடைப்படாமலிருக்கும் படியாக !"**

- என்று சீனாவின் தென்பகுதியிலே வழங்குகிற பிரபலமான நாட்டுப்பாடல் ஒன்று.

தெலுங்கு இலக்கியத்திலே, இத்தகைய நயமான அகத்துறைப் பாடல் ஒன்று உண்டு.

காதலனும், காதலியும் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டிருக்கின்றனர்; பொழுது புலர்ந்ததையே அவர்கள் அறியவில்லை; சேவல் கூவுகிறது. காதலன் துணுக்குற்று, காதலியை இறுக அணைத்துக் கொள்ளுகிறான். அந்தக் காதலி பேசுகிறாள். : "ஏன் இப்படித் துணுக்குறுகிறீர்கள்? இப்பொழுது நீங்கள் வேறொருத்தியின் வீட்டிலா இருக்கிறீர்கள்? உங்கள் வீட்டில்தான் இருக்கிறீர்கள்! இது உங்கள் வீடுதான்!" என்று நயமாக . கேலியாகச் சொல்லுகிறாள்.

**"சேவல் கூவியதும்**
**துணுக்குற்று அணைத்துக் கொள்கிறீர் !**
**இப்போது நீர்**
**எவளோ ஒருத்தியின்**
**இல்லத்தில் இல்லை !**
**இது உங்கள் வீடுதான்"**

- என்பது, தெலுங்கு இலக்கியத்தில் உள்ள அகத்துறைப் பாடல்.

இத்துறையில், தமிழ் இலக்கியத்தில் ஒரு தனிப் பாடலைப் பார்க்கலாம்.

தமிழ்நாட்டுப் பெண் ஒருத்தி; அவளது காதலன் எத்தகைய சிறப்புடையவன் என்பதை அவளே சொல்லுகிறாள். "தா" என்று கேட்டவர்க்கு இல்லையென்னாது அள்ளித் தருகின்ற வள்ளன்மை - உடையவன் -



அத்தகைய வனுடன் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டு, இன்பநலம் துய்க்கின்றாள். அந்த இன்ப இரவு, வரையாது நீடிக்க வேண்டும் என்று அவள் விரும்புகிறாள்.

திடீரென்று கோழி கூவத் தொடங்கிவிட்டது. இன்று போனாலென்ன, நாளை இருக்கிறதே என்றா அந்த நேரத்தில் அமைதி கொள்ளமுடியும்?

கோழியின் மீது அடங்காத கோபம்! இது அழகியதொரு வண்ணச் சேவல்! எதுவாக இருந்தால் என்ன? கோபம் கோபந்தான்! பொழுது விடிந்தது விடிந்ததுதான்.

மறுநாள் காலை, தன் மனத்துக்குள்ளேயே இந்த நிகழ்ச்சியைக் கூறி ஆறுதல் பெற முயற்சிக்கிறாள். எனினும், அவளது கோபமும் அடங்கவில்லை - தாபமும் அடங்கவில்லை.

"இன்ப இரவைப் போவென்று சொல்லிச் சிறகடித்துக் கூவி, காலைப் பொழுதை வாவென்று அழைப்பதற்காகவா நான் இந்த வண்ணச் சேவலை அருமையாக வளர்த்தேன்? எவ்வளவு கொடுமை!

"தா" . என்றவர்க்குத் தருகின்ற எனது காதலரின் மலைமீது கொண்டுபோய் வைத்து, இந்தச் சேவலின் வாயைக் கிழித்துவிடுவேன். ஆனால், இதனை இவ்வளவு அருமையாக அன்பாக வளர்த்தோமே என்பதால்தான் அவ்வாறு செய்யாமல் பொறுத்துக் கொண்டேன் என்கிறாள். தலைவியின், பல்வேறு உணர்வுகளையும் படம் பிடித்துக் காட்டும் பாடல் இதோ,

**"போவென் றிரவைச்**
**சிறகால் அடித்துப்**
**பொழுதை இங்கே**
**வாவென் றழைப்பதற்**
**கோவளர்த் தேன் இந்த**
**வண்ணச் சேவலை?**
**தாவென் றவர்க்குத்**
**தருமென் தலைவன்**
**தடஞ் சிலம்பில்**
**ஆவென்ற வாய்கிழிப்**
**பேன்பொறுத் தேன்வளர்த்**
**தேனென் பதால்!"**

இத்தகைய வேதனை உணர்வுகளும், அதனை வெளிப்படுத்தலும் பெண்பாலரிடத்து மட்டும் தான் என்பதில்லை; ஆண் பாலரிடத்தும் உண்டு என்பதை 'The Sun Rising' என்ற ஆங்கிலப்பாடல் நமக்கு உணர்த்துகிறது. அதுவும், சேவல் மீது மட்டுமல்லாமல், காலையில் உதித்தெழும் கதிரவன் மீதும் அவனுக்குக் கோபம் வருகிறது.

பள்ளியறைச் சாளரத்தின் வழியே பகலவன் தனது பொற்கதிர்களைப் பாய்ச்சுகிறான். இதைக் கண்ட காதலனின் உள்ளம் கனன்றெழுகிறது. உடனே, அந்தப் பொற்சுடரை 'முட்டாள்' என்றும், 'கட்டுக்கடங்காத பயல்' என்றும், 'முரட்டு வீணன்' என்றும் வாய்க்கு வந்தபடி திட்டித் தீர்க்கிறான். அவ்வளவுதானா? அதற்கு அறிவுரையும் கூறுகிறான். 'நீ பள்ளிச் சிறுவரையும், கிராமப்புறத்து எறும்புகளையும் போய் எழுப்பு' என்கிறான். 'காதலரின் நேரம் எதற்கும் கட்டுப்பட்டதன்று; காதலர்க்கு நாழிகையும், நாளும், வாரமும், மாதமும் ஏது?' என்று கேட்கிறான். மிகச் சிறந்த நாடகக் காட்சி போன்றில்லையா? இது.

**'ஓய்வற்று உழலும் முட்டாளே!**
**கட்டுப்படாத கதிரவனே!**
**ஏனிப்படி சாளரத்தின் ஊடேவந்து**
**நேரத்தை நினைவூட்டுகிறாய்!**
**விதிப்படி ஆடும் முரட்டு வீணனே!**
**தாமதமாகப் பள்ளிசெல்லும்**
**சிறுவரைப் பார்த்து விரட்டு!**
**வேட்டைக்காரனைத் தட்டியெழுப்பி**
**வேந்தருடன் அனுப்பிவை!**
**நாட்டு எறும்புகளை**
**அறுவடைக் களத்திற்கு அனுப்பிவை!**
**ஆனால்,**
**காதலரின் நேரம் உனக்குக்**
**கட்டுப்பட்டதன்று**
**காதலர்க்கு நாழி ஏது? நாளேது?**
**மாதம் ஏது?'**

இவற்றிற்கெல்லாம் மேலாக - காலத்தால் மூத்த சங்க காலத்துப் பாடல் ஒன்றை நாம் காணலாம்.

வாழ்க்கைக்குத் தேவையான பொருளைத் தேடும் பொருட்டுக் காதலியைப் பிரிந்து சென்ற தலைவன் தன் காதலியிடம் வாக்குறுதி கொடுத்துப் போனவன், குறித்த நாளில் திரும்பிவரவில்லை. விரைவில் திரும்பி வருவதாகக் கூறிப்போன



தலைவனை இன்னும் காணவில்லையே என்று அவள் ஏக்கமுற்று, வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்து தன் தலைவன் வருகிறானா என்று பார்த்து, அவன் வராததால் மீண்டும் கதவை மூடிக் கொள்வதுமாக இருந்த நிலை மிகமிகப் பரிதாபமாக இருந்தது. அவனுந்தானென்ன? அவளைக் கண்டு, காதலின்பத்தில் மூழ்கித் திளைக்கும் ஆவலில்லாமலா இருப்பான்? என்ன செய்ய முடியும். அங்கொருவர் இங்கொருவர் ஆன மழைக்காலம். எனினும், எதிர்பாராதவிதமாக அவன் மேலும் சில நாட்கள் தங்கவேண்டியதாகி விட்டது.

பின்னர், தலைவன் திரும்பி வருகிறான். ஆம். தலைவியைக் காணும் ஆவலோடு விரைந்து வருகிறான். ஆனால், தலைவியிடம் நாம் கொடுத்த வாக்குறுதிப்படி திரும்ப முடியவில்லையே. இப்போது, நாம் காலம் தாழ்த்திப் போவதால் அவள் நம்மோடு ஆவலோடு பேசுவாளோ? அல்லது நம்மோடு பேசாமலே பிணங்கிக் கொள்ளுவாளோ என்றெல்லாம் பலவாறாக அவன் ஏக்கத்தோடு குழப்பமுற்றான். தலைவன் ஊருக்குள் திரும்பினான். அவள் வீட்டை நெருங்க நெருங்க அவன் உள்ளம் படபடத்தது.

பெரிதும் ஏமாற்றமுற்ற தலைவியோ, 'இப்படி நம்மிடம் பொய் சொல்லி, ஏமாற்றிப் பிரிவுத் துயரால் நம்மைப் பித்துப் பிடிக்கும்படி செய்துவிட்டு, அவர் அங்கே சுகமாக இருக்கிறாரே; அவர் திரும்பி வரட்டும். வந்தால் அவரோடு பேசக்கூடாது என்று தீர்மானத்தோடுதான் இருந்தாள்.

தலைவன் வீட்டுக்குள் நுழையும்போதே, 'கண்ணே எதிர்பார்க்காமல் தாமதிக்க நேர்ந்தது' என்று கூறிக்கொண்டே நுழைந்தான். அவனோடு பேசக்கூடாது என்ற தீர்மானத்தோடு இருந்த தலைவியோ, உடனே விரைந்து எழுந்து அவனை ஆரத்தழுவிக் கொண்டாள். ஆம். அவனைக் கண்டதும் எல்லாம் மறந்துபோனது. வேறு நினைவே இல்லை. அவள் உள்ளமும் பெண்ணுள்ளந்தானே.

பின், ஒருவாறாக இருவரும் ஏதேதோ பேசத் தொடங்கினர். அவள் உணவு தயாரிக்க அடுக்களைக்குப் போனாள். அவனோ வீட்டிலேயே வேறு சில வேலைகளைப் பார்க்கத் தொடங்கினான்.

உணவு தயாரானது. இருவரும் சாப்பிட்டு முடித்தனர். சிறிதுநேரத்தில் நிலா முற்றத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தனர். வந்த களைப்பில் அவனால் அதிகநேரம் பேசிக்கொண்டிருக்க முடியாமல்

'அன்பே! நேரமாயிற்று. எனக்குத் தூக்கம் வருகிறது' என்றான். தலைவி தலைவனின் குறிப்பறிந்தாள். இருவரும் படுக்கையறை நோக்கிப் பறந்தனர்.

எத்தனை நாட்கள் இருவரும் பிரிந்திருந்தனர். கொள்ளை! இன்பமோ கொள்ளை! கொள்ளை! பொழுது விடிந்ததே தெரியவில்லை.

சேவல் கூவிற்று! அது அவளுக்கு இடியொலி போல ஒலித்தது.

சட்டென்று அவள் கண்கள் சினந்தது.

அந்தச் சேவல் மீது ஆராத சினம் கொண்டாள். சினத்தின் மிகுதியால் அந்தத் தலைவி பேசுவதைப் பாருங்கள். :

**'குவிந்த - சிவந்த கொத்துக்களையுடைய**
**செங்காந்தள் மலர் போன்ற ஒளிபொருந்திய**
**அழகிய பூவைப் போலச் சிவந்த**
**கொண்டையை உடைய சேவலே !**
**கூட்டத்தோடு பொருந்தி வாழும் ஏ, சேவலே !**
**நல்ல விளைவின் பயனை அனுபவித்து**
**வாழுகின்றவர்களை**
**உடைய இவ்வூரைச் சேர்ந்த என் தலைவனோடு**
**இன்பத்தைத்**
**தரும் காதற்களிப்பில் நாங்கள் மயங்கித்**
**திளைத்துக் கிடந்தபோது,**
**எம்மை எழுப்பி, எங்கள் இன்பத்தைக் கெடுத்துத்**
**தொலைத்துவிட்டாயே !**

**வீட்டிலுள்ள எலிகளைப் பிடித்துத் தின்பதற்காக**
**இங்குவந்து, அவற்றைத் தேடி அலைகின்ற**
**காட்டுப் பூனையிடம் நீ சிக்கி, அந்தப் பூனையின்**
**குட்டிக்குச்**
**சிலநாள் வைத்திருந்து உண்ணும் உணவாகி,**
**நீ மிக்க துன்பத்தை அடைவாயாக !'**

அவள், தங்கள் இன்பத்திற்கு இடையூறு செய்த சேவல் உயிர்வதைப்பட்டுச் சாகவேண்டும் என்று பேசுவதென்றால் - அவள் இதில் எவ்வளவு துன்பமுற்றிருக்க வேண்டும்! அந்தத் துன்பத்தால் ஏற்பட்ட சினத்தின் சிகரத்திலிருந்து தலைவி பேசுவதாகக் கூறும் பாடல்தான் எவ்வளவு நயமாக உள்ளது! இந்தப் பாடல், குறுந்தொகையில் மதுரைக் கண்ணனார் பாடியுள்ளது.

அந்தக் குறுந்தொகைப் பாடல் இதோ;

**'குவியிணர் தோன்றி ஒண்பூ வன்ன**
**தொகுசெந் நெற்றிக் கணங்கொள் சேவல்**
**நள்ளிருள் யாமத்து இல்லெலி பார்க்கும்**
**பிள்ளை வெருகிற்கு அல்கிரை யாகிக்**
**கடுநவை படீஇயரோ; நீயே நெடுநீர்**
**யான ஊரன் தன்னொடு வதிந்த**
**ஏம இன்றுயில் எடுப்பி யோயே !**

இப்படிப்பட்ட பாடல்கள் தெவிட்டாத தேன்சுவைப் பாடல்கள், சங்க நூல்களில் ஏராளம்! ஏராளம்! படித்துச் சுவைப்போமாக! ★

# சங்க காலத்தில் கல்வி

சங்க இலக்கியம் 2,279 செய்யுட்களை உடையது. இவற்றை 473 புலவர்கள் இயற்றியுள்ளனர். சங்கச் செய்யுள்களின் காலத்திய பெண் பாற்புலவர்கள் 50 பேர். இவர்களன்றி 102 பெயர் தெரியாத கவிஞர்கள் உள்ளனர். சங்கச் செய்யுள்களின் கால எல்லை கி.மு.6க்கு முன் தொடங்கி கி.பி.2ஆம் நூற்றாண்டு வரை என்று கொள்ளலாம். சங்கச் செய்யுட்கள் அனைத்தும் இலக்கியத் தரத்தின் கொடு முடியை எட்டியவை என்பதில் ஐயமில்லை. எனவே தமிழில் ஆழ்ந்து எண்ணவும் எடுத்துரைக்கவும் செய்யுளாக வடிக்கவும் உரிய உயர் கல்வி அறிவை அற்றைப் புலவர்கள் எய்தி இருந்தனர் என்பது தெளிவாகிறது.

**சங்க இலக்கியங்கள் வானைப் பற்றிய அறிவியலுக்குப் பிறழ்ச்சி இல்லாத செய்தியைத் தெரிவிக்கின்றன. இக்குறிப்புகள் தமிழர் சிறந்த கணக்கறிவைப் பெற்றிருந்தனர் எனக் காட்டுகின்றன.**

சங்க இலக்கியப் பாக்கள் ஒரு குலத்தாராலோ அல்லது மேல் குலத்தாராலோ மட்டும் செய்யப்பட்டன அல்ல, பல்வேறு குலத்தாரும் இனத்தாரும் சிறந்த இலக்கியங்களைப் படைத்துள்ளனர். கபிலர், நக்கீரர் போன்ற வேளாளப் பார்ப்பார்கள், கூல வாணிகன், அறுவை வாணிகன் முதலான வணிகர்கள், கோவூர் கிழார் போன்ற வேளாளர், மருத்துவன், கணியன், கொல்லன் வண்ணக்கன் முதலான பல தொழில் அறிஞர்கள், கோப்பெருஞ்சோழன் நெடுஞ்செழியன் போன்ற மன்னர்கள், பூதபாண்டியன் மனைவியாகிய பெருங்கோப்பெண்டு முதலான அரசியர், பாரிமகளிர் போன்ற குறுநில மன்னருடைய பெண்மணிகள் பேய்மகள் இளவெயினி போன்ற வேட்டுவ மகளிர் காவற்பெண்டு போன்ற செவிலித்தாயர், வெண்ணிக்குயத்தி போன்ற குயத்தியர், காக்கைப் பாடினியார் போன்ற பாடினிப் பெண்பாற் புலவர்கள், தமிழ்க் கூத்தனார் போன்ற கூத்துக் கலைஞர்கள் அற்றை நாளில் தமிழில் எழுதிச் சிறந்துள்ளனர்.

தொடக்கப்பள்ளி ஆசிரியர் பாலாசிரியர் என்றும், உயர் கல்வி ஆசிரியர் கணக்காயர் என்றும் பண்டை நாளில் குறிக்கப்பட்டனர். நூலையோ செய்யுளையோ படைத்தவர் ஆசிரியர் அல்லது ஆசான் என்று அழைக்கப்பட்டனர்.

மேலே காட்டிய குறிப்புகள், கல்வி ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் பொதுவாக இருந்தது என்பதையும், அனைத்துத் தொழில் வழிக் குலத்தினர்க்கும் உரியதாக இருந்தது என்பதையும் தெளிவுறுத்துகின்றன.



அரசர்கள் புலவர்களை மிகவும் மதித்தனர். புலவர்க்குப் புரவலன் கவரி வீசியதாக வரும் மோசிகீரனார் செய்யுளும் மாங்குடி மருதன் தன்னைப் பாடாது விலக்கும் பழிவரக்கூடாது என்று நெடுஞ்சினம் மொழியும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் பாட்டும், இன்ன பிறவும், புரவலர் புலவர்பால் கொண்ட, அரசர் அறிஞர் மேல் கொண்ட மதிப்பைப் புலப்படுத்துகின்றன. அறிஞர் ஆசிரியர் மேல் உள்ள மிகு மதிப்பே பிற்காலத்து அவரைத் தெய்வம் எனப் போற்றும் நிலையை உருவாக்கியது.

சான்று: "மாதா பிதா குரு தெய்வம்".

அரசர், அறிஞர் மேல் கொண்டிருந்த பெரும் மதிப்பிற்குப் பல சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒரு சில ஒரு புலவனுக்கு 500 ஊர்களை அரசன் அன்பளித்தான் என்று பதிற்றுப்பத்து மொழிகிறது. கபிலரைச் சேர அரசன் ஒருவன் மலைமுடிக்கு அழைத்துச்

முனைவர் க.ப.அறவாணன்

சென்று, கண்ணுக்கு எட்டிய தூரம் உள்ள ஊர்களை அன்பளித்தான். பட்டினப்பாலை என்ற இலக்கியத்தைப் படைத்ததற்காக உருத்திரங் கண்ணனார் என்ற புலவனுக்கு 16 இலட்சம் பொன் காசுகள் மன்னனால் வழங்கப்பட்டன. மலை நாட்டில் உள்ள தோட்டி மலையில் இருந்த குறுநில மன்னன் தன்னை அணுகிய புலவருக்குத் தன் கழுத்தில் இருந்த பொன் மாலையைப் பரிசிலளித்தான். குமணன் என்ற வள்ளல் தன் தலையையே பெருந்தலைச் சாத்தன் என்ற புலவனுக்கு அளித்தான் (புறம் 165).

சில புலவர்கள் சில மன்னர்களின் அணுக்கத் தோழர்களாக வாழ்ந்தமையைச் சங்க இலக்கியங்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன. ஔவை - அதியமான்; கபிலன் - பாரி; மோசி - ஆய், பொய்கையார் - சேரமான் கணைக்கால் இரும்பொறை; மாங்குடி மருதன் - பாண்டியன் நெடுஞ்செழியன்; பிசிராந்தை - கோப்பெருஞ் சோழன், பரணர் - பேகன்.

சில மன்னர்கள் சங்க இலக்கியத் தொகுப்பிற்குக் காரணர்களாக விளங்கினர். பாண்டியன் மாறன் வழுதி துணையால் நற்றிணை தொகுக்கப்பெற்றது, பூரிக்கோ ஆணையால் குறுந்தொகை தொகுக்கப் பெற்றது. பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் உதவியால் அகநானூறு தொகுக்கப்பெற்றது. இளம்பெருவழுதி விருப்பிற்கு இணங்கப் பரிபாடல் தொகுக்கப்பெற்றது.

குறுந்தொகை 33ஆம் செய்யுள் மாணாக்கன் என்றே சுட்டுகிறது. பண்டைத் தமிழகத்துச் சிற்றூர்களில் இருந்த மன்றம் கற்குமிடமாக இருந்தது. மணிமேகலை கருத்துரையாடும் இடங்களைப் 'பட்டிமன்றம்' என்று போற்று கின்றது (காதை 2:6:1). தமிழ்ச்சங்கம் பற்றிய குறிப்புகளும் பண்டைய கல்வி ஆர்வத்தைக் காட்டுவன.

தமிழர் கல்விக்கு மிகுமதிப்பு வைத்திருந்தனர் என்பதை ஓதற் பிரிவு பற்றிய தொல்காப்பிய நூற்பாவாலும், ஓதற் பிரிவை உணர்த்தும் சான்றோர் செய்யுளாலும் அறியலாம். இளமையில் கற்கவேண்டும் என்பதை வற்புறுத்தினர். (இளமையில் கல்) திருமணத்திற்குப் பின்னும் கூட ஆடவர்கள் கற்றனர் என்பதையும் கற்பதற்காக வெளியூர் பிரிந்து சென்றனர் என்பதையும் கற்பதற்காக மூன்று ஆண்டுகள் மனைவியைப் பிரிந்து இருந்தனர் என்பதையும் 'ஓதற் பிரிவு ஒரு மூன்று ஆண்டே' என்று தொல்காப்பியம் மொழிவதால் அறிகிறோம்.

சங்ககாலத்தில் இருந்த கல்வி அறிவு, கல்வி வாய்ப்பு, கல்வி ஆர்வம், சங்க காலத்தை அடுத்த மருவிய காலத்திலும் தொடர்ந்தன. இதனைச் சமண பௌத்தர் வரவாலும், உறவாலும் விளங்கிக் கொள்ளலாம். சமண முனிவர்கள் தனித்துத் தங்கி இருந்த இடங்கள் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன. இப்பள்ளிகளில் இருந்து கொண்டு சமணத் துறவியர் ஊர்ப்பிள்ளைகளுக்கு, மொழிப்பாடமும் சமயப்பாடமும் சொல்லிக் கொடுத்தனர். எனவேதான், கல்வி அறிவு பெறும் இடம் இப்பழக்கத்தை ஒட்டிப் பள்ளி என்றும் பள்ளிக்கூடம் என்றும் போற்றப்படலாயின. கல்வி கற்றலை ஊக்குவிக்கும் முகமாக சைன மதத்தில் சாத்திரதானம் என்ற ஓர் அறம் பின்பற்றப்பட்டது. இதன்படி சைனக் குடும்பத்தினர் அனைவரும் சமய சாத்திரக் கல்வி வளர்ச்சிக்காக அறம் செய்ய வேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.



சுதந்திரத் திருநாள், விழாக்கோலத்தோடு நின்றுவிடாமல் - வேதனை தீர, வாட்டம் நீங்க, வேலையில்லாத் திண்டாட்டம் விலக, வறுமை ஒழிந்திட, விலைவாசி ஏற்றம் தாழ்ந்திட அனைவரும் பாடுபடுவோம் என்று உறுதிமொழி எடுத்துக் கொள்வோமாக!

- கலைஞர்

சங்க காலத்தில் இருந்த கல்வி ஆர்வமும் அறிவும் சங்கம் மருவிய காலத்தில் வளர்ந்தன. வலுப்பெற்றன. இதனைத் திருக்குறள் தெளிவுபடுத்துகின்றது. திருக்குறளில் இடம் பெற்றுள்ள கல்வி (அதி 40), கல்லாமை (அதி 41), கேள்வி (அதி 42), அறிவுடைமை (அதி 43) ஆகிய நான்கு அதிகாரங்களும் அவற்றில் உரைக்கப்பட்ட செய்திகளும் எடுத்துரைக்கின்றன. வாழும் உயிர்க்கு எண்ணும் எழுத்தும் கண்கள் (குறள் 392, 393), கீழ்ப்பிறந்தும் கற்றாரே சிறந்தார் (குறள் - 409); அறிவிலார் என்னுடைய ரேனு மிலர் (குறள் - 430) ஆகிய குறள் செய்திகள் கல்வி அனைவர்க்கும் பொதுவாக இருந்ததைப் புலப்படுத்துகின்றன.

திருவள்ளுவரை ஒட்டியே நாலடியார் முதலான அற இலக்கியங்கள் தொடர்ந்து கல்வியைப் போற்றுகின்றன. இப்போற்றுதல் நூற்றாண்டு தோறும் தமிழ் நீதி இலக்கியங்களில் தொடர்ந்து இடம் பெற்றிருக்கின்றது. ★

# தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்



ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படைக் காரணிகள் அந்நாட்டின் மண்வளமும் மனவளமுமே ஆகும். மண்வளத்தை முழுமையாகப் பயன்படுத்துவதற்கு மனவளமுள்ள உடல் மிகவும் இன்றியமையாதது. எனவேதான் மனிதவள மேம்பாட்டிற்குப் பல நாடுகள் அதிகக் கவனம் செலுத்திவருகின்றன. சமுதாயத்தில் வலிமை குன்றிய பிரிவினர் (Weaker Section) எனக் கருதப்படுபவர்கள் பெண்களும் குழந்தைகளும் ஆவர். ஆனால் இவர்கள்தான் மனித வளத்திற்கு அடிப்படை ஆணிவேர். இவர்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவது ஒளிமிக்க எதிர்காலத்தை உருவாக்க வழிவகுக்கும்.

பெண்களில், தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டியவர்கள் கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள். குழந்தைகளில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேணடியவர்கள் ஐந்து வயதிற்குட்பட்ட சிறார்கள். இவர்களது உடல்வளத்தையும் மனவளத்தையும் சீராகவும் சிறப்பாகவும் திகழச்செய்வது நமது கடமை. இதனைத் தலையாய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருவதுதான் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டமாகும்.

1980ஆம் ஆண்டு மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் உலக வங்கியின் உதவியோடு விதைக்கப்பட்ட இத்திட்டத்தின் வித்து முளைத்துச் செடியாகி, மரமாகி பத்து மாவட்டங்களுக்கு நிழல் தந்து கொண்டிருந்தது. தற்பொழுது இத்திட்டம் ஆழ வேரூன்றி 24 மாவட்டங்களிலுள்ள 318 வட்டாரங்களிலுள்ள குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்குப் பயன்பட்டு வருகின்றது.



**திட்டத்தின் நோக்கமும் செயல்பாடும்:**

திட்டத்தின் நோக்கங்கள் பல. அவற்றில் தலையாயன வருமாறு:

- கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் ஆகியோரின் உடல் நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துதல்; அதன் மூலம் குழந்தை உயிர்வாழ்தல் மற்றும் அதன் வளர்ச்சியை உறுதி செய்தல்.
- 0-36 மாதக் குழந்தைகளுக்கு மாதந்தோறும் எடை எடுத்து வளர்ச்சியைக் கண்காணித்தல்.
- வயதிற்கேற்ற எடை இல்லாத குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல்.
- 3 வயது முதல் 6 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்குவதுடன் அவர்களது உடலும் உள்ளமும் ஒரு சேர வளர பள்ளி முன்பருவக் கல்வி அளித்தல்.
- ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி மூலம் திட்டப்பணிகளின் அவசியத்தையும் தேவை உணர்வையும் உருவாக்குதல்; நல்ல மனப்பாங்கை உருவாக்கி நடைமுறையில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருதல்.
- தனிநபர், குடும்பம், சமுதாயம் ஆகியோரின் செயல்திறத்தை மேம்படுத்தி அதன் மூலம் சமுதாயத்தின் நலத்தில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை அடையச் செய்தல்.

மேற்கண்ட குறிக்கோள்களைச் செவ்வனே அடையப் பல்வேறு பணிகள் கிராமங்களில் மேற்கொள்ளப் படுகின்றன. கணக்கெடுத்தல், குழந்தைகளின் எடை எடுத்து வகைப்படுத்துதல், வயதிற்கேற்ற எடை இல்லாத குழந்தைகளுக்கு இணை உணவு வழங்குதல், தடுப்பூசி போடத் தயார் செய்தல், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு எடை எடுத்து, இரும்புச்சத்து மாத்திரை வழங்குதல் மற்றும் இணை உணவு வழங்குதல், அனைவருக்கும் ஊட்டச்சத்து-சுகாதாரக் கல்வி அளித்தல், பணியாளர்களின் அறிவையும் செயல்திறனையும் மேம்படுத்தப் பல்வேறு வகையான பயிற்சிகள் அளித்தல்

ஆகியவை இத்திட்டத்தின் மூலம் செய்யப்படும் முக்கியப் பணிகளாகும்.

### சமுதாய ஊட்டச் சத்து மையம்:

திட்டப்பணிகளைச் செயல்படுத்த ஒவ்வொரு கிராமத்திலும் 1500 மக்கள் தொகைக்கு ஒரு சமுதாய ஊட்டச்சத்து மையம் செயல்பட்டு வருகின்றது. இம்மையத்தில் பணியாற்றும் சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் மூன்று வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆகியோரின் சுகாதார, ஊட்டச்சத்து நிலையின் மேம்பாட்டிற்குப் பல்வேறு பணிகளைத் திறம்பட ஆற்றி வருகின்றார்.

### பள்ளி முன்பருவக் கல்வி:

நகர்ப்புறங்களில் தனியார் மழலையர் பள்ளிகள் புற்றீசல்போல் பெருகிவருகின்றன. இதனை எண்ணி ஏக்கப் பெருமூச்சுவிட்ட கிராம மக்களின் ஏக்கத்தைப் போக்குகின்ற வகையில் கிராமங்கள் தோறும் குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

*"அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்*
*அத்தனைப் பேருக்கும் ஒன்றாய்*
*சிறியாரை மேம்படச் செய்தால் - பின்பு*
*தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்!*

*வயிற்றுக்குச் சோறிட வேண்டும் - இங்கு*
*வாழும் மனிதருக் கெல்லாம்*
*பயிற்றிப் பலகல்வி தந்து - இந்தப்*
*பாரை உயர்த்திட வேண்டும்".*

- என்றார் பைந்தமிழ்த் தேர்ப்பாகன் பாரதி. பாரதி கண்ட கனவை முற்றிலும் நனவாக்கி வருகிறது தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

மூன்று வயது முதல் ஆறு வயது வரையுள்ள குழந்தைப் பருவம் மிக முக்கியமான கட்டமாகும். மனவளர்ச்சியும் அதிவேகமாக வளர்கின்ற காலம். இந்த வயதில்தான் எதையும் அறிந்துகொள்ளவும் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் குழந்தைகளிடையே ஆர்வம் மிகுந்து காணப்படும். இக்காலக் கட்டத்தில் குழந்தைகளுக்கு அறிவுரையும் பள்ளி முன்பருவக் கல்வியும், உடல் வளர சத்துக்கள் நிறைந்த மதிய உணவும் வழங்கப்படுகின்றது.

வெவ்வேறு வகையான விளையாட்டுக்கள் மூலமாகவும் பல்வேறு வகையான பாடத்திட்டங்கள் மூலமாகவும் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது. குழந்தைகளின் அறிவு, மனம், சமூகம், மொழி மற்றும் உடல் வளர்ச்சி போன்றவற்றில் அதிகம் அக்கறை காட்டப்படுகிறது. பள்ளிக்குச் செல்லக் குழந்தைகளைத் தயார்படுத்தும் முதல் நிலைதான் முன்பருவக் கல்வியாகும். குழந்தைகளுக்கு எண், எழுத்து படிப்பு போன்றவற்றில் அடிப்படை அமைப்பதற்கும், நல்ல பழக்க வழக்கங்கள் கற்றுக்கொள்வதற்கும் பள்ளி முன்பருவக் கல்வி பெரிதும் ஊக்கம் அளிக்கிறது. இப்பணியைக் கிராம அளவில் குழந்தைகள் நல அமைப்பாளர் ஆற்றி வருகின்றார்.

### கல்வி, செய்தித் தொடர்புப் பணிகள்:

*"உடை மாறுவது முக்கியமல்ல;*
*உள்ளம் மாறுவதும் உயர்ந்த கருத்துக்கள்*
*உள்ளத்தில் பதிவதும்தான் மிகவும் முக்கியம்"*

என்றார் பேறிஞர் அண்ணா அவர்கள். ஆண்டாண்டு காலமாக நடைமுறையில் இருந்து வருவதாலேயே சில தவறான மூடப்பழக்க வழக்கங்கள் மனித வாழ்வில் தொடர்ந்து நிலைபெற்று விடுகின்றன. அப்பழக்க வழக்கங்களை மாற்றி மக்களை நல்வழிக்கு ஆற்றுப்படுத்துவது மிகவும் அவசியம். உணவு, உடை, உறையுள் மற்றும் நடைமுறை ஆகியவற்றில் அவ்வாறான செயல்களை நீக்கி உகந்த செயல்களை நடைமுறைப்படுத்த மக்களை ஊக்குவிப்பதே தகவல் தொடர்புப் பணிகளின் முக்கிய நோக்கமாகும். மக்களின் மனப்பாங்கில் மாற்றத்தைக் கொண்டு வரவும், நடைமுறையில் முன்னேற்றத்தைக் காணவும் தகவல் தொடர்புப் பணிகளில் பல உத்திகள் கையாளப்படுகின்றன.



புதுமணத் தம்பதிகளுக்கு பணியரங்கம், மாமியார்-மருமகள் கருத்தரங்கம், கிராமத் தலைவர்களுக்கு பயிற்சி முகாம், சுயஉதவிக் குழுக்களுக்கும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் திட்டமிடல் பயிற்சி, சித்த ஓமியோபதி மருத்துவர்களைக் கல்விப்பணியில் ஈடுபடுத்துதல், பின்தங்கிய நலிவுற்ற பகுதிகளில் கல்வி முனைப்பு இயக்கங்கள் நடத்துதல், வானொலி, தொலைக்காட்சி மூலம் சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கருத்துக்களைப் பரப்புதல் போன்றவை ஊட்டச்சத்து திட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முக்கியத் தகவல் தொடர்புப் பணிகள் ஆகும்.

### மக்கள் பங்கேற்பு:

இத்திட்டத்தில் மக்கள் பங்கேற்பு நாளுக்கு நாள் பெருகி வருகின்றது. எதிர்காலத்தில் மக்களே ஏற்று நடத்தும் திட்டமாக இது மலரும் என்பதில் ஐயமில்லை. திட்டமிடுவதிலும் பணிகளைச் செயல்படுத்துவதிலும், முறைப்படுத்துவதிலும் பல்வேறு நிலைகளில் மக்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஊராட்சி மன்றத் தலைவர்கள், உள்ளூர் பிரமுகர்கள், சமுதாயத் தொடர்புக் குழுக்கள் தொண்டு நிறுவனங்கள் ஆகியவை இயன்ற வகையெல்லாம் திட்டம் திறம்படச் செயல்பட உதவி வருகின்றனர். ஊட்டச்சத்து மையத்தைப் பழுது பார்த்தல், வெள்ளையடித்தல், விளம்பரப்பணிக்கு சுவரொட்டிகள்,

துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்துக் கொடுத்தல் குழந்தைகள் அமர பாய்கள் வழங்குதல், சுற்றுப்புரத்தைச் சுகாதாரமாக வைக்க உதவுதல் போன்ற பல வழிகளில் மக்கள் பங்கேற்று வருகின்றனர். சற்றேறக்குறைய ரூபாய் தொண்ணூறு லட்சம் மதிப்புள்ள பணிகளைத் திட்டத்தின் வளர்ச்சிக்கு மக்கள் ஆற்றியுள்ளனர்.

### திட்டத்தின் பயன்கள்:

இத்திட்டத்தினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் பல. ஏழ்மை நிலையில் இருக்கும் எண்ணற்ற தாய்மார்களும் குழந்தைகளும் இத்திட்டத்தால் பயனடைந்துள்ளனர். சுமார் 15 லட்சம் குழந்தைகளுக்கு மாதந்தோறும் எடை எடுக்கப்பட்டு அவர்களின் வளர்ச்சி சீராக உள்ளதா என கண்காணிக்கப்படுகிறது. அவர்களில் வயதிற்கேற்ற எடை இல்லாத சுமார் 3 லட்சம் குழந்தைகளுக்கு நாள்தோறும் ஊட்டச்சத்து உருண்டை வழங்கப்படுகிறது. கருவுற்ற மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் அனைவருக்கும் சுகாதார, ஊட்டச்சத்து கல்வி அளிப்பதுடன் ஒவ்வொரு நாளும் சுமார் 2.90 லட்சம் தாய்மார்கள் ஊட்டச்சத்து உணவு பெற்று பயனடைகின்றனர். மூன்று வயது முதல் ஐந்து வயதிற்கு உட்பட்ட சுமார் 6 லட்சம் குழந்தைகளுக்குப் பள்ளி முன்பருவக் கல்வியும் மதிய உணவும் வழங்கப்படுகிறது.

திட்டத்தில் செயல்படுத்தி வரும் பல்வேறு ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரப் பணிகள் காரணமாக சிசுமரண விகிதம் மற்றும் பேறுகாலத் தாய் மரண விகிதங்கள் கணிசமாக குறைந்துள்ளன. 1983ல் 1000க்கு 101ஆக இருந்த சிசுமரண நிலைமை 1996ல் 54.8 ஆகக் குறைந்துள்ளது. பேறுகாலத் தாய் மரண விகிதம் 1991ல் ஆயிரத்திற்கு 3-ஆக இருந்து, 1996ல் 1.27 ஆகக் குறைந்துள்ளது. 1983ல் கடுமையான ஊட்டச்சத்து பற்றாக்குறையில் இருந்த குழந்தைகள் 12.3 சதவீதம். அது தற்போது 2.1 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆறு உயிர்க்கொல்லி நோய்களிலிருந்து குழந்தைகளைக் காக்கும் தடுப்பூசித் திட்டம் ஊட்டச்சத்துப் பணியாளர்களின் ஒத்துழைப்பால் தமிழகத்தில் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குழந்தைகளின் சராசரி பிறப்பு எடை 2.63 கிலோவாக உயர்ந்துள்ளது.

உலக வங்கியின் உதவியோடு செயல்பட்டு வந்த இத்திட்டத்தின் காலம் 1997, டிசம்பர் மாதத்தோடு முடிவுற்ற போதிலும் தற்பொழுது முழுச் செலவையும் தமிழக அரசே ஏற்று திட்டதைத் தொடர்ந்து நடத்தி வருகிறது.

ஊட்டச்சத்து திட்டப்பணிகள் கருவறையில் ஆரம்பித்து கடைசிக் காலம் வரை தொடர்கிறது. வயது முதிர்ந்து ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மதிய உணவு வழங்கப்படுகிறது. "வாடிய பயிரைக் கண்ட பொழுதெல்லாம் வாடினேன்" என்றார் வள்ளலார். குழந்தைகள் வாடுவது சமுதாயத்திற்கு இழுக்கு அல்லவா? வாட்டமுற்ற குழந்தைகளின் ஏக்கத்தைப்போக்கி ஊட்டமுள்ள உணவளித்து, ஒப்பற்ற கல்வி தந்து நாட்டின் வருங்காலத் தூண்களாம் மழலையர்க்கு வளமிக்க, ஒளிமிக்க எதிர்காலத்தை உருவாக்கிடப் பெரிதும் பாடுபட்டு வருகிறது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம். இத்திட்டத்திற்கு அனைத்துத் துறைகளைச் சார்ந்த பணியாளர்களும் தொண்டு நிறுவனங்களும் பொது மக்களும் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை மேலும் தொடர்ந்து நல்குவது அவசியம்; ஒருங்கிணைந்து செயல்படும்போது, திட்டப்பணிகள் ஒப்பற்ற பயனைத்தருவது உறுதி. தாய்சேய் நலத்திலும் மனிதவள மேம்பாட்டிலும் ஊட்டச்சத்துத் திட்டப் பணிகள் ஓர் அமைதிப் புரட்சியை உருவாக்கி வருகிறது என்பது உண்மை.

**ஜி. இராமகிருஷ்ணன்,** இ.ஆ.ப.,
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்
அடையாறு, சென்னை-20

---



# வீட்டுத்தோட்டம்!


கவிஞர் **எஸ்.இ.லோகநாதன்**

எங்கள் வீட்டுத் தோட்டம்பார்
எத்தனை அழகாய் இருக்கிறது
கண்களை மயக்கி அழைக்கிறது
காண்பவர் வியக்கத் தழைக்கிறது!

மல்லிகைப் பந்தல் இருக்கிறது
மணக்கும் ரோஜா சிரிக்கிறது
முல்லைக் கொடியும் படர்கிறது
கொல்லைப் புறமே மணக்கிறது!

கீரைச் செடிகள் இருக்கிறது
கிழங்கு வகையும் இருக்கிறது
நேரே தென்னை மா,முருங்கை
வாழை கொய்யா வளர்கிறது!

எல்லாம் நமக்கு உணவாகும்
மிச்சம் இருந்தால் பணமாகும்
உங்கள் வீட்டிலும் தோட்டத்தை
உடனே வைத்துப் போற்றுங்கள்!



# எதிர்முனை

**- சா. கந்தசாமி**

கணியூர் உயர்நிலைப் பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர் வாசுதேவன். சுமார் நாற்பத்தைந்து வயது. ஆனால் தலையின் முன் மயிரெல்லாம் கொட்டி வழுக்கை விழுந்துவிட்டது. பின் மயிரை இழுத்துச் சீவி வழுக்கையை மறைத்துக்கொண்டு இருந்தார். திருகிவிட்ட மீசை. அப்புறம் சிகப்பேறிய கண்கள். எப்பொழுதும் கோபத்தில் இருப்பது மாதிரியே சிடுசிடுவென்று இருப்பார். பேச்சிலும் அந்த சிடுசிப்புத் தெரியும். இருந்தாலும் திறமையான ஆசிரியர். மாணவர்களுக்கு அவரைப் பிடித்தது. அவர் வந்த பிறகுதான் கணியூர் உயர்நிலைப் பள்ளி வாலிபால், உயரத்தாண்டுதல், இருநூறு மீட்டர் ஓட்டம் ஆகியவற்றில் மாவட்டத்திலேயே முதலாவதாக வந்து மூன்று தங்கப்பதக்கத்தைப் பெற்றது.

பரிசு கொடுக்க வந்த மாவட்ட ஆட்சியாளர் மூன்று தங்கப் பதக்கங்களைக் கொத்தாக வென்ற கணியூர் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பொன்.தனசேகரனை மேடைக்கு அழைத்து வெகுவாகப் பாராட்டினார். அவர் பேச்சினூடே இக்காலத்தில் படிப்பு என்பது வெறும் புத்தகப் படிப்பு மட்டுமல்ல, விளையாட்டும் ஒரு படிப்புதான். அதனை நன்கு புரிந்துகொண்டு கணியூர் பள்ளி செயல்படுவது நமக்கெல்லாம் பெருமை தரக்கூடியது. இன்று மாவட்ட அளவில் முதன்மை பெற்றுள்ள பள்ளி நாளை மாநில அளவிலும் அடுத்த நாள் இந்திய அளவிலும், பின்னர் ஒலிம்பிக் அளவிலும் போட்டியிட்டுத் தங்கப் பதக்கம் பெறவேண்டும் என்று வாழ்த்தினார்.

மாவட்ட ஆட்சியாளர் பேச்சு, தலைமை ஆசிரியருக்கு அவ்வளவாக மகிழ்ச்சியளிக்கவில்லை. விளையாட்டுப் போட்டிகளில் மாணவர்கள் கலந்துகொண்டு தங்கப்பதக்கம் பெற்றதில் அவர் பங்கு ஒன்றுமில்லை. இன்னும் சொல்லப்போனால் விளையாட்டுக்கு அவர் நேர் எதிர். படிப்பு என்றால் புத்தகங்களைப் படித்து நிறைய மதிப்பெண் பெறவேண்டும் என்ற கொள்கை கொண்டவர். விளையாட்டிற்கான நேரத்தை எல்லாம் சிறப்பு வகுப்புக்கென்று நிறையப் பிடுங்கிக் கொண்டிருந்தார். அதற்காகத் தலைமையாசிரியர் அறைக்குள் வந்த வாசுதேவன் கத்தினார். கத்தினார் என்றால் நிஜமாகவே கத்தினார். அவர் போட்ட கூச்சல் பள்ளிக்கூடம் முழுவதும் கேட்டது. ஆசிரியர்களும் மாணவர்களும் வகுப்பைவிட்டு வெளியில் வந்து நின்று வேடிக்கைப் பார்த்தார்கள். தலைமையாசிரியர் அறையில் இப்படியொரு காட்சியைப் பார்ப்பது இதுதான் முதன் முறை. எனவே என்ன செய்வது என்று தெரியாமல் ஒவ்வொருவரும் திகைத்துப் போய் நின்றுகொண்டிருந்தார்கள். கோபத்திலும் வருத்தத்திலும் தலைமை ஆசிரியருக்குப் பேச்சே வரவில்லை.

தமிழ் ஆசிரியர் பாரிவள்ளல் அவசர அவசரமாகத் தலைமையாசிரியர் அறைக்குள் நுழைந்தார். அவரைப் பார்த்ததும் ஓரடி முன்னே எடுத்து வைத்து, “பாருங்க சார், இவர் தலைமையாசிரியர்ன்னா மாணவர்களின் விளையாட்டு நேரத்தைத் திருட ஒன்னும் உரிமை இல்ல சார்” என்று கத்தினார்.

“என்ன சார் இப்படியெல்லாம் பேசுறீங்க..” என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்தார்.

“ரொம்ப நாளா இப்படித்தான் சார் இவர் திருடிக்கிட்டே இருக்கார். இதை நான் விடப்போறது இல்ல. முதலமைச்சர் வரைக்கும் கொண்டுக்கிட்டுப் போய் ரெண்டுல ஒண்ணு பார்த்துடப்போறேன்”.

“எல்லாம் பார்க்கலாம். நீங்க வாங்க சார்” என்று பாரிவள்ளல் அவர் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வெளியில் வந்தார்.

“எதுக்கு சார், வீணா சண்டை” என்றார் கணக்கு ஆசிரியர் சிவானந்தம்.

“நீங்க வாய மூடிக்கிட்டு சும்மா இருங்க. என் நேரத்தைத் திருடினா என்னால சும்மா இருக்க முடியாது” என்று பெரிதாகக் கத்தினார். விளையாட்டுக்கான நேரத்தில் பெரும்பாலும் கணக்குதான் நடந்தது.

அதனால் கணக்கு ஆசிரியர் மேல் அவருக்குக் கோபம். கோபத்தோடு திருட்டு என்ற வார்த்தையை சார் பயன்படுத்தியது தலைமையாசிரியரை மட்டுமல்ல. தமிழ் ஆசிரியர் பாரிவள்ளலைக் கூட அதிர்ச்சியடைய வைத்தது. ஆனால் அவரை என்ன செய்வது என்று ஒருவருக்கும் தெரியவில்லை. யாருக்கும் அவர் கட்டுப்படுவதில்லை. எந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போட்டாலும் சண்டை; இரண்டு வருஷம் கூட சேர்ந்தாற் போல அவர் ஒரு பள்ளியிலும் இருந்ததில்லை.

மாவட்டக் கல்வி அதிகாரி வாசுதேவனை தன் அலுவலகத்துக்கு வரவழைத்து, ‘மூன்று வருடத்திற்குக் கணியூர் பள்ளியில் சண்டை போட்டுக் கொள்ளாது இருக்கவேண்டும்; தலைமையாசிரியர் ரொம்ப நல்ல மனிதர்’ என்று சொன்னார்.

“நான் என்ன சண்டைக்காரனா? எல்லா வகுப்பு மாதிரியும் விளையாட்டும் ஒரு வகுப்புதான். அதைப் புடுங்கினா எப்படி சார் விடுறது? என் வகுப்பைப் புடுங்கினா நான் சும்மா இருக்கமாட்டேன் சார்”.

அவர் பதிலொன்றும் சொல்லவில்லை. ஆனால் உலகம் தெரியாத ஆளாகவும், வாழத்



தெரியாத மனிதராகவும் இருக்கிறாரே என்று நினைத்துக் கொண்டார். பள்ளிக்கூடத்தில் படிப்பு என்றால் மார்க்குதான். மார்க்கு இல்லாத பாடமெல்லாம் மதிப்பு இல்லாததுதான். மதிப்பு இல்லாத வேலையில் இருந்துகொண்டு மதிப்பு வேண்டுமென்றால் முடியுமா?

வாசுதேவனுக்கு இதையெல்லாம் புரியவைக்க முடியல. அவருக்குப் படவில்லை. அதோடு அவருக்கு வேறு வேலைகளும் இருந்தன. எனவே, சிரித்தபடி வெளியில் அனுப்பிவைத்தார். பள்ளிக்கூடத்தில் மட்டுந்தான் அவர் அப்படி என்பது இல்லை. வீட்டில் அதற்கு மேல். தம்பிக்கும் அவருக்கும் பெரிய சண்டை. பேச்சு வார்த்தை இல்லை. அப்பா செத்துப் போன பிறகு சொத்தைப் பிரிப்பதில் சண்டை வந்தது. சொத்துப் பிரிவினை நடந்து கொண்டிருந்தபோது, ரொக்கப் பணத்திற்குச் சரியாகக் கணக்குக் காட்டவில்லை என்று கத்தினார். தம்பி இதுதான் என்று கறாராகச் சொன்னான். அப்படி என்றால் எல்லா சொத்தையும் நீயே வைத்துக்கொள் என்று எழுந்து வந்துவிட்டார்.

நான்கு மாதங்கள் கழித்து தம்பி ஆள்விட்டு அனுப்பினான். அவர் போகவில்லை. பெரிய மாமா நேரில் வந்தார். நண்டு, கறும்பு மீன் விருந்து சாப்பிட்டுவிட்டுக் கையைத் துடைத்துக்கொண்டு பெரிய மாமா, “தம்பி என்னமோ டில்லியில வீடு வாங்கப் போறானாம். அதுக்குப் பணம் குறையுதாம். பங்கப் பிரிச்சிக்கிட்டீங்கனா, அவனுக்கு வசதியா இருக்கும்” என்றார்.

“பெரிய மாமா, நீங்களா இருக்கறதால நான் கொஞ்சம் தனிஞ்சு பேசுறேன். எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்ப அவன் எனக்குத் தம்பி இல்ல; நான் அவனுக்கு அண்ணன் இல்ல. எல்லாத்தையும் அவனே எடுத்துக்கிட்டு டில்லியில வீடு வாங்கிக்கிட்டு ராஜா மாதிரி இருக்கட்டும்”.

“இது எல்லாம் சரியா?”

“ஏன் சரி இல்ல, என்ன ஏமாத்தப் பார்த்தவன், எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு போய் நல்லா இருக்கட்டும்”.

“இப்படி வயித்து எரிச்சலோட பேசக் கூடாது”.

“எவனுக்கு வயித்து எரிச்ச?” என்று பெரிய மாமா கன்னத்தில் பளார் என்று அறைந்தார். மாமா கன்னத்தைத் தடவி விட்டுக்கொண்டு திரும்பிப்பார்த்தார். சப்தம் கேட்டு அவர் மனைவி ராணி உள்ளே இருந்து ஓடி வந்தாள்.

“உனக்கு ரெண்டு காசு கிடைச்சி, நீ நல்லா இருக்கணுமேன்னு ஓடியாந்தேன் பாரு, அதுக்குக் கைநீட்டி என்ன அடிக்கற இல்ல; அந்தக் கை விளங்காமப் போயிரும்” என்றபடி வீட்டு வாசல்படி இறங்கினார்.

“என்ன சொன்னே?” முன்னே பாய்ந்தார்.

ராணி அவர் கையைப் பிடித்துப் பின்னால் இழுத்தாள். அவளை உதறிவிட்டு விட்டு சோபாவில் உட்கார்ந்து கால்மேல் கால் போட்டுக்கொண்டு, வெளியில் போகும் பெரிய மாமாவையே பார்த்தபடி இருந்தார்.

“எல்லாரும் ஒன்னா கூட்டுச் சேர்ந்துக்கிட்டு என்ன ஏமாத்தப் பார்க்கிறானுவோ... பணம் என்னடா பணம்... பெரிய இது... நீங்களே எடுத்துக்கிட்டுப் பெரிசா இருங்கடா” என்று கத்தினார்.

ராணி அவரையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தாள். அவர் தலை நிமிர்ந்து பார்த்தார்.

“அது உங்க பணம்தான். எதுக்கு நீங்க வேணாமின்னு சொல்லுறீங்க?”

அவர் தலையசைத்தார்.

“அந்தப் பணம் வந்தா கஷ்டமெல்லாம் விடியும் இல்ல, சின்னதா ஒரு வீடு கட்டலாம்; பையனுக்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுக்கலாம்”.

“அடி செருப்பால” வாசுதேவன் சோபாவில் இருந்து துள்ளியெழுந்தார். “அந்தப் பணத்துக்கு பெரிய திட்டம் எல்லாம் போட்டு வச்சி இருக்கிறியா? எப்ப என்ன ஏமாத்தப் பார்த்தானோ, அப்பவே அவன் என் தம்பி இல்ல. அப்பா பணத்தில வாழற அற்பன் இல்ல நான். எனக்கு ரெண்டு கை, காலு இருக்கு... ஜம்முன்னு உழைச்சி சம்பாரிச்சி மாளிகை கட்டுவேன்... பையனுக்கு சைக்கிள் என்ன மோட்டார் சைக்கிளே வாங்கிக் கொடுப்பேன்.. அந்த பணத்தப் பத்தி பேசின உன்ன ரெண்டா வெட்டிப் போட்டுடுவேன்..”

ராணி தலைநிமிர்ந்து ஒரு பார்வை பார்த்துவிட்டு உள்ளே சென்றாள்.

ஒருநாள் மாலைப்பொழுது வாசுதேவன் நாற்காலியில் உட்கார்ந்து கால்களை ஆட்டிக்கொண்டிருந்தார். சாதாரணமாக அவர் மாலைப்பொழுதில் வீட்டிற்கு வந்து உட்கார்கிற ஆள் இல்லை. பள்ளிக்கூடம் விட்டால் விளையாட்டு மைதானம். அப்புறம் சிநேகிதர்கள். எட்டரை ஒன்பது மணிக்குதான் மோட்டார் சைக்கிளை வாசலில் கொண்டு வந்து நிறுத்துவார். எதற்கு இந்த நேரத்தில் வந்திருக்கிறார் என்பதைத் தீர்மானிக்க முடியாதவளாக ராணி தேனீரை முன்னே நீட்டினாள். மேசை மீது வைக்கும்படி தலையை ஆட்டினார். மேசை மீது கப்பை வைத்துவிட்டு உள்ளே சென்றாள். அவர் வாசலைப் பார்த்தபடி தேனீரை எடுத்துக் குடிக்க ஆரம்பித்தார்.

அவர் பையன் சுந்தரராசன், ஒன்பதாவது படிக்கிறவன் வீட்டுக்குள் நுழைந்தான். அப்பாவைப் பார்த்ததும் கொஞ்சம் பயந்து போனான். நின்று லேசாகத் தலையை நிமிர்த்தி அப்பாவை ஒரு பார்வை பார்த்தான்.

"இப்பத்தான் பள்ளிக்கூடம் விட்டு வர்றியா?"

"கணக்கு சார் கிளாஸ் எடுத்தார் அப்பா."

"பைய வச்சிட்டு சீக்கிரம் வா."

அவன் அவசர அவசரமாக உள்ளே சென்றான். போன வாரம் அவன் இலுப்பைத் தோப்பில் சைக்கிள் கற்றுக் கொண்டிருந்தபோது அந்தப் பக்கமாக வந்தவர் மோட்டார் சைக்கிளை அரச மரத்தடியில் நிறுத்திக் கொண்டு ஒரு பார்வை பார்த்தார். அப்பாவைப் பார்த்ததும் பயத்தில் இடுப்பை நெளித்து நெளித்துக்கொண்டு சைக்கிள் ஓட்டிக்கொண்டு போனான். அவர் அவனையே பார்த்தபடி நின்று கொண்டிருந்தார். இரண்டாவது சுற்றுச் சுற்றிக்கொண்டு அரச மரம் பக்கமாக வந்தவன் அப்பாவைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாகக் கீழே இறங்கினான்.

"இங்கே வா" என்று கையைக் காட்டி கூப்பிட்டார். பயத்தோடு முன்னே சென்றான்.

"எதுக்குப் பயப்படுற, பயம் இல்லாம ஓட்டு".

அவன் தயங்கியபடியே நின்றுகொண்டிருந்தான். அவர், சைக்கிளை இடது கையால் பிடித்துக் கொண்டார். மேலே ஏறி உட்கார்ந்தான். சைக்கிளைத் தள்ளிவிட்டார். உடம்பை நெளித்து நெளித்து பெடலை மிதித்தான். முன்னே ஓடிப்போய் இடுப்பில் ஒரு அடி கொடுத்தார். அடி என்றால் லேசான அடியில்லை. உயிர் இருக்கும் வரையில் நினைவில் இருக்கும் அடி. அவன் கொஞ்சம் தடுமாறினாலும் சமாளித்துக்கொண்டு சைக்கிளை நேராக ஓட்டிக்கொண்டு சென்றான். மோட்டார் சைக்கிளில் சாய்ந்தபடி அவன் மரங்களுக்கு இடையில் சைக்கிளில் புகுந்து புகுந்து போவதையே பார்த்தபடி இருந்தார்.

உள்ளே சென்ற சுந்தரராசன் புத்தகப் பையை ஆணியில் மாட்டிவிட்டு கொல்லைப்பக்கம் சென்றான். அம்மா அரிசி புடைத்துக் கொண்டு இருந்தாள்.

"அம்மா, அப்பா கூப்பிடுறாங்க. வெளியில் போயிட்டு வர்றேன்" என்றான்.

சாதாரணமாக வாசுதேவன் பையனையோ, மனைவியையோ மோட்டார் சைக்கிளில்கூட்டிக் கொண்டு போற ஆள் இல்லை. பையனுக்கும் அப்பாவுக்கும் ஒரே பள்ளிக்கூடம் என்றாலும், மூன்று கிலோமீட்டர் தினமும் நடந்துதான் போகிறான். அது மட்டுமல்ல, வெளியில் போனாலும் சொல்லிக்கொண்டு போகிற ஆள் கூடயில்லை.

"கல்யாணமாகிவந்த புதிதில் ராணி, "நீங்க வெளியில போறத எங்கிட்ட சொல்லிட்டுப் போனாதானே யாராவது வந்து கேட்டால் சொல்ல முடியும்?" என்றாள்.

"இன்னமே நான் போற ஒவ்வொரு இடத்தையும் உங்கிட்ட சொலலி பர்மிஷன் வாங்கிக்கிட்டுப் போறேன்.." என்றார்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"இதோ பார், நான் ஆம்பள; இஷ்டத்துக்குப் போவேன். இஷ்டத்துக்கு வருவேன். அங்க போறது இங்க போறது எல்லாத்தையும் உங்கிட்ட சொல்லிக்கிட்டுப் போகணுமென்னு ஆசைப்பட்டுக்கிட்டு பல்ல இளிச்சிக்கிட்டு பின்னால வந்து நிக்காதே" - அதில் இருந்து ராணி அவர் போவதைப் பற்றியோ அவர்



வருவதைப் பற்றியோ ஒன்றும் கேட்பதில்லை. அவரைத் தேடிக்கொண்டு யாராவது வந்தால், "பள்ளிக்கூடம் போயிருக்கிறாங்க" என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தாள்.

வாசுதேவன் வாசலில் நின்ற தன் மோட்டார் சைக்கிளை உதைத்துக் கிளப்பினார். முதல் உதையிலேயே வண்டி கிளம்பிவிட்டது. ஆக்ஸிலேட்டரை ஒருமுறை திருகி உட்கார்ந்தார். இவன் அப்பாவையே பார்த்தபடி இருந்தான். பின்னால் ஏறிக்கொள் என்பது மாதிரி தலையசைத்தார். ஏறி உட்கார்ந்து கொண்டு திரும்பிப் பார்த்தான். அம்மா, வாசல் பூவரசு மரத்தடியில் வந்து நின்றுகொண்டிருந்தாள்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டு காவேரி ஆற்றுப் பாலத்தைத் தாண்டி இலுப்பைத் தோப்புக்குள் புகுந்து பெரிய முனி ஒற்றையடி பாதையிலேயே போய் அன்புச்செல்வம் மிதிவண்டி நிலையத்தின் முன்னே நின்றது. கடையில் உட்கார்ந்திருந்த அன்புச் செல்வம் - அவர் மாணவன்தான். இவரைப் பார்த்ததும் நாற்காலியில் இருந்து எழுந்து, "வாங்க சார்.. வாங்க" என்று வரவேற்றான்.

சுந்தரராசன் மோட்டார் சைக்கிளில் இருந்து இறங்கி கடையின் முன்னே இருக்கும் விதவிதமான சைக்கிள்களைப் பார்த்தபடி இருந்தான்.

வாசுதேவன் தலையசைத்துக் கொண்டு முன்னே, சென்று நாற்காலியில் உட்கார்ந்து, "வியாபாரம் எப்படி... நீதான் சரியா ஓட மாட்டேன்னுட்ட, சைக்கிள் ஓடுதா ?..." என்று கேட்டார்.

"பரவாயில்ல சார்..."

"ஒரு நல்ல சைக்கிள் கொடு".

"யாருக்கு சார், தம்பிக்கா..." என்று கேட்டான் சுந்தரராசனைப் பார்த்தபடி.

அவர் தலையசைத்தார்.

"போன வருஷமே வாங்கிக் கொடுத்து இருக்கனும் சார். பாவம் தம்பி.. தினம் ஆறு கிலோமீட்டர் நடக்குது".

"எங்க பணம் வருது. இன்னிக்கி பிராவிடண்ட் பண்ட்ல லோன் வந்துச்சி... உடனே ஓடியாந்துட்டேன். நல்ல சைக்கிளா பார்த்துக் கொடு.."

"இப்ப எல்லாம் "ஹீரோதான் சார்... பையன்களுக்கு எல்லாம் அதான் பிடிக்கும். டி.வி.யில கூட நிறைய விள்ம்பரம் வருது சார்".

"சரி.. அதையே கொடு.. என்ன விலை?

"ஆயிரத்து முன்னூறு ரூபா சார். உங்களுக்காக நூறு ரூபா குறைச்சிக்கிறேன் சார். நீங்க ஆயிரத்து இருநூறு கொடுங்க"..

"அதெல்லாம் வேணாம். நல்ல சாமானப் போட்டு ரெடி பண்ணிக்கொடு.. நூறு ரூபா குறைக்கறேன்னு மட்டமான சைக்கிளை தலையில் கட்டிடப்



போற.."

"அப்படி எல்லாம் இல்ல சார்.." என்ற அன்புச்செல்வம் ஒரு ஆளைக் கூப்பிட்டு ஜாடை காட்டினான். அவன் கைகளைத் துடைத்தபடி வெளியில் சென்றான்.

சுந்தரராசன், தயராகும் பச்சை சைக்கிள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். ஒரு ஆள் ஒரு தட்டில் மூன்று காபி கொண்டு வந்தான். ஒரு காபி டம்ளரை எடுத்து அன்புச்செல்வம் அவர் பக்கம் நீட்டினான். காபியை வாங்கி ஒரு மிடறு குடித்தார்.

"சார்! வரும் சுதந்திர தினத்துக்கு இருபது கிலோ மீட்டர் சைக்கிள் போட்டி ஒன்று நடத்தலாமென்று இருக்கிறோம் சார். அதை நீங்கதான் வந்து துவக்கி வைக்கணும். நம்ம மாவட்ட எஸ்.பி. கூட வரேன்னு சொல்லிட்டாங்க.."

"உன் கடைக்கு வந்ததுந்தான், நான் நினைவுக்கு வருதா?"

"அப்படி எல்லாம் இல்ல சார். நானே நேர்ல வந்து கூப்பிடனுமென்னு இருந்தேன். ஆனா கடையை விட்டுட்டு வர முடியல".

"உனக்கெல்லாம் போட்டி எதுக்கு? நீ கடையையே பார்த்துக்கிட்டு இரு..."

"என்ன சார் இப்படி சொல்லுறீங்க?..."

"பின்ன! கண்ட இடத்தில கேட்டா அப்படித்தான்" என்றபடி சைக்கிளைப் பார்த்தார். சுந்தரராசன் ஸ்டுலில் உட்கார்ந்து சைக்கிளைப் பார்த்தபடி இருந்தான். பதினைந்து நிமிடத்துக்குப் பிறகு சைக்கிள் தயாரானது. பில்லை அவர் பக்கம் நீட்டினான். பணத்தைக் கொடுத்துவிட்டு, பில்லை மடித்து பையில் வைத்துக்கொண்டு சைக்கிள் சீட்டில் ஒரு தட்டுத் தட்டினார். பெல்லை அடித்தார். அது கணகணவென்று ஒலித்தது. அப்புறம் பெடலை நிமிர்த்தி, சக்கரத்தைச் சுற்றி பிரேக்கைப் பிடித்தார். எல்லாம் சரியாக இருப்பது மாதிரி இருந்தது.

அன்புச்செல்வம் கடையில இருந்து சைக்கிளை வெளியே தள்ளிக்கொண்டு வந்து சுந்தரராசனிடம் கொடுத்தான். அவன் சைக்கிள் ஹாண்டில்பாரைப் பிடித்தபடி அப்பாவைத் தலை நிமிர்ந்து பார்த்தான்.

"உன் சைக்கிள்தான். எடுத்துக்கிட்டு வீட்டுக்குப்போ..."

சுந்தரராசன் சந்தோஷத்தோடு தலையசைத்தான். கொஞ்ச காலம் சைக்கிளைத்தள்ளிக்கொண்டு போய் பூவரச மரத்தடியில் சைக்கிளில் ஏறி உட்கார்ந்து மிதித்தான். மண் சாலை, சக்கரம் மணலில் சிக்கி தடுமாறியது.

ஹாண்டில்பாரை அப்படியும் இப்படியும் நெளித்து சரிப்படுத்திக்கொண்டு வேகமாக மிதிக்க ஆரம்பித்தான். சைக்கிள் பறப்பது மாதிரி இருந்தது. அவன் இன்னும் இன்னும் என்று வேகமாக மிதித்தான்.

"தம்பி நல்லாதான் சைக்கிள் ஓட்டுது" என்றான் அன்புச்செல்வம்.

அவர் பதிலொன்றும் சொல்லாமல் மோட்டார் சைக்கிளில் ஏறி உட்கார்ந்தார்.

சுந்தரராசன் வீட்டின் முன்னே



சைக்கிளில் இருந்து இறங்கி மணி அடித்தான். உள்ளே இருந்து வந்த அம்மா, "ஏது சைக்கிள்" என்று கேட்டாள்.

அவன், "அப்பா வாங்கிக் கொடுத்தது" என்றான். ஆச்சரியப்பட்டுப் போன அவள் அவசர அவசரமாக உள்ளே போய் திருநீறு, சூடம் எல்லாம் கொண்டுவந்து சைக்கிளுக்குப் பூசை போட்டாள். அவன் நெற்றியிலும் சைக்கிள் ஹாண்டில்பாரிலும் திருநீறு பூசிக் குங்குமப் பொட்டு வைத்தாள்.

"ரொம்ப விலையா இருக்கும். ஜாக்கிரதையா வைச்சிக்க" என்றாள்.

சுந்தரராசன் சைக்கிளை பத்திரமாக வைத்துக்கொண்டான். சாலையில் மேடுபள்ளமென்றால் ஓரமாக சைக்கிளை விட்டான். அடிக்கடி டயரில் காற்று இருக்கிறதா என்று அழுத்திப் பார்த்துக்கொண்டான். காலையில் பள்ளிக்கூடம் புறப்படுவதற்கு முன்னால் தேங்காய் எண்ணை போட்டு வெள்ளைத் துணியால் துடைத்தான். பச்சை வர்ணம் பளபளவென்று மின்னியது. பின் சக்கரத்துப் பூட்டுக் காணாது என்று முன்சக்கரத்திற்கும் ஒரு பூட்டு போட்டுக்கொண்டான். அப்பா அவன் சைக்கிள் துடைப்பதை ஒருநாள் நின்று பார்த்துவிட்டுப் போனார்.

ஞாயிற்றுக்கிழமை. மத்தியானம் சாப்பிட்டுவிட்டு அப்பா மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய்விட்டார். நான்கு மணி இருக்கும் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டிருந்த இவனுக்குத் திடீரென்று ஒரு கணக்கில் சந்தேகம். மன்னூர் நாராயணந்தான் வகுப்பிலேயே கணக்கில் புலி. சொல்லியும் கொடுப்பான். அம்மாவிடம் மன்னூர் நாராயணன் வீட்டுக்குப் போவதாகவும், திரும்பி ஆறு மணிக்கெல்லாம் வந்துவிடுவதாகவும் சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினான்.

"சீக்கிரம் ஆறு மணிக்கெல்லாம், அப்பா வர்றதுக்கு முன்னால வந்துடு" என்று அம்மா வாசல் வரையில் வந்து வழியனுப்பி வைத்தாள்.



அம்மா அடிக்கடி கடிகாரத்தையே பார்த்தபடி இருந்தாள். மணி ஏழு அடித்தது. சுந்தரராசன் வரவில்லை. அம்மா, வாசல் பக்கம் வந்து நின்றாள். ஏழரை மணிக்கு மோட்டார் சைக்கிளில் வாசுதேவன் வந்து இறங்கினார். ர்ரணியை வாசலில் பார்த்ததும் கோபம் வந்துவிட்டது.

"எதுக்கு இந்த நேரத்தில வாசல்ல நின்னுக்கிட்டிருக்க..." என்று அதட்டினார்.

"சுந்தர் ஆறு மணிக்கெல்லாம் வரேன்னு போனான். இன்னும் வர்ல..."

"சைக்கிள் இருக்கில்ல. ஊர் சுத்திக்கிட்டு இருப்பார். வரட்டும் நாலு வச்சா சரியா போயிடும்" அப்பா உள்ளே போனார். அம்மாவும் கூடவே சென்றாள்.

வாசுதேவன்பேண்டை அவிழ்த்துப் போட்டுவிட்டு வேட்டியை எடுத்துக் கட்டிக்கொண்டு டி.வி.யை போட்டுவிட்டு நாற்காலியில் உட்கார்ந்தார். அம்மா உள்ளுக்கும் வாசலுக்குமாக நடந்தபடி இருந்தாள். டி.வி.யில் செய்தி வாசிக்க ஆரம்பித்தார்கள்.

"அவன் இன்னும் வர்ல?"

"இல்லீங்க" என்று சொல்லிவிட்டு, அம்மா அவசர அவசரமாக வாசல் பக்கம் வந்தாள். அவன் தலைகுனிந்தபடி வந்து கொண்டிருந்தான். அவள் சுற்றும் முற்றும் பார்த்தாள். சைக்கிளைக் காணோம்.

"சுந்தர்... சுந்தர்" என்று அம்மா அவன் பின்னாலேயே வந்தாள். அப்பாவைப் பார்த்ததும் பயந்துபோய் அப்படியே நின்று விட்டான்.

"சைக்கிள் எங்க சுந்தர்?" என்று அம்மா அவன் பக்கமாக வந்தாள்.

"மன்னூர் நாராயணன் வீட்டு வாசல்ல பூட்டி வச்சிட்டு படிச்சிகிட்டு இருந்தேம்மா. அரை மணி நேரம் கழித்து பார்த்தா சைக்கிள் காணோம் அம்மா. அதுல இருந்து எல்லா இடத்திலேயும் தேடிபார்த்துட்டோம்" - அவன் கண்களை கசக்கிக் கொண்டு தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தான்.



அப்பா நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

"நிஜந்தாப்பா. சைக்கிள பூட்டி வச்சிட்டுத் தான் அப்பா படிச்சிக்கிட்டு இருந்தோம். சாவிகூட இருக்குப்பா.." சாவியை முன்னே நீட்டினான்.

அப்பா எட்டி அவன் கையைப்பிடித்து "சைக்கிள் காணாம போனா என்ன? அதுக்குப் போய் எதுக்கு அழற?"

அவன் இன்னும் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்தான்.

அப்பா அவனை இழுத்து அணைத்துக் கொண்டார். அம்மா திகைத்துப் போய் அப்படியே நின்று கொண்டிருந்தாள். ★

# மிச்சமிருக்கும் ஓரிரு தளிர்கள்

- இன்குலாப்

எழுத உட்கார்ந்தேன்
வனங்கள் குறித்து.

நினைவுச் சருகுகளில்
பசிய மரங்கள்,

முழங்கும் அருவியைக்
கிளைகளால் மூடும்
நெடிய மரங்கள்...

மழைபெய்த மறுநாள்
சிலிர்த்த புல்வெளிகள்

பசுமைத் தோழமை
பாராட்டி நின்ற
இளமையில் என்னுடன்
பழகிய மரங்கள்...

கிளிகளுக்கும்
எனக்கும்
விழுது ஊஞ்சல்களுடன்
பந்தல் விரித்த
ஆலமரங்கள்...

ஊருக்கு வெளியே
உட்கார்ந்து படிக்கக்
கிளைகளைத் தாழ்த்திய
இளைய வேம்புகள்...

முள்வேலியில் மட்டும்
நிழல்களை முடக்காது
சாலையிலும் பரப்பும்
பூவரச மரங்கள்...

தந்தையின் சமாதித்
தனிமையில் பேசச்
சருகுகள் உதிர்க்கும்
அரச மரங்கள்...

முடிவறியாத மனவெளி நிறைய
கிளைகள் விரித்து
இலைகள் அசைத்து
ஊர்வலம் வந்தன
தோழமை மரங்கள்...

அசோக இலைகளை
அசைத்த காற்று
மேசையில் இருந்த
தாளையும் அசைத்தது.

சுவரில் பூத்திருந்தது
மரச் சிற்பம் ஒன்று -
ஏதோ ஒரு பூவைப்
பூக்கக் கருதிய
ஏதோ ஒருமரத்தின்
ஏதோ ஒருகிளை!

எந்த மரத்தின்
எலும்புக் கூடு
இந்த மேசையும்
நாற்காலியும்?

சூரியக் கோல்கள்
வெயிலைத் தீட்டும்
இலைகள்...
இங்குத்
தாள்களால் அசையுமோ?

காணாமல் போகும் காடுகள்
எனது
கதவாய் மேசையாய்க்
கொஞ்சம் பதுங்கும்.

மாளிகையில்
உத்தரங்களாகவும்
விரிந்து நீளும்
விருந்து மேசைகளாகவும்
பெரிய இடங்களில்
இன்னும் பதுங்கும்.

பொய்மை விரிக்கும்
செய்தித் தாள்களால்
ஆபாசம் மினுக்கும்
சுவரொட்டிகளாக
அரைக்கப்பட்ட காடுகள்
அலையும்
உலகெங்கும்.

சுள்ளி முறிக்கும்
சன்ன ஒலியையும்
எப்போதும் கேட்கும்
அதிகார வர்க்கம்...

கூட்டுப் பறவைகளின்
கூக்குரலோடு
வீழும் கானகத்தின்
மரண ஓலம்
மலைகளில் முட்டும்
வானம் எட்டும்
காதுக்குக் கேட்காது
கடைசிமட்டும்.

பக்கத்து வீட்டுச் சுவரில்
முட்டியதால்
கிளைகளை இழந்த
அசோகமரத்தின்
இளந்தளிர் ஒன்று
என் சன்னலில் உரசும்.





காகங்களோடும்
கிளிகளோடும்
இலைகள் பேசுவதை
என் செவி கேட்கும்:

"இளைய மானுடம்
தொட்டிலில் ஆடியது
நேற்றைய சகாரீவின்
நெடுங்கிளை ஒன்றில்தான்.

பசிய காடுகள்
இயற்கையின் படைப்பு...
பாலைவனங்கள்
மனிதரின் படைப்பு...

புதைந்து போன
நதிகளுக்குப் பிறகும்...
கருகிப் போன
சோலைகளுக்குப் பின்பும்
மிச்சமிருக்கும்
ஓரிரு தளிர்களைக்
கோடரி வெறியிலிருந்து
காப்பாற்றுங்கள்.

"முதலா முடிவா!
எதுவாய் இருந்தாலும்
நட்பா பகையா
யாராய் இருந்தாலும்
உயிர்த்திருப்பது
உறுதிப்படுவது
காற்றினால்..."
என்று
கடைசியாய்க் கேட்டது! ★

# ஊரக வளர்ச்சிப் பணிகளின் செயலாக்கத்தில், இந்தியாவிலேயே தமிழகத்திற்கு முதலிடம்!

மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களான ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம், இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், மில்லியன் கிணறுகள் திட்டம், வேலை வாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம், ஊரக இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டம் மற்றும் மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம் ஆகிய திட்டங்களை 1997-98ல் சிறப்பான வகையில் தமிழகத்தில் செயல்படுத்தியதன் மூலம் இந்த திட்டங்களுக்கான மத்திய அரசின் இரண்டாவது தவணை நிதி விடுவிப்பை நவம்பர் மற்றும் டிசம்பர் 1997லேயே பெற முடிந்தது. கடந்த காலத்தில் தமிழ்நாட்டிலும் மற்றும் அநேகமாக ஏனைய மாநிலங்களிலும் மத்திய அரசிடமிருந்து இரண்டாவது தவணை நிதி விடுவிப்பு அந்த நிதியாண்டின் கடைசி காலாண்டிலேயே அதாவது ஜனவரி-மார்ச்சில் பெறப்பட்டது. ஆனால் நடப்பு நிதி ஆண்டில் (1997-98ல்) கலைஞர் தலைமையிலான அரசின் திட்டமிட்ட செயல்பாட்டின் காரணமாகத் தமிழக அரசு மத்திய அரசிடமிருந்து தமிழகத்தின் எல்லா மாவட்டங்களுக்கும் இந்த திட்டங்களுக்காக இரண்டாவது தவணைத் தொகையை பெற்றுத்தந்து அகில இந்திய அளவில் முதலிடம் பெற்று சாதனையை அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும், மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆண்டுக்கு ரூ.175.47 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.150.13 கோடியும் மாநில அரசின் ரூ.25.99 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.176.12 கோடி நிதி இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டுள்ளது. இதில் 22.5% தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பணிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 76.61% செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 69.91% செலவிடப்பட்டுள்ளது. மனித சக்தி நாட்கள் குறியீடான 329.38 இலட்சத்தில் 31.12.97 முடிய இதுவரை 249.04 இலட்சம் எட்டப்பட்டுள்ளது.


## இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. 1997-98 ஆண்டுக்கு ரூ.101.37 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.94.71 கோடியும் மாநில அரசின் ரூ.42.80 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.137.51 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 98.35 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 67.53 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஆதிதிராவிடர் களுக்காக 46,046 வீடுகளும் மற்றவர்களுக்காக 8,719 வீடுகளும் ஆக மொத்தம் 54.765 வீடுகள் எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன.

## மில்லியன் கிணறுகள் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ.39.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.31.40 கோடியும், மாநில அரசின் ரூ.5.88 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.37.28 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 56.49 சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதியிருப்பில் 56.16





சதவீதம் செலவிடப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்களுக்காக 6.018 ஜீவன்தாரா கிணறுகளும் மற்றவர்களுக்காக 2.006 ஜீவன்தாரா கிணறுகளும் மற்றும் 577 பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்று செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ. 350.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.216.50 கோடியும், மாநில அரசின் ரூ.39.09 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.255.59 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 57.13 சதவீதமும் நிதியிருப்பில் 71.31 சதவீதமும் செலவிடப்பட்டுள்ளது. மனித சக்தி நாட்கள் குறியீடான 567.38 இலட்சத்தில் 31.12.97 முடிய இதுவரை 372.23 இலட்சம் எட்டப்பட்டுள்ளது

## ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 80 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 20 சதவீதமும் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ.77.86 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.38.50 கோடியும், மாநில அரசின் ரூ.19.72 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.58.22 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 60.81 சதவீதமும் நிதியிருப்பில் 56.71 சதவீதமும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் மொத்தம் 2,04,884 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதில் 50 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களும், 40 சதவீதம் பெண்களும், 3 சதவீதம் உடல் ஊனமுற்றவர்களும் பயன்பெறுவர்.

## இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 50 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 50 சதவீதமும் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ.6.19 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.2.95 கோடியும், மாநில அரசின் ரூ.2.22 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.5.17 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 61.98 சதவீதமும் நிதியிருப்பில் .62.66 சதவீதமும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பயிற்சிக்காக 16,606 இளைஞர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## மத்திய ஊரகத் துப்புரவுத் திட்டம்

இத்திட்டம் மத்திய அரசிடம் மானியமாக 50 சதவீதமும் மாநில அரசிடம் மானியமாக 50 சதவீதமும் பெற்றுச் செயல்படுத்தப்படுகிறது. 1997 - 98 ஆண்டுக்கு ரூ.12.58 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுவரை மத்திய அரசின் ரூ.3.30 கோடியும், மாநில அரசின் ரூ.2,99 கோடியும் சேர்த்து மொத்தம் ரூ.6.29 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது. இதில் 31.12.97 முடிய நிதி ஒதுக்கீட்டில் 36.15 சதவீதமும் நிதியிருப்பில் 64.28 சதவீதமும் செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் 47,916 தனியார் கழிப்பிடங்களும் 808 பள்ளி கழிப்பிடங்களும் சேர்த்து, மொத்தம் 48,724 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.



தமிழ்நாட்டில் மேற்கண்ட திட்டங்களுக்காக மத்திய அரசின் இரண்டாம் தவணைத் தொகை அனுமதி பெற கருத்துருக்கள் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்னரே அனுப்பப்பட்டு அனைத்து மாவட்டங்களுக்கும் முழுமையாக மானியம் பெறப்பட்டுள்ளது. ★

(முதலாம் அட்டைப்படக் கட்டுரை:)



# புதுப் பொலிவு பெற்றுள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம்

பேரறிஞர் அண்ணா நினைவிடம், நீண்ட காலமாகப் பராமரிப்பின்றி இருந்து வந்தது. முதலமைச்சராகக் கலைஞர் அவர்கள், மீண்டும் பொறுப்பேற்றதும், பேரறிஞர் அண்ணா நினைவிடம் மேம்படுத்தப்படுமென்று அறிவித்தார். அதனடிப்படையில் ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில், புதிய வடிவமைப்புப் பணிகளும், மேம்பாட்டுப் பணிகளும் மேற்கொள்ளப் பட்டன.

**சிலை அமைப்பு:**

கடந்த பிப்ரவரி 3ஆம் நாள், பேரறிஞர் அண்ணாவின் நினைவு நாளன்று, புதிதாக வடிவமைக்கப் பட்டுள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் மார்பளவு வெண்கலச் சிலையை முதலமைச்சர் கலைஞர் திறந்து வைத்தார்.

**புதிய வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டுப் பணிகள்:**

1973ஆம் ஆண்டு கட்டப்பட்ட பேரறிஞர் அண்ணா நினைவிடம் ஏற்றமிகு தோற்றம் பெறும் வகையில் புதுப்பிக்கப்படும் என முதலமைச்சர் கலைஞர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவித்திருந்தார்.


அதன்படி கீழ்க்கண்ட பணிகள் தெரிவு செய்யப் பட்டு, தமிழ்நாடு அரசு பொதுப் பணித்துறை கட்டட அமைப்பின் மூலம் 4.6.97 அன்று ரூ.275 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் தொடங்கப்பட்டன.


**முகப்புத் தோரண வாயில்:**

முதலமைச்சர் கலைஞர் அவர்களின் ஆலோசனைக் கேற்ப, முன்பிருந்த யானைத் தந்த வடிவ வளைவு அகற்றப் பட்டு, தற்போது கட்டடக்கலை நுணுக்கத்துடன், அலங்கார வேலைப் பாடுகளுடன் கூடிய மிகப் பிரம்மாண்டமான முகப்புத் தோரண வாயில் அமைக்கப் பட்டுள்ளது.

முகப்புத் தோரண வாயில் நீளம் 77 அடி, அகலம் 8 அடி, உயரம் 50 அடி என்ற அளவிலும், மூன்று வளைவு நுழைவுவாயில்கள் கொண்டதாகவும் கட்டப்பட்டுள்ளது. மைய வளைவு நுழைவுவாயில் 27 அடி அகலம், 30 அடி உயரம் கொண்டதாகும். மைய வளைவு நுழைவு வாயிலின் இருபக்கமும் 8 அடி அகலமும் 20 அடி உயரமும் கொண்ட, சிறிய வளைவு நுழைவுவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

முகப்புத் தோரண வாயில் முழுவதும், அனைத்துப் பக்கங்களும் மெருகேற்றப்பட்ட வெள்ளை நிறச் சலவைக்கற்களால் பொலிவேற்றப்பட்டுள்ளது. மைய வளைவு நுழைவுவாயில் மற்றும் இருபுறமுள்ள சிறிய நுழைவுவாயில்கள், சர அலங்கார விளக்குகளால் (சாண்டிலியர்) அலங்கரிக்கப்பட்டுள்ளன.





**யானைத் தந்த வடிவ வளைவு:**

முகப்பில் முன்பிருந்த யானைத் தந்த வடிவ வளைவு போலவே, தற்போது மைய வளைவு நுழைவு வாயிலுக்கும், மையப் புல்வெளிக்கும் இடையில் அமைக்கப்பட்டுள்ளது.

**மையப் புல்வெளி:**

வடக்கு மற்றும் தெற்குப் பகுதி நடைபாதைகளுக் கிடையே, அழகான மையப் புல்வெளி அமைக்கப் பட்டுள்ளது. இப் புல்வெளியில் 2 அலங்கார நீரூற்றுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விரண்டு நீரூற்றுகளும் நான்கு கட்டடங்களாகத் தண்ணீரை வேகமாகப் பீச்சியடிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இரவு நேரத்தில், வண்ண விளக்குகளின் ஒளியும், பீச்சியடிக்கப்படும் நீரும் சந்திக்கும் காட்சி, இதயத்திற்கு இதமான காட்சி. இப் புல்வெளியில் அறிஞர் அண்ணாவின் தாரக மந்திரமான "கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு" என்ற சொற்கள் பளிங்குக் கற்களில் செதுக்கப்பட்டு, பாடமாகப் பார்வைக்கு வைக்கப் பட்டுள்ளது. மேலும் இப் புல்வெளியில் 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு' என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் பாடலடிகளுக்கு உயிரளித்தாற்போல் சங்கு முழங்கிடும் சிங்காரச் சிலை அமைக்கப்பட்டுள்ளது.

**சலவைக் கற்கள் பதித்து நடைபாதை அமைத்தல்:**

முன்பு வடக்குப் பகுதியில் 7 அடி அகலத்திற்கும், தெற்குப் பகுதியில் 7 அடி அகலத்திற்கும் குறுகிய நடைபாதைகள் இருந்தன. தற்போது 82 அடி அகலத்திற்கு வடக்கு மற்றும் தெற்குப் பக்கங்களை விரிவுபடுத்தி; வெள்ளைச் சலவைக் கற்களால் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது. சமாதியையும் உள்ளடக்கி 75,000 சதுர அடிகள் பரப்பளவில் நடைபாதை அமைக்கப்பட்டுள்ளது.

**எண்கோண மண்டபங்கள் அமைத்தல்:**

எண்கோண வடிவ அலங்கார மண்டபங்கள், மெரு கேற்றப்பட்ட கருங்கற்களால் பொலிவேற்றப்பட்டு, நடைபாதையின் முக்கியமான ஆறு இடங்களில் கட்டப்பட்டுள்ளன. நினைவிடத்திற்குப் பகலில் வெப்பம் வீசிடும் வேளையில் வருவோர் இளைப்பாறும் இடமாகவும்; மழைபெய்யும் வேளையில், வருவோர் பாதுகாப்பு இடமாகவும் பயன்படுத்திடும் நோக்குடன், அழகான வேலைப்பாடுகளுடன் இம் மண்டபங்கள் கட்டப்பட்டுள்ளன.

**அலங்கார வளைவு மண்டபங்கள்:**

பேரறிஞர் அண்ணா அவர்களின் சமாதி அருகில், வடக்குப் பகுதியில் ஓர் அலங்கார வளைவு மண்டபமும், தெற்குப் பகுதியில் ஓர் அலங்கார வளைவு மண்டபமும் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு அலங்கார வளைவு மண்டபமும் 3000 சதுர அடிகள் பரப்பளவில் கட்டப்பட்டுள்ளன. எண்கோண மண்டபங்கள் கட்டப்பட்ட அதே நோக்கத்துடன் இவ்விரண்டு மண்டபங்களும் கட்டப்பட்டுள்ளன.

**சமாதி விரிவுபடுத்தும் பணி:**

முன்பு சமாதியின் நீளம் 12 அடியாகவும், அகலம் 8 அடியாகவும் இருந்தது. தற்போது சமாதியின் நீளம் 16 அடியாகவும், அகலம் 12 அடியாகவும் விரிவுபடுத்தப் பட்ட, மெருகேற்றப்பட்ட கருப்புநிறக் கருங்கற்களால் பொலிவேற்றப்பட்டுள்ளது. சமாதியின் மேற்குப்பக்கத்தில் "எதையும் தாங்கும் இதயம் இங்கே உறங்குகிறது" என்ற சொற்றொடர் மெருகேற்றப்பட்ட பித்தளை எழுத்துக் களால் பொருத்தப்பட்டுள்ளது.

இதைப் போலவே கிழக்குப் பக்கத்தில் ஆங்கிலத்தில்,

**"HERE LIES THE NOBLE HEART WHICH CAN BEAR ANYTHING"**

என்ற சொற்றொடரும், வடக்குப் பகுதியில்,

**பேரறிஞர் அண்ணா**

தோற்றம் : 15-9-1909

மறைவு : 3-2-1969

என்றும், தெற்குப் பகுதியில் ஆங்கிலத்தில்,

**PERARIGNAR ANNA**
**BORN ON : 15-9-1909**
**DIED ON : 3-2-1969**

என்றும் மெருகேற்றப்பட்ட பித்தளையில் ஆன எழுத்துக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

**நினைவுத்தூண்:**

நினைவுத்தூண் நன்கு பருமன் செய்யப்பட்டு, முன்பிருந்த உயரமான 50 அடியிலிருந்து 60 அடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மெருகேற்றப்பட்ட கருப்புநிற, கருங்கற்களால் பொலிவேற்றப்பட்டுள்ளது. நினைவுத் தூணின் உச்சியில் அமைக்கப்பட்டுள்ள மின்விளக்கு, இரவில் நிலா வானில் மிதப்பதுபோல் அற்புதமாய்க் காட்சியளிக்கிறது. நினைவுத்தூணின் பின்புற வடிவ அமைப்பு பெரிதாக்கப்பட்டு, மெருகேற்றப்பட்ட சிவப்பு நிறக் கருங்கற்களால் பொலிவேற்றப்பட்டுள்ளது.

**அணையா விளக்கு:**

அலங்கார எண்கோண வடிவ அணையா விளக்கு அமைப்பு. மெருகேற்றப்பட்ட கறுப்புநிறக் கருங்கற்களால் பொலிவேற்றப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

**கைப்பிடித் தடுப்பு:**

மனிதச் சங்கிலி போன்ற தோற்ற முடைய. பித்தளைப் பந்துகளுடன் கூடிய எவர்சில்வர் கைப்பிடித் தடுப்பு நடை பாதையின் இருமருங்கிலும் மிகுந்த அழகுடன் அமைக்கப்பட்டுள்ளது.

**தொழில்நுட்ப மிக்க ஒலி அமைப்பு:**

பேரறிஞர் அண்ணா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் ஒலிநாடாக்களில் பதிவு செய்யப்பட்டு, மிக நவீன தொழில்நுட்பமிக்க ஒலி சாதனங்கள் மூலம் ஒலிபரப்பப்படுகின்றது.

**பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம்:**


நடைபாதையின் வடக்குப் பக்கத்தில் 330 ச.மீ. பரப்பளவில் புதிய அருங் காட்சியகம், வெள்ளைச் சலவைக்கற்கள் பதிக்கப் பட்டுள்ள தரையுடன் கட்டப் பட்டுள்ளது. பேரறிஞர் அண்ணா அவர்கள் பயன்படுத்திய பொருட்கள், பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நினைவுப்பரிசாக வழங்கப்பட்ட பொருட்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் வாழ்க்கையில் மிகமுக்கியத் தொடர்புடைய புகைப் படங்கள் முதலியவை புதிய அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்படவுள்ளன.

**மின் வசதி அமைக்கும் பணி:**

பேரறிஞர் அண்ணா நினைவிடத்தின் முகப்புத் தோரணவாயில் வெளிப்புறப்பகுதி முதல், நடை பாதையின் இருமருங்கிலும், மையப் புல்வெளியிலும், எண்கோண மண்டபங்களிலும், அலங்கார வளைவு மண்டபங்களிலும், நினைவிடத்திலும், நினைவுத்தூண் மற்றும் புல்வெளிப் பகுதியிலும் நவீன மின் விளக்குகள் சீரிய முறையில் ஒளிவீசிடும் வகையில் பொருத்தப்பட்டுள்ளன.

**வியக்கத்தக்க கிரானைட் கல் (Granite Stone) வேலைப்பாடுகள்:**

ஒரே சிவப்பு நிறக் கிரானைட் கல்லில் செதுக்கப் பட்டுள்ள மிகப்பெரிய ஆப்பிள் பழம்; நுனி சீவப்பட்ட மூங்கில் வடிவ கிரானைட் வேலைப்பாடு (பல வண்ணங்களில்) மற்றும் மரத்தின் நுனி வெட்டப்பட்டு, கிளைகள் தரிக்கப்பட்ட அடி மரத்தின் வடிவில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ள கிரானைட் மரம் ஆகியவைகள் வனப்புடன் காட்சிக்கு வைக்கப் பட்டுள்ளன.



**கடற்கரை வரையில் புல்வெளி**

அண்ணா நினைவிடத்திற்கும் கடற்கரைக்கும் இடையேயுள்ள மணற்பரப்பில், புதிதாக மிப்பெரிய புல்வெளி அமைக்கப்படவுள்ளது. தற்போது புதுவடிமைப்புடன் அமைந்துள்ள, பேரறிஞர் அண்ணா நினைவிட முகப்புத் தோரணவாயிலில் நுழைந்தவுடன், வங்கக் கடலோரம் துயிலும் பேரறிஞர் அண்ணாவின் சமாதியையும் அதோடு வங்கக் கடல் அலைகளையும் காண்கின்ற வகையில் இப்புதிய வடிவமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா நினைவிடம் உலகச் சுற்றுலா வரைபடத்தில் இடம்பெறும் வகையில் புதுப்பொலிவுடன் கண்கவர் இடமாகக் காட்சியளிக்கும் என்பது திண்ணமே! ★

# தமிழர் நேசன்

முனைவர் இராம. குருநாதன்

இந்தியா விடுதலை அடைவதற்கு முன் வெளிவந்து கொண்டிருந்த தமிழ் இதழ்கள் பல. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் தம் கருத்துகளைத் தமிழ் நாட்டினர்க்கும் தமிழ் மொழிக்கும் வழங்கியுள்ளன. ஆங்கில ஆட்சியின் அடக்குமுறையும், பத்திரிகைச் சட்டங்களும் இதழ் உலகை அச்சுறுத்திய காலம் அன்றைய காலமாகும். அத்தகு கால கட்டத்தில் தமிழ்ப் பத்திரிகைகள் விடுதலை வேட்கையைத் தமிழரிடம் ஊட்டி வளர்த்தன. இதற்கிடையே சில இதழ்கள் தமிழ் மக்களின் முன்னேற்றத்திற்கும், மொழியின் வளர்ச்சிக்கும் பாடுபட்டன. இத்தகைய நிலையில், தமிழ்மக்களுக்கு அறிவியலில் விழிப்புணர்ச்சி வேண்டும் என்று கருதி வெளியிடப்பெற்ற இதழ் 'தமிழர் நேசன்' என்னும் மாத இதழாகும்.



ஆங்கிலக் கல்வி மீது அளவிலாத பற்றுக்கொண்ட தமிழர் சிலர், ஆங்கில மொழியில் ஈடுபாடு காட்டியதோடு அம்மொழியில் எழுதினாலும், பேசினாலுமே பெருமை என்று எண்ணிய கால கட்டத்தில் வெளிவந்தது இந்த இதழ். இந்தக் கால கட்டத்தில் ஆங்கிலம் நன்கறிந்த சிலர், தமிழர் மீது மிகுந்த அக்கறை கொண்டு, அவர்கள் மேன்மை அடையப் பரந்த கல்வியறிவு வேண்டும் என நினைத்தனர். தமிழர் மேனாட்டாரைப் போல் சிறக்க வேண்டுமானால் பல துறைகளிலும் அறிவு பெற்றவராய்த் திகழவேண்டும் என்ற தீவிரச் சிந்தனை அரும்பியது. 'நவீன அறிவு என்பது மேல் நாட்டு அறிவையே குறிப்பதாயிருந்தது'. இச் சிந்தனையின் விளைவாகத் 'தமிழர் கல்விச் சங்கம்' என்ற சங்கம் உருவானது. மேனாட்டு அறிவியல் துறைகள் பலவற்றையும் தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் என்ற அக்கறையோடு தொடங்கப்பட்டது இச்சங்கம்.

இச்சங்கத்தில் தீவிரம் காட்டியோருள் அ.மாதவய்யாவும், ஜஸ்டிஸ் சதாசிவ அய்யரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். இச்சங்கத்தின் தலைவராக சதாசிவ அய்யர் இருந்தார். இச்சங்கத்தினின்றும் வெளிவந்த இதழே 'தமிழர் நேசன்' ஆகும். தமிழர் கல்விச் சங்கத்துப் பத்திரிகை என்ற முத்திரையுடன் 1917ஆம் ஆண்டு இந்த இதழ் தொடங்கப்பெற்றது. அ.மாதவய்யா இதன் ஆசிரியராயிருந்தார்.

### இதழின் நோக்கம்

அறிவு வேட்கையும் தேடலுமே இப்பத்திரிகையின் ஊடுபொருள். தமிழர் அறிவுத் தாகம் பெறவேண்டும் என்ற எண்ணத்தைக் காட்டுவதற்கொப்ப இவ்விதழ்,

'தொட்டனைத் தூறும் மணற்கேணி, மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு'

- என்ற குறளை முகப்பில் வெளியிட்டது. முகப்பின் முகவரியான இக்குறள் இவ்விதழின் நோக்கை இனங்காட்டவல்லது.

தமிழர் நேசன், தமிழர் கல்விச் சங்கத்தின் கூட்டு முயற்சியாகும்; சங்க உறுப்பினர் சிலரின் பங்குத் தொகையில் வெளிவந்ததாகும். முதல் இதழின் முன்னுரையில் பத்திரிகையின் நோக்கம் வெளியிடப்பெற்றுள்ளது.

தமிழ்ப்பத்திரிகைகள், புஸ்தகங்கள்,
பிரசங்கங்கள் முதலியவற்றின் மூலமாய்
இங்கிலீஸ் தெரியாத
தமிழ்நாட்டாருக்குத் தற்காலத்து
நவீன அறிவைப் பரவச் செய்வதுதான்
நமது சங்கத்தின் நோக்கம்.

- என்ற கருத்து, மேனாட்டில் வளர்ந்து வந்த அறிவியல் தொடர்பான சிந்தனைகளை ஆங்கிலம் அறியாதோரும் ஓரளவே அறிந்தோரும் பெறவேண்டும் என்பதையே தெரிவிக்கிறது.

---

'இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள்' என்னும் பொருள் பற்றி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறையும், டாக்டர் மா. இராசமாணிக்கனார் இதழியல் ஆய்வு மையமும் இணைந்து இரு நாட்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் மொழித் துறையில் நடத்திய கருத்தரங்கில் படிக்கப் பெற்ற கட்டுரை.

---

இப் பத்திரிகையின் ஆசிரியரான அ.மாதவய்யா 'தமிழர் நேசனை'த் தொடங்குவதற்கு முன்னரே, சில பத்திரிகைகளில் எழுதிவந்தவர். தமிழ் மக்களின் மீது சமூக அக்கறை கொண்டவர். சீர்திருத்தம் விரும்பியவர். தமிழர், மேல்நாட்டுக் கலை, இலக்கியம், அறிவியல், தத்துவம் முதலானவற்றைக் கற்றுச் சிறக்கவேண்டும் என்ற ஆர்வம் மிகுந்தவர். வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் தமிழருக்கு மொழிபெயர்ப்புப் படைப்புகளைத் தந்து மகிழ்ந்தவர். 'மெத்த கலைகள் வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை' - என்ற பாரதியின் கூற்றை ஏற்று அக்கவலையை மாற்ற எண்ணியவர். மேனாட்டுக் கலைகளைத் தமிழில் தருவதோடு, மற்றவரையும் அப்பணியில் ஊக்கியவர் என்பதனைத் "தமிழர் நேசனால்' உணர்ந்து கொள்ளலாம்.

1902இல், மாதவய்யா தாம் தமிழில் மொழிபெயர்த்த 'ஒத்தொல்லோ' நாடகத்தின் ஆங்கில முன்னுரையில் கூறியிருப்பது சிந்திக்கத்தக்கது. அதன் தமிழாக்கம் வருமாறு:

"மிகச்சிறந்த கவிஞரின் இச்சீரிய நாடகம் ஒவ்வொரு தமிழர் இல்லங்களைச் சென்றடையும். எளியேனின் இத்தகு முயற்சி இதுபோன்ற துறைகளில் முன்னோடியாக விளங்கும். பிற சான்றோரும் இதில் ஈடுபட வழிவகுக்கும். இது தமிழ் இலக்கியத்தை உயர்த்துவதோடு தமிழர் இல்லங்களையும் தழைப்பிக்கச் செய்வதாகும்".

- எனக் குறிப்பிட்டுள்ளமை - அவர் தமிழ் மொழி மீதும், தமிழர் மீதும் கொண்டிருந்த அக்கறையைக் காட்டுகிறது. இத்தகைய சூழ்நிலையில்தான் தமிழர் நேசன் பற்றிய சிந்தனை அவரிடம் மிளிர்ந்தது. இதற்கான அடையாளங்களை அப் பத்திரிகையிலிருந்து உணரமுடிகிறது.

மாதவய்யாவின் மற்றொரு பணியையும் இங்குக் குறிப்பிட்டாக வேண்டும். எழுத்தின் வழியே சமூகத்தைச் சீர்திருத்தவேண்டும் என்றெண்ணிய அவர், புதினங்களைப் படைத்தார். 1892இல், 'விவேக சிந்தாமணி' என்ற இதழை சி.வி.சாமிநாதய்யர் நடத்தி வந்தார். அந்த இதழில் 'சாவித்திரியின் சரிதை அல்லது ஒரு பிராமணப் பெண்ணின் சுயசரிதை' என்ற கதையை மாதவய்யா தொடர்கதையாக எழுதிவந்தார். அது பிராமண விதவைப் பெண் ஒருத்தியின் கதை. அதில் சீர்திருத்தக் கருத்தை அவள் வழியாக உணர்த்தினார். அதன் காரணமாக சாமிநாத அய்யருக்கும் மாதவய்யாவிற்கும் கருத்து முரண் தோன்றவே, மாதவய்யா அப்பத்திரிகையில் எழுதிவந்ததை நிறுத்திக் கொண்டார். அதற்குப் பிறகுதான் தமிழர் நேசனைத் தொடங்கினார்.

மாதவய்யா பிறப்பால் அந்தணராயினும் சமூகப்புரட்சியை விரும்பியுள்ளார். குழந்தை மணத்தை எதிர்த்தும், விதவை மறுமணத்தை ஆதரித்தும் குரல் கொடுத்தவர். 'முத்து மீனாட்சி' என்ற இவரது புதினம் (விவேக சிந்தாமணியில் வெளிவந்த சாவித்திரி கதை பெயர் மாற்றம் பெற்று 1903இல் நூலாக வந்தது) விதவை மறுமணம் பற்றிய சிந்தனையில் எழுந்ததாகும். விதவையர் சிக்கலைக் கருப்பொருளாக்கி விதவை மறுமணமே சிக்கலுக்குத் தீர்வாகும் என்ற கண்ணோட்டத்தில் எழுதப்பெற்ற இப்புதினத்தை, இந்திய மொழிகளிலேயே இந்த மையக்கருத்துக் கொண்ட முதல் நாவல் இதுதான் என்று சுட்டிக்காட்டுகிறார் இரா.தண்டாயுதம். இத்தகைய சமூகப்பார்வையை எண்ணியே நா.வானமாமலை, 'புரட்சிகரமான மனித நேயக் கொள்கையின் தந்தை' என மாதவய்யாவை உணர்ச்சிபடப் பாராட்டியுள்ளார்.

> **வ**ண்டு, தேனீ, குளவி ஆகியவை தம் எதிரிகளை தம் கொடுக்குகளினால் ஒருமுறை தான் கொட்டமுடியும். ஏனென்றால் கொட்டியவுடன் கொடுக்கு உடைந்துவிடும். கொட்டும் வண்டோ, தேனியோ, குளவியோ கொட்டிய பின் இறந்துவிடுகிறது!

## விதவா மணத்திற்கு ஆதரவு

சமுதாய அக்கறை கொண்டவர் மாதவய்யா என்பதனைத் 'தமிழ்நேசனில்' சில பகுதிகளிலிருந்து காணமுடிகிறது. குழந்தை மணத்தால் விளையும் விதவையர் நிலையைப் புள்ளி விவரங்களோடு முதல் இதழிலேயே எடுத்துக்காட்டியுள்ளார்.

'ஒருவயது நிறையாத பெண்சிசுக்களுக்குள் முப்பத்தோரு விதவைகளும், ஒன்றுக்குமேல் இரண்டு வயதுக்குள் முப்பத்து நான்கு விதவைகளும், மூன்றுக்கு மேல் நான்கு வயதுக்குள் நூற்று நாற்பது விதவைகளும்; நான்குக்கு மேல் ஐந்து வயதுக்குள் முந்நூற்று எண்பத்து மூன்று விதவைகளும், பிற வயதுகளில் உள்ளோருமாகச் சேர்த்து மொத்தம் 23,068 விதவைகளும் 1911 ஜனசங்கப்படி நம்முள் இருக்கின்றனர்...இது எவ்வளவு பிரஜா நஷ்டம்?

(தமிழர் நேசன், தொகுதி-1, பகுதி-1, ப.7)

பெண்கள் பலரும் இளமை மணத்தினால் விதவை அடைய நேர்ந்ததெண்ணித் தன் வருத்தத்தையும் இரக்கத்தையும் இவ்வாறு புலப்படுத்தியுள்ளார். மாதவய்யா இதேபோல் சமூக நலன் பற்றிய சிந்தனையில் பண்பாட்டுக் கவலையையும் தெரிவிக்கிறது. சாதிக்கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவராக விளங்கினார் அவர்.

'நமது சென்னை மாகாணத்தில் மட்டும் 479 வெவ்வேறு சாதிகள் இருக்கின்றனவாம். மொத்தமுள்ள 160 இலட்சம் தமிழ்மக்களுக்குக்

காலபாகத்தாரைத் தீண்டாச் சாதிகளாக நாம் விலக்கிவைத்து அவர்களை மிருகங்களிலும் தாழ்வாக நடத்திவர . அது காரணமாய் . அவர்கள் அந்நியரிடம் அடைக்கலம் புகுந்தும், அந்நிய மதங்களையும் ஆசாரங்களையும் தழுவியும் ஊரைவிட்டோடியும் படுவது கஷ்ட நிஷ்டூரங்கள்'.

(ப.6)

- எனத் தெரிவித்திருப்பது, அன்று நிலவியிருந்த சாதிப்பிரிவினைக் கொடுமையைப் பற்றிய கவலையாகும். இவ்வாறு ஆசிரியர் சுட்டியிருப்பது அவருடைய உள்ளத்தைப் புரிய வைப்பதோடு, தமிழர் நலனில் கொண்ட அக்கறையையும் உணர்த்தி நிற்கிறது. மாதவய்யாவின் இத்தகு சமுதாய அக்கறையைக் காட்டுதற்குரிய களமாகத் 'தமிழர் நேசனை' கருதமுடியவில்லை. காரணம் அதன் அடிப்படை நோக்கம் வேறு. எளிய தமிழில் மேல்நாட்டாரின் பலதுறைக் கட்டுரைகளை மொழிபெயர்த்துத் தருவதையே சங்கத்தினர் விரும்பியுள்ளனர்.

'மேல்நாட்டாரின் நவீன அறிவைத் தமிழ் மக்களுக்கு ஊட்டும் பொருட்டு மனித வாழ்க்கைக்கு எவ்வாறேனும் பயன்படக்கூடிய பல்வேறு சாஸ்திரங்களின் உண்மைகளையும் துணிவுகளையும் விவரணங்களையும் பற்றிய அந்தந்தக் கலைகளைக் கற்றுத் தேர்ந்த மேதாவியார் யாவருக்கும் தெளிவாய்ப் பொருள்படும்படி அறிய எளிய நடையில் எழுதும் வியாசங்கள் நமது சங்க முயற்சியால் இப்பத்திரிகையில் எழுதப்படும்'.

- என்ற கருத்தை முன்வைத்து இப்பத்திரிகை வெளிவந்ததால் சமூகம் தொடர்பான கட்டுரைகளை மிகுதியும் வெளியிட அதில் வாய்ப்பில்லை. கதைகள் வழிச் சமூகச் சிந்தனைகளை அவ்வப்போது வெளிப்படுத்தியதையும் இங்கு நினைவு கூரலாம்.

இப்பத்திரிகையின் அடிப்படை நோக்கங்களைக் கீழ்க்கண்ட பகுதி உணர்த்துகிறது:

'அறியாமையை நீக்கிப் போலிக் கொள்கைகளையும் எண்ணங்களையும் சீர்திருத்த இதுகாறும் பெரியோர்களால் சித்தாந்தம் செய்யப்பட்டுள்ள தெள்ளறிவை நமது நாட்டுப் பொதுஜனங்களுக்குப் புகட்டி உழைப்பதுடனும் அன்றி, பல வழிகளாலும் அவர்கள் புத்தியைக் கூரியதாக்கி, மனத்தையும் சித்தவிருத்தியைக் கூட்டியும் விசாலப்படுத்த முயலும். இதுவுமன்றி தேசாபிமானத்தை வளர்த்துத் தமிழறிவைப் பெருக்கி அம்மொழியில் ருசியை உண்டாக்கி மனத்தை நல்ல வழியில் செலுத்தி மகிழச் செய்யத்தக்க பெரியோர்களின் சரித்திரங்களையும் தமிழிலும் இதர பாஷைகளிலும் உள்ள அருமை பெருமை விஷயங்களை எடுத்தோதும் உரைகளும் கதைகளும் பாடல்களும் அப்போதைக்கப்போது இதில் வெளிவரும்.

(தமிழர் நேசன்:1/1 ப.8)

- என்ற கருத்து இப்பத்திரிகை நோக்கத்தைத் தெளிவுபடுத்துவதாய் உள்ளது.

மேற்கூறிய அடிப்படை நோக்கங்களை அணுகும்போது 'தமிழர் நேசனின்' கொள்கையை இரண்டாகப் பகுக்க முடிகிறது.

1. மேனாட்டாரின் அறிவியல் மற்றும் கலை இலக்கியம் வரலாறு தொடர்பான செய்திகளை அறிமுகப்படுத்துதல்.

2. தமிழ்/தமிழர் ஆக்கங்களுக்கு அவற்றை உளப்படுத்துதல்.

- என்ற வகைகளில் வரையறுக்கலாம்.

இப்பத்திரிகையின் அகக்கட்டமைப்பை நோக்க, இப்பகுப்பு வலிமை பெறுகிறது. அறிவியலோடு சார்ந்த இயைபியல், வேதியல், உயிரியல், பயிரியல், நிலவியல், புவியியல் முதலானவை பற்றி விளக்கமாகவும் விரிவாகவும் கட்டுரைகள் இதில் வெளியிடப்பெற்றுள்ளன. அறிவியல் கட்டுரைகளைத் தாங்கிவந்த இதழ்களுக்கு இதுவே முன்னோடியாகும்.

இதழ் பற்றிய விளக்கம் -

முதல் ஐந்து தொகுதிகளில் இடம்பெற்ற கட்டுரைகள் மிகுதியும் அறிவியல் தொடர்பானவையே. தமிழர், அறிவியல் கல்வி பெற வேண்டும் என்ற ஆழமான சிந்தனையையும் அதற்கேற்ற முனைப்பையும் எல்லாக் கட்டுரைகளிலும் காணமுடிகிறது.

இதழின் புறக்கட்டமைப்பு படிக்கக்கூடிதாய் உள்ளது. இவ்விதழின் அளவு 10.5 X 16.5 சி.எம். என்ற வகையில் அமைந்துள்ளது. எழுத்துக்கள் 10 புள்ளிகளில் படிப்பதற்கு ஏற்றவகையில் அச்சிடப்பெற்றுள்ளன. அட்டைப் படங்கள் கிடையா, விளம்பரங்கள் பெரும்பான்மையும் இடம் பெறவில்லை. தொகுதி முழுவதற்கும் பக்க எண்கள் தொடர் எண்களாக இடம் பெற்றுள்ளன. தொகுதி-1, பகுதி-1 என்றளவில் இதழ் கணக்கிடப்பெற்றுள்ளது.

பொருளடக்கம் என்ற பகுதியில் கட்டுரைகள் வகைப்படுத்தப்பெறவில்லை. மூன்றாம் தொகுதியிலிருந்து வகைப்படுத்தப்பெற்ற இயல்களில்

இன்றைய சமுதாயம் வழுக்குநிலம் போன்றது; அதைச் செம்மைப்படுத்துவதே உண்மையான சமூக சேவை!

- அறிஞர் அண்ணா

கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. ஒலிநூல், உயிர்நூல், தாவரநூல், தகவல் நூல், வான சாஸ்திரம், வைத்திய சாஸ்திரம், ஜீவ சரிதை, வரலாற்று நூல் முதலிய தனித்தனி இயல்களில் அவ்வியல் தொடர்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இப்பத்திரிகைக்குத் தலையங்கம் கிடையாது. சில இதழ்களில் மட்டும் முகப்புப் பக்கத்தில் தமிழர் கல்விச் சங்கச் செய்திகளோ பிறவோ இடம் பெற்றதுண்டு.

பத்திரிகை அலுவலகம் இரண்டாம் ஆண்டிலிருந்து புதிய முகவரியில் இயங்கி வந்தது. 3, சித்திரைக் குளத்தெரு, மயிலை என்ற முகவரியிலிருந்து இதழ் வெளிவரத் தொடங்கியது. இதன் தனிப்பிரதி விலை அப்போது 0.8.0 அணா. சந்தா உறுப்பினர்க்கு 2.00 ரூபாய், மற்றவர்க்கு 3.00 ரூபாய், அயல் நாட்டார்க்கு 3.12.0 என அதன் சந்தா விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இப்படிச் சந்தா தொகை இருந்தும் பத்திரிகை நடத்துதற்குக் கடினமாயிருந்துள்ளது. நல்ல தரமான பத்திரிகை நடத்துவது என்பது கையையும் கடிக்கும், கழுத்தையும் நெறிக்கும். இதனை நன்குணர்ந்த மாதவய்யா, இரண்டாம் தொகுதியில் இதுபற்றி 'நமது பத்திரிகை' என்ற தலைப்பில் இப்பத்திரிகைக்காகப் பணஉதவி செய்து வந்த நண்பர்களைப் போற்றி எழுதியுள்ளார். அதே சமயம் -

*'யாமோ முதலில் எதிர்பார்த்த
அளவு தமிழ்மக்களின் ஆதர்வைப்
பெற்றிலேம்'*

- என்று வருந்திக்கூறியிருப்பதும் எண்ணுதற்குரியது. பத்திரிகை வெளிவந்த இரண்டாம் ஆண்டு சங்கத் தலைவர் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர் தலைமையில் 21.3.1918 அன்று இப்பத்திரிகை வளர்ச்சி குறித்து ஒரு கூட்டம் நிகழ்ந்தது. உ.வே.சா., பவானந்தம் பிள்ளை, கஸ்தூரி ரங்கன், சீனிவாச ஐயங்கார், ஏ.வி.சுப்பிரமணிய ஐயர் முதலியோர் இப்பத்திரிகையின் எதிர்காலம் குறித்து விவாதித்துள்ளார். அக்கூட்ட முடிவில் திரு.வி.க. இப்பத்திரிகையின் தொண்டினைப் பாராட்டிப் பேசியுள்ளார். இதற்கிடையே 'விவாகதோயம்' என்னும் பத்திரிகையின் ஆசிரியர் பாலாம்பாள் தமிழர் நேசனுக்கான பங்குத்தொகை பற்றிக் குறிப்பிட்டுப் பேசவும், ஒரு பங்குத் தொகை ரூ.பத்து எனக் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது. சர்.சி.பி.இராமசாமி ஐயர் ரூ.நூறு கொடுத்துப் பத்துப் பங்குகள் வாங்கியதாகத் தெரிகிறது.

இத்தகைய கூட்டு முயற்சியால், 'தமிழர் நேசன்' செயல்படத் தொடங்கியது. பத்திரிகை நடத்துவதில் இச்சங்கம் இலாபம் பார்க்கவில்லை. பயனை மட்டுமே கருதிப் பணி செய்தது. தரமான அறிவியல் தகவல்களை மக்கள் அறிய வேண்டி விசாரிப்புக் குழு ஒன்றை நடத்தியிருக்கிறது. எம்.சி.டி.எம். முத்தையா செட்டியார் போன்றோர், இப்பத்திரிகை தொடர்ந்து வெளிவர நிதி உதவி அளித்துள்ளார்.

**பறவைகளில் நீரை உறிஞ்சிக் குடிப்பது புறா மட்டுமே. மற்ற பறவைகள் அலகால் நீரை எடுத்து பின் அண்ணாந்து தான் நீரை வயிற்றுக்குள் செலுத்தும்.**

ஆங்கிலம் நன்கு அறிந்தோர் இப்பத்திரிகையில் கட்டுரை எழுதிவந்துள்ளனர். அவர்களில் ஏகாம்பரநாதய்யர், ஏ.சி.வீரராகவ ஐயங்கார், டி.ஒய்.நாராயண அய்யர், அ.நந்தபத்மராவ், வி.ஏ.சுப்பிரமணிய முதலியார், டி.எஸ்.சுப்பிரமணிய ஐயர், டி.எஸ்.இராசகோபால் ஐயர், பெ.நா.அப்புசாமி, பவானந்தம் பிள்ளை, கா.சுப்பிரமணிய பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

'தமிழர் நேசன்' பத்திரிகைக்கே உரிய பெருமையாக அறிவியல் கட்டுரைகள் இடம் பெற்றதைச் சுட்டிக் காட்டவேண்டியுள்ளது. அத்தகைய கட்டுரைகள் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்பெற்றுள்ளன. எல்லோரும் விளங்கிக் கொள்வதற்குரிய நடையை மிகுந்த முயற்சியோடு மேற்கொண்டுள்ளமை புலனாகிறது.


'பிரகிருதியில் மனிதனுடைய ஸ்தானம்' (ஏகாம்பரநாத ஐயர்) என்ற கட்டுரை புவியியலையும் பரிணாம வளர்ச்சியையும் விளக்குகிறது. இது தொடர்க்கட்டுரையாக வெளிவந்தது. 'பதார்த்த குணாதிசயக் குறிப்புகள்' (எம்.சி.எல்.அநந்தபத்மநாப ராவ்) என்ற இயற்பியல் தொடர்பான தொடர்க்கட்டுரை விளக்கப்படங்களுடனும், விரிவான செய்திகளோடும் இடம் பெற்றிருந்தது. 'வானம் உறங்கும்', 'கடலின் களஞ்சியம்' (பெ.நா.அப்புசாமி) முறையே கோளியல், கடலியல் பற்றிய கட்டுரைகளாகும்.


உடல்தூய்மை, சுற்றுப்புறத்தூய்மை ஆகியன குறித்து அவ்வப்போது கட்டுரைகள் சில வெளிவந்தன. இவ்வகையில், எழுந்திருத்தல், தந்த சுத்தி, அழுக்கும் அதனால் வரும் கேடுகளும் ஆகிய கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன. 'இருதய இயந்திரம்' என்ற கட்டுரை, இதயம் செயல்படும் முறையை நன்கு விளக்கும் மருத்துவக் கட்டுரையாகும். நோய்கள் குறித்த சில அடிப்படையான செய்திகளை மக்கள் அறிதல் இன்றியமையாதது என்ற கண்ணோட்டத்தில் எழுதப்பெற்றவை வைசூரி, மஞ்சள் காமாலை போன்ற கட்டுரைகளாகும்.


உயிரியல் கட்டுரைகளான தேனீ, வண்டு, தத்துக்கிளி போன்றவை அறிவியல் சிந்தனைகளோடு வெளிவந்தன.

... அடுத்த இதழில் முடியும்.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : ரா. சிவகுமார், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, தமிழ்நாடு அரசு.
சென்னை-தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை - 600 002. தொலைபேசி: 568926, 568927, 564906







## நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது. அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :

**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

தமிழரசு

பதிவு எண்: M. [illegible]
Licence No.TN/MS(C)/PP-23

